

டாக்டர் ராஷ் பிஹாரி கோஷ்.

Sri Vani Vilas Press, Srirangam.




வா. 5. பிலவங்கஸூ கார்த்திகைமீ ந. 26.

# திருவானைக்கா மான்மியம்.

திருவிளங்கிய உலகத்திலுள்ளவர்க்கெல்லாம் இன்றியமையாத மேகங்களைத் தருதற்குக் காரணமாகிய யாகமே வடிவமாக விளங்குவது நைமிசாரணியமென்னும் புண்ணிய க்ஷேத்திரம். அங்கேயுள்ள மகரிஷிகள் சரீரமுழுதும் வெண்மையான விபூதியணிந்து விளங்குகின்ற தோற்றமானது, அவர்கள் வேள்வியின்கண் தேவர்களுக்கு அவிர்ப்பாகத்தைக் கொடுத்தலாலுண்டாகிற பெரும்புகழானது தம்மையும் சூழ்ந்துகொண்டு பிரகாசிக்கிற அழகை விளக்குகின்றது. அவர்கள், ஆத்திமாலையணிந்த பரசிவனுடைய கண்மணியையே அணியாகத் தரித்துக்கொண்டிருந்ததானது, அவர்களுக்கு உலகத்

நைமிசப்படலம்.

தில் வேறு பற்றில்லாதிருந்ததை விளக்கியது. அவ்விடத்தில் சிங்கம், யானை, மான், புலி முதலிய விலங்கினங்கள் தம்பகை நீங்கி இடங்கடோறும் தங்கியிருப்பது, எம்பிரானுடைய திருவடி நீழலைத் தாங்களும் அடையவேண்டி ஐம்பொறிகளையடக்கித் தவஞ்செய்வனபோல் விளங்கியது. பரமசிவனுக்கு அர்ச்சனை செய்து நீக்கப்பட்ட நிர்மாலியங்கள் வெயிலின்கண் வாடிக்கிடந்ததானது, மன்மதனால் விடுக்கப்பெற்ற ஐங்கணைகள் அவ்விடத்து வசிக்கும் மாதவரிடத்தில் அணுகுதற்கஞ்சித்துன்பத்தோடு வருந்துஞ் செயலை ஒத்தது. சில தவசிகள் மான்குட்டிகளைத் தம் கையினால் தடவிப் பசும்புல்கொடுத்து ஆதரிக்கும் தன்மையானது, மானேந்திய பரமசிவனுடைய சாரூப்பியத்தைத் தாங்களடையும்போது, தம்கையிலே ஏந்தப்படுமென்று எண்ணி அன்புபாராட்டி வளர்த்ததை ஒத்தது. சொல்லியதைச் சொல்லியபடியே சொல்லும் கிளிப்பிள்ளைகள் போலப் பிராமணச்சிறுவர் ஆசிரியர் சொல்லியதைச் சொல்லியபடியே வேதாத்தியயனம் செய்கின்ற சப்தமானது ஒருபக்கம் நிரம்பியிருந்தது. அந்தணர்கள் வேத மந்திரங்களைச் சொல்லிச் சிறந்த வேள்விகளை வளர்த்தல் ஓர் சார் நிகழும். சிவபூசையை விதிப்படியாற்றி, அக்கினி காரியங்களைச் செய்து, மிக்க அன்போடு செய்யப்படும் அதிதிபூசை மற்றோர்பால் நிகழும். இன்ன தன்மையையுடையதான நைமிசாரணியத்தின்கண் பரமசிவனுடைய திருவடிகளைத்தொழும் அன்புடையவரும் பதினெண்புராணங்களையும் ஐயந்திரிபில்லாமல் உணர்ந்தவருமான சூத மாமுனிவர் எழுந்தருளினர். அவர் அவ்வனத்தின் வனப்பைக்கண்டு மனத்தின்கண் வியப்படைந்தனர். அங்கு வசித்த தபோதனரெல்லாம் அவர் வருகையையறிந்து எதிர் சென்று, "தேவரீர் இங்கு எழுந்தருளப்பெற்றமையால்

நாங்கள் உய்ந்தோம், உய்ந்தோம்," என்று கூறி, மிக்க செல்வத்தைக்கண்ட தரித்திரரைப்போல ஆவலோடு செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து, ஆசனம் அளித்து அதன்கண் இருக்கச்செய்து, குற்றமில்லாத நட்போடு பொருந்திய சில வார்த்தைகள் சொல்வாராயினர். "முனிசிரேஷ்டரே! கற்பகவிருக்ஷமும், காமதேனுவும், சிந்தாமணியும், சங்கநிதி, பதுமநிதிகளுமாகிய ஐந்தும் வறியவரிடத்தில் தாமே எளிதில் வந்தாற்போலத் தேவரீர் அன்போடு இங்கு எழுந்தருளினமையின். கடவுளது அருளானது அடியேங்களிடத்திற் சார்வதற்குச்சந்தேகமில்லை. பாவங்களையெல்லாம் போக்கும் பதினெண் புராணங்களையுங்குற்றமறத் தெளிந்த தேவரீருக்கு அடைவதற்கு அருமையானது யாது? தேவரீரிடத்து ஒன்று கேட்கவேண்டுமென்ற ஆசையையுடையோம். எங்களுடைய வாஞ்சை முற்றும்படி தேவரீர் அருளோடு விடையளித்தல்வேண்டும். எங்களுடைய விருப்பத்தைச் சொல்லுகிறோம், கேட்டருள்வீராக. இப்பூலோகத்தில் தீர்த்தங்களுள் புண்ணியமான தீர்த்தமும், மூர்த்திகளுள் உத்தமமாகியமூர்த்தியும், க்ஷேத்திரங்களுள் சிறந்ததாகிய க்ஷேத்திரமும், எவ்விடத்திலேனும் ஒருங்கு சேர்ந்திருக்குமாயின் அதை உரைத்தருளவேண்டும்," என்று சொல்லி வணங்கினர். தவவலிமைமிக்க சௌனகாதி முனிவர்கள், இங்ஙனம் கேட்டலும், சூதமாமுனிவர், சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துச் சித்தசுத்தி யடைந்து உலகமுய்யும்படி சொல்லத்தொடங்கினர். "தேவர்களும்விரும்பும்படியான தவத்திற்சிறந்த முனிசிரேஷ்டர்களே! நீங்கள் என்னை வினவியதாகியதலம் தீர்த்தம், மூர்த்தி மூன்றிலும் சிறந்ததாகிய திவ்யக்ஷேத்திரம், திருவானைக்காவென்று சொல்லப்படுவது. பூலோகத்தில் அதினினும் சிறந்த தலம் வேறொன்றில்லை.

இதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோலச் சந்தேகமில்லாமல் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் அருந்தவப்பேறு வாய்ந்த அந்தணர்களாகையாலே, திருவானைக்காவினது மேன்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். இது பரமசிவன் உமாதேவியாருக்கும் நந்தியெம்பெருமானுக்கும் திருவாய்மலர்ந்தருளியதாகும்" என்று கூற, அதைக் கேட்ட அறிவிற்சிறந்த முனிவர்கள், அச்சூதமாமுனிவருடைய திருவடிகளில்மீட்டும் நமஸ்கரித்து, "பரமசிவன் பார்வதிதேவியாருக்கும் திருநந்திதேவருக்கும் திருவாய் மலர்ந்தருளியபடி, தேவரீர் அடியேங்களுக்கு அருளிச்செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். சூதமாமுனிவர் இத்தன்மையையுடையதான புண்ணிய தலத்தின் மான்மியத்தைச் சொல்லத்தொடங்கினார்.

"அஞ்ஞானத்தைப்போக்கும் இவ்விஷயமானது, பிரம்மபுராணத்தின் மத்தியிற் சொல்லப்பட்டிருக்கிறது. நான் இதனை வரன்முறையாக உமக்குச் சொல்வேன் நீங்கள் மனம்பொருந்திக் கேட்பீராக" வென்று சூதபுராணிகர் பக்தியோடு தமது குருவினுடைய திருவடிகளைத் தியானித்துச் சொல்லத்தொடங்கினர்.

உலகம் யாவையும் ஒடுங்கும் அவ்வூழிக்காலத்தும் தனக்கோரழிவின்றி நிலைபெற்று விளங்குவதான கைலையங்கிரியானது, தன்னை வணங்கினவர்களுக்கு இந்திரன் முதலிய தேவர்கள் பதங்களையும் திருமால் பிரமனாதியோர் பதங்களையும், மற்றை யெல்லா வளங்களையும் அளிப்பது.

புராணவரலாறு.

அந்த வெள்ளியங்கிரியினது மகிமையைச் சொல்லுவது எளிதன்று. இப்படிப்பட்டதான கைலாசகிரியின்கண் இரத்தின மயமான ஆயிரம் கால்களையுடைய அழகிய மண்டபம் ஒன்றுண்டு. அதன் முன் சூரியன், தன்முன் மின்மினியை ஒப்பான். அம்

மண்டபத்தின்கண் பைம்பொன்மாலரியணையொன்று விளங்கியது. அதன்மீது கண்ணுதற்பெருமான் உமாதேவியாரோடு திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தனர். இருமருங்கிலும் வெண்சாமரங்கள் சுழற்றப்பட்டன. சாந்தாற்றிகள் குளிர்மென்காற்றை எழுப்பின. வெண்சங்கங்கள் முழங்கின. முழுமதிபோன்ற வெண்கொற்றக்குடைகள் உயர்த்தப்பெற்றன. பண்ணிசைப்போர் பல இனிய கீதங்களைப்பாடினர். கின்னரர்களும் நாரதாதியரும் வீணையிற் பண்களை வாசித்தனர். மெல்லிய இடையினையுடைய பெண்கள் சதிமுறை பிறழாது நடித்தனர். வானவர் பூமழை பெய்தனர். அடியவர் மொழிந்த தோத்திரங்கள் முழங்கின. திருமால், பிரமன், இந்திரன், விண்ணோர் முனிவரராகிய யாவரும் தோத்திரங்களைச் செய்து, தாங்கள் வேண்டியவரங்களை வேண்டியபடியே பெற்று மீண்டனர். இப்படி யாவருக்கும் அனுக்கிரகித்து எழுந்தருளியிருக்கிற காலத்து, ஒரு நாள், சிவபெருமான் விநாயகமூர்த்தியோடும் குமாரக்கடவுளோடும் விளையாடிக்கொண்டு சந்தோஷமாக எருந்தருளியிருந்தனர். அப்பொழுது நந்தியெம்பெருமான் இறைவனது சரணகமலங்களில் பணிந்தெழுந்து கைகுவித்து நின்று,

"பண்ணவர்க் கரியாய் போற்றி பக்தருக் கெளியாய் போற்றி
தண்ணிய மதியும் பாம்புந் தரித்தரு டலைவா போற்றி
கண்ணிய வடியா ருள்ளக் கருத்தினை முடிப்பாய் போற்றி
புண்ணிய முதலே போற்றி பூரணப் பொருளே போற்றி."

என்று நாவாரத் துதித்து, "வேண்டியவர் வேண்டியபடியே யாவையும் அடையும்படி அருள் சுரந்தளிக்கும் முக்கட் பெருமானே? என்னைக் குழந்தையைப்போலக் காத்தருளும் புண்ணிய மூர்த்தி? தேவரீரிடத்து ஒன்றுகேட்க விரும்பினேன். அது யாதெனில், தேவரீர் உமாதேவியா

ரோடு மிக மகிழ்ந்து உறையுந்தலங்களுள் மேலானதல மும், மேம்பட்டு விளங்கும் தீர்த்தமும், மேலான மூர்த்தி யும் ஒருங்குவாய்ந்த சிறந்த தலம் பூவுலகின்கண் எங்கே யுள்ளது; அதைக் கேட்க விரும்பினேன்; திருவாய் மலர்ந் தருளவேண்டும்; இறைவனே! அதுவும், இன்றுகாறும் ஒருவருக்கும் சொல்லப்படாததாகிய பரம இரகசியமுள்ள தாகவும் இருத்தல்வேண்டும்" என்று இரந்து பல நயமொ ழிகள் கூறி மீட்டு மலரடியில் வணங்கினர். இங்ஙனம் நிகழுங்காலத்தில் அகில லோகங்களையும் ஈன்றளித்த தாயா கிய பார்வதி தேவியும், மேகலாபரணங்கள் சத்திக்கவும், பாதங்களில் அணிந்த சிலம்புகள் ஒலிக்கவும், மென்மலர்ப் பூமாலைகளையணிந்த கூந்தலிலுள்ள சுரும்புகள் ஆரவாரிக் கவும், விரைவிலெழுந்து, நாயகர் அடியிற்றாழ்ந்து, புன் முறுவலோடு இனிமையாகச் சில வசனங்களைக் கூறுவா ளாயினள். "உலகிலுள்ள பொருள்களெல்லாம் தன் வயப் படுதலன்றித்தான் ஒரு பொருளிலும் வயப்படுதலில்லை யென்பதையாவரும் தெளியும்படி அழல்கின்ற விடத்தைக் கையிலேந்தி யுண்டு கறைக்கண்டனான பரமனே! பூரண னே! புராண! போற்றி, போற்றி; எம்பெருமானே! உலகை முய்யும்படி நந்தீசர் வினவிய பொருளை அடியேனும் அறி ந்துகொள்ள மிக விரும்பினேன்; இதுவுமன்றி, அடியே னுள்ளத்தில் ஓர் ஐயம் நிகழ்கின்றது. அதைக்கேட்டரு ளும்; பரந்த உலகங்களையெல்லாம் படைத்தளித்து அழிப் பவரும் தேவரீரே; தேவர்கள் முனிவர்கள் முதலிய யாவ ரும் யாகாதிகளைச் செய்து வழிபட்டு வரங்களைத் தந்த ருளவேண்டுமென்று யாசிக்கும் பெருமையுடையீரும் தேவ ரீரே; பஞ்சபூதங்களும் அவற்றின் குணங்களுமாகியும், விரும்பினோர் விரும்பிய பலனாகியும், ஆருயிராகியும், உயிர்க் குயிராகியும் விளங்கும் இறைவனும் தேவரீரே" யென்று

பலமுறைகளும் முறையிட்டுப் புகழும் விமலனே! உமக்கு வேறு தலைவனுமில்லை; நீர் விரும்பி யடையும் பயனுமில்லை; இங்ஙனமாக, தேவரீர் யோகத்தைச்செய்யுமிஃது என்ன வியப்பு; இந்த இரண்டு விஷயங்களையும் தேவரீர் எங்களுக்கு நிச்சயமாகத் திருவாய் மலர்ந்தருளல்வேண்டு'' மென்று பிரார்த்தித்தாள். இங்ஙனம் யாசித்த உமாதேவியாரையும் திருநந்தி தேவரையும் நோக்கிப் பெருங்கருணைத் திறத்தினால் புன்னகைசெய்து, நீங்கள் விரும்பிக்கேட்ட குற்றமற்ற விஷயங்களைச் சொல்லுவோம்; நீங்கள் சாவதானத்துடன் கேளுங்கள்'' என்று சொல்லத் தொடங்கினர்.

"பரம இரகசியமான தலமும் தீர்த்தமும் இம்மை மறுமை வீடுகளைத்தந்தருளும் மூர்த்தியுமாகிய மூன்றும் சிறந்ததான ஒரு க்ஷேத்திரம் அளவிடக்கூடாத வளங்களையுடைய சோழநாட்டில் காவிரியின் கரையிலுள்ளது. அத்தலம், அழகாகவும் மிகமேலானதாகவும் விளங்கும். அத்தலத்திற்கு ஞான க்ஷேத்திரமென்று ஒரு பெயருண்டு. இதனை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். மெல்லிய இடையினையுடையவளே! நீ அத்தலத்தை யடைந்து அருந்தவத்தைச் செய்வாய். யாம் அவ்விடத்து வந்து பல அரிய விஷயங்களைச் சொல்லுவோம்" என்றனர். பரமசிவன் இங்ஙனங்கூற, அதைக்கேட்ட அவ்விருவர்களும், எம்பெருமானே! யாங்கள் எளிதிலுய்ந்தோம்; இனி அவற்றின் பெருமைகளையும் அடியேங்கட்கு அருள் செய்யவேண்டு'' மென்று நயந்து பிரார்த்திக்க, தேவர்களுக்குமரிய சிவபெருமான் சந்தோஷத்துடன் உரைக்கத் தொடங்கினர்.

தேவ தேவனாகிய சிவபிரான், உமாதேவியாரும் திருநந்தி தேவரும் கேட்கும்படி தலவிசேஷத்தை அமுததாரைபோல அருள்செய்வாராயினர். "பரிமளங்கமழுங் கூந்தலினையுடைய மடந்தையே! ஓ! நந்தி! சொல்லுவோம்,

கேளும்; எக்காலத்தும் எவரும் பணியும்படி நாம் இனிது எழுந்தருளியிருந்து சிவஞானத்தைப் பிரகாசிப்பித்தலால்

தலவிசேஷம்.

ஞானதலம் எனப்படும் ஓர் தலம் பூலோகத்தின்கண் உள்ளது; கிண்கிணி சத்திக்கும் பாதத்தையுடைய பெண்ணே, திருமாலும், நான்முகனும், திக்குப்பாலகர்களும், நவக்கிரஹங்களும், நக்ஷத்திரங்களும், ஸப்தமருத்துக்களும், அஷ்டவசுக்களும், ஏகாதசருத்திரரும், துவாதசாதித்தியரும், தபோதனர்களும், ஏனையோரும் ஐம்பொறியடக்கி, மனத்தை ஒருவழிப்படுத்தி, அங்கே வசித்தனர். யாம், அருள்கூர்ந்து அவர்களுக்குப் பிரசன்னமாகி நல்ல பதவிகளையும், திரிகாலஞானத்தையும், சிவஞானத்தையும் அளித்தனம். அவர்கள் அவற்றைப்பெற்று, அங்கே இக்காலத்தும் வசிக்கின்றனர். அவர்கள் இருந்து அருந்தவம் புரிந்து பேறுபெற்ற பலதீர்த்தங்கள் அங்கே உள்ளன. அவற்றில் விதிப்படி ஸ்நாநம் செய்பவர்கள், இங்கே சொல்லிய பலன்களையெல்லாம் அடையக்கடவரென்று வரங்களும் அளித்தனம். கங்கையானவள் அந்த க்ஷேத்திரத்தில் தவம்செய்து திங்களும், கொன்றைமாலையும், அரவுந்தரித்த நமது சடாமகுடத்தில் தங்கப்பெற்றனள். மாதவர்கள் வணங்கும் அந்த க்ஷேத்திரத்தில் காவிரியானவள் கடுந்தவஞ்செய்து கங்கையினும் மிக்க புண்ணியத்தைத் தரும்பேற்றையடைந்தனள். மலர் மாலை யணிந்த பெண்ணே! இன்னும் கேட்பாயாக; மேருமலையின் கண்ணுள்ள மானஸமடுவானது புகழ்மிக்க ஞானதலத்திலிருந்து தவமாற்றி அன்னப்பறவைகளும் பொன்மயமான தாமரைமலர்களும் தன்னிடத்துத் தங்கும் பேற்றை அடைந்தது. அதன் நீர்ப்பெருக்கே சரயுமாநதியாகப் பெருகி ஓடுகின்றது. அது சார்ந்தோர்க்கு வறுமைப் பிணியைப் போக்கி நற்கதியைக்கொடுக்கும். அகஸ்திய

முனிவர் வசிக்கின்ற பொதியமலையினின்றும் பெருகி அள வுபடாத வரங்களை எவர்க்கும் அளிக்கும் தாமிரபரணியா னது இந்த க்ஷேத்திரத்தில் தவஞ்செய்தே தன்னிடத்து முத்துக்குவியல்களுண்டாகும்படி வரம் எய்திய்து. கோ முக மலையினின்றும் வரும் கோமதிநதியும், கோதாவரிநதி யும், சந்திரபாகைநதியும், நருமதைநதியும், பூமி அந்தரி க்ஷம் சுவர்க்கம் என்று சொல்லப்பட்ட மூவுலகங்களிலு முள்ள ஏனைத்தீர்த்தங்களும், இந்த க்ஷேத்திரத்தில் தவஞ் செய்தே தம்மிடத்து ஸ்நாநம் செய்பவர்களுடைய பாவங் களும் தம்முடைய பாவங்களும் பறந்தோடும்படியான பலவரங்களைப்பெற்று அங்கங்கே விளங்குவனவாயின. இரத்தினங்கள் நிரம்பிய ஸப்தஸாகரங்களும் அந்தப்புண் ணிய க்ஷேத்திரத்தின்கண் தடாகவடிவமாய் அங்கங்கே மேன்மையுற்று விளங்குகின்றன. அங்குள்ள பலதீர்த்தங் களுள்ளும் சந்திரன் முதலியோர் பெயரால் வழங்கும் சில தீர்த்தங்கள் விசேஷமுடையனவாம். அஃது அப்புக்ஷே த்திரமாதலின் (அப்பு=ஜலம்) அப்புவின் மயமான எப்படி ப்பட்ட தீர்த்தங்களும் அந்த க்ஷேத்திரத்தில் இனிது தங்கும். வாள்போலும் கண்ணையுடைய பெண்ணே, சிற ந்த தலத்தின் மகிமையை இன்னும் சொல்லுவேன், கேள். முற்பிறப்பிற்செய்த புண்ணிய விசேஷத்தால் அங்கே பிறந் தவர்க்கும் வசித்தவர்க்கும் இறந்தவர்க்கும் எல்லா நோய் களும் நீங்கிவிடும். அவர்களுக்கு மறுபிறவி உண்டாவ தில்லை. இது சத்தியம். பாவங்களும், அவற்றைச் செய்ப வர்களும், ஆசைமிக்குடைய வீணரும் அத்தலத்தைச் சாரார். அந்த க்ஷேத்திரமானது, விதிப்படி தவஞ்செய் யும் முனிவர்க்கும், யோகியர்க்கும் வசிக்குமிடமாக விளங் குகின்றது. மெய்ம்முழுதும் வெண்ணீறு அணிந்து பரி சுத்தமான ருத்திராக்ஷமாலை தரித்து, பஞ்சாக்ஷரத்தை

ஜபித்துப் பூசை செய்பவர்க்கு அவ்வளம்பதியானது சிறந்த தானமாகும். மணங்கமழும் மாலையணிந்த நங்காய்! உயர்ந்த மேருமலையும், கைலையங்கிரியும், மந்தாரமலையும், ஸ்ரீ காசியும், கேதார க்ஷேத்திரமும், எல்லாப்பயன்களையும் அளிக்கவல்ல ஞானக்ஷேத்திரத்தினும் சிறந்தனவென்று சொல்லப்படா. அத்தலத்திற்பேசப்படும் வார்த்தைகளெல்லாம் வேத மந்திரங்களேயாம்; எண்ணும் எண்ணங்கள் யாவும் சிறந்த நிஷ்டையேயாம்; அவ்விடத்து நிற்றல், நடத்தல் முதலிய யாவும் யோகத்தின் அங்கங்களேயாம்; அத்தலத்தின்கண் உண்ணலும் உண்பித்தலும் விரும்பிக் கொடுத்தலும் விரைந்தேற்றலும் ஆகிய எல்லாத்தொழில்களும் சிவதருமங்களேயாம். ஞானதலத்திற் பிறந்து புல்லரிசிக்கூழை உண்பவன், வேறு தலங்களில் அறுசுவையினையுமுடைய நால்வகையாய உணவுகளைப் பெரியோர்களுக்கு உண்பித்தலால் உண்டாகும் பயனினும் எண்மடங்கு அதிகமான பயனைப்பெறுவனென்றால், அத்தலத்துப் பிறருக்கு உணவளித்தலால் உண்டாகும் பெரும்பயன் சொல்லும் பான்மையதோ? இந்திரனாகவும், குபேரனாகவும், உலகமெல்லாம் புரக்கும் அரசனாகவும் சிறப்புற்றிருப்பதிலும், ஞானதலத்து வசித்து யோகிகளுடைய மனைகளில் பிச்சை புகுந்து உயிர்வாழ்தல் மேலானதாகும். கற்பகநாட்டின்கண் அமுதத்தையுண்டு அரம்பையருடைய இன்பநுகர்ந்து சுகித்திருத்தலினும், வேறு தலங்களில் பலவகைப் போகங்களும் பொருந்த இன்புற்று வாழ்தலினும், ஞானதலத்தின் கண் ஒருதினம் பட்டினியிருந்து வசிப்பதனால் பெறும் சுகம் மேலானதாகும். மகா பாதகங்களைத் தினந்தோறும் புரிந்து வழுவினோர்களும், முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயனால் ஞானதலத்திற் சென்று வசிக்கப்பெறுவரேல், மலம், மாயை, கன்மமென்னு மூன்றும் வேரோடும்

நசிக்க வீடு சேருவார்கள். வஸ்திரங்களையும், எண்ணெயையும், கன்னியர்களையும், விக்கிரயஞ்செய்தேனும், இன்னும் எத்தகைய இழிதொழில்களைப் புரிந்தேனும், ஞானதலத்தில் வசிப்பரேல், அன்னோர் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும்பயன்களையும் பெறுவரென்றால், ஏனையவர்பெறும் சிறப்பைச் சொல்ல முடியுமோ. திருமாலின் சகோதரியே! பன்றி, வலம்புரி, மயில், நாய், கழுதை, காக்கை முதலியவற்றைக்கொன்று தசைகளைத் தின்று உழலும்புலையராலும், ஞானதலத்தில் வசிப்பரேல் தேவர்களுக்குள் சிறப்புற்று வாழ்வார்கள். இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையாவென்றறிந்த விவேகிகள் இளமையாதிகள் உள்ளபோதே ஞானதலத்தில் வசித்து அகமகிழ்ந்து அறமாதி நான்கையும் சம்பாதித்துக்கொள்வரேயன்றி, வேறு தலத்திற்குச் செல்ல ஒருநாளும் நினையார்கள். கணிகையராலும், பக்தியினாலேனும், பொருளீட்டுங்காரணத்தாலேனும், விநோதத்தாலேனும், ஞானதலத்தில் வசிப்பரேல், தவந்தான முதலான நல்வினை செய்தலாலுண்டாகும் பயனையடைவீர்கள். வழிநடையிற்செல்வோர் அவ்விடத்து ஓரிரவு தங்குவரானால், அவர்கள் சொர்க்கத்தில் நிலைபெற்று வாழ்வார்கள். ஞானக்ஷேத்திரத்தை எதிர்நோக்கி வணங்கினோரையும், கைதொழுதோரையும், அவர்கள் செய்த தீவினைகள் எதிர்நோக்கியடிவணங்கியகலும். வாசனைமிகுந்த பொழில்கள் சூழ்ந்த ஞானதலத்தின் எல்லையினைக்கடவாதவர்கள், எந்தவிழிகுலத்திற் பிறந்தவராயினும், அவர்கள் வசிக்குமிடங்களில் இலட்சுமியானவள் நீங்காமல் நிலைபெற்று வாழ்வள். அறிவுடையோர், தவந்தானம் விரதம் வேள்வி ஆச்சிரம ஒழுக்கம் முதலிய தருமங்களையெல்லாம் ஞானதலத்திலிருந்தே செய்யவிரும்புவர். வேறுதலத்திற் செய்வோமெ

ன்றுமறந்துமெண்ணார்கள். இந்த ஞானதலமானது தவ
ந்தானங்களைச் செய்வோர்களுக்கு அவர்கள் விரும்பிய
நாற்பெரும்பயனையும் விரைந்தளிக்கும்; அஷ்டமகா சித்தி
களையும் விரைவிற் கொடுக்கும்; சொர்க்காதி போகங்களை
யும் எளிதிலடைவிக்கும்; வீட்டையுமுதவும். இத்தன்மை
யதான தலம் பூவுலகில் எங்குமில்லை. மூர்க்கனாய்ப்பிறர்க்
குத் துன்பமே செய்துகொண்டு திரியும் மூடனாலும்,
மேலான ஞானதலத்தில் என்றும் வசிக்கும் பண்புடையனா
னால் எமக்கு இனியனாவன். அஃதெவ்வாறெனில், கடல்
விடமும் அம்புலியுமே தக்க சாட்சியாகும்; இந்த உண்
மையை நீ அறிந்துகொள்வாய். ஞானதலத்தில் வசிக்க
முடியாமல் அயல் தேசத்தில் வசிப்போர்கள், சிறந்த குலத்
திற்பிறந்த பிராமணரையும் பெரியோர்களையும் அத்தலத்
தில் வசிக்கும்படி செய்வார்களானால், தாமே வசித்ததி
னால் அடையும் பயனையடைவார்கள். அந்த ஞான க்ஷேத்
திரத்தை, ஜம்புகேசுவரமென்றும், கஜாரணிய க்ஷேத்திர
மென்றும் சொல்லுவர். இப்பெயர்கள் மூன்றுமே, மலம்
இரண்டையும் நீக்கித் தவசிகளுச்சரிக்கும் மூன்றக்ஷரங்க
ளின் மேன்மையையுடையனவாகி, ஜபிப்போர்க்கு எல்லாப்
பயனையும் தருவனவாம். மலபரிபாகம் பிறந்து, சத்திநிபா
தம் பதிந்து, இருவினையொப்பு வாய்ந்த பக்குவிகளுக்கல்
லாமல், சுத்த பஞ்சாக்ஷரத்தைப் பெரியோர் சொல்லார்.
மைக்கருங்கண் உமைமாதே! மேற்கூறிய மூன்றுபெயர்
களும் யாவருக்கும் சொல்லப்படுமாகையால், தக்க சிவ
ஞானத்தை யளித்து வீட்டினையுமடைவிக்கும் அம்மூன்று
திருப்பெயர்களையும் பக்தியோடு ஒருமுறை சொன்னாலும்
இடர், பாவம், பொய், நோய் முதலானவெல்லாம் விடை
பெற்று நீங்கும். எத்தகைய போகங்களும் எதிரே நிற்கு
மென்றால், அந்த உத்தமங்களாகிய பெயர்களை யெவர்தாம்

உரையார். எல்லாவுலகங்களையும் பெற்றெடுத்த பெண்ணணங்கே! பெரும்பயனடைய விரும்புவோர், ஞானதலத்தின் கண்ணே வசிக்கக்கடவர்; அது பொருந்தாதாயின், அத்தலப்பெயரை ஓதக்கடவர்; அதுவும் கூடாதாயின், அப்பெயர்களைப் பிறர் சொல்லவாயினும் கேட்கக்கடவர். பக்தியோடு கேட்டவர்களும் மூவகைப்பாதகங்களினீங்கி மேலான ஞானத்தையடைந்து எமதடியிற் புகுந்திருப்பர். இஃதுண்மை; அடைந்தோர்க்கெல்லாம் அஞ்ஞானமாகிய விருள் நீங்கும்படி மெய்ஞ்ஞான சூரியன் உதித்து நெஞ்சாகிய மலர்க்கமலம் விரியச்செய்யும் அத்தலத்தின் பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லப்புகுந்தால் காலம்போதாது. ஆகையால், தீர்த்தத்தின் மகிமையைச் சொல்லுவோம். ஸாவதானத்துடன் கேட்பாயாக.

முல்லையரும்பையொத்த முறுவலினையுடைய பெண்ணணங்கே! ஞானக்ஷேத்திரத்தின்கணுள்ள தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லுவோம், கேட்பாயாக. ஞானதலத்தெல்லையெல்லாம் அலங்கரித்தாற்போலக் கல்லெனவொலிக்கும் அலைகளையுடைய பல தீர்த்தங்கள் விளங்காநிற்கும்;

தீர்த்தவிசேஷம். அவை, நாற்புறத்தும் செழுமணிகளாலாய படிகளையுடையன. திங்களைப்போலக்குளிர்ந்து, அடியார்களுடைய சிந்தைபோலத் தெளிர்ந்து, எல்லாப்பற்றுக்களும் அற்றுப் பிக்ஷையெடுத்துண்ணும் முற்றத்துறந்த பெரியோர்களுடைய உள்ளம்போல மேன்மையுற்று, கரும்பினிரசம்போல மிக்க சுவையினையுடையனவாய், மூன்றுலோகங்களுக்கும் எல்லா மங்களங்களையும் தருவனவாக அத்தீர்த்தங்கள் விளங்கின. பல துன்பங்களால் அலைப்புண்டும் சிற்றின்ப வாஞ்சையினால் இல்லறத்தினின்றும் நீங்காதாரைப்போல, அன்னப்பறவைகளும், கம்புளும், சக்கரவாகங்களும், அலைகளாலலைப்புண்டும் கயல்

மீன் விருப்பினுலே, அத்தீர்த்தங்களில் நீங்காதனவாய் வசிக்கும். புனல் நிறைந்த தீர்த்தங்களின் கரைகளிலெல்லாம் பல மலர்களையுடைய நந்தனவனங்கள் உள்ளன. அவ்விடங்களில் தவங்களைச் செய்பவரும், பரயோகம் பயிற்றுவோரும், அவர்க்கு வேண்டும் பணிகள் செய்பவரும், பலருள்ளனர். இப்படிப்பட்ட தீர்த்தங்களுள் யாதானும் ஒரு தீர்த்தத்தில் மூழ்கினோர், முற்பிறப்பிற்செய்த பெரும் பாவங்களும், இப்பிறப்பிற்செய்த பாவங்களும் நீங்கித்தம் இனத்தாரோடும் வேண்டும் வரங்களையெல்லாம் பெறுவர். அவைகளுள் ஒரு தீர்த்தமே பிசாசு, பிரமஹத்தி, பிரமரக்ஷசு, அச்சத்தை விளைக்கும் பெரும்பூதம், துஷ்டதெய்வம் ஆகிய இவையெல்லாம் தன்னிடத்தில் ஸ்நானம் செய்தோர்க்குப் போக்குமென்பது நிச்சயம். தீர்த்தம் ஒவ்வொன்றே குட்டநோய், தொழுநோய், முயலகநோய், குன்மம், சூலை, வாதநோய், காசம், நேத்திரநோய், தலைநோய் முதலான நோய்களைத்தீர்க்கும். பிறைபோன்ற நெற்றியையுடைய உமையே! பிரமஹத்தியாதி பாவங்களையும் பிறதீவினைகளையும் ஒரு தீர்த்தமானது போக்குமென்பது திண்ணம். ஈன்றாள், புதல்வி, உடன் பிறந்தாள் முதலியோரைப் புணர்ந்த தீவினையையும் ஒரு தீர்த்தம் போக்கும். ஒழுக்கம், அறிவு, தவம், தானம், சீல முதலியவற்றையொரு தீர்த்தமளிக்கும். கல்வி, அழகு, ஆயுள், வலிமை, ஊக்கமுதலியவற்றை ஒரு தீர்த்தமளிக்கும். அங்குள்ள ஒரு தீர்த்தத்தின்கண், ஒருவர் ஸ்நானஞ்செய்தால், புத்திரரும், அவர் வழிப்புத்திரரும், அவர்வழியிற் புத்திரரும் உண்டாவர். மூவேழு தலைமுறையிலுள்ளாரும் நரகத் துன்பத்தினின்று நீங்குவர். அவர்கள் குலம், உலகில் நீடூழி வாழ்ந்திருக்கும். பிதிர் தேவதைகள் திருப்தியுடையவராவர். அப்புண்ணிய தீர்த்தங்களில், ஆசாரத்தோடு ஒன்பது

முறை ஸ்நானஞ்செய்பவரேயல்லாமல், ஆசௌச நிவர்த்திக்கும், வெயிலின் வெப்பம் நீங்குதற்கும், அழுக்கைப் போக்கிக்கொள்ளுதற்கும் ஸ்நானம்பண்ணுகின்றவர்களும், பெரும்பயனடைவார்கள். கரையினின்றும் வழுக்கித் தண்ணீரில் விழுந்தாலும், அத்தீர்த்தத்தைக் கையால் எடுத்துப் பருகினாலும், அலை வீசிய நீர்த்துளி மெய்யிற்பட்டாலும், அவர்களுக்கு நற்கதியுண்டாகும். தீர்த்தத்தினழகைக் கண்ணாற் பார்த்தவர்களும் தீர்த்தமிருக்குந் திசையைக் கேட்டோரும், தீர்த்தத்து வசிக்கும் மீன்முதலிய ஜந்துக்களும், தீர்த்தத்தில் வளரும் விருக்ஷங்களும், எல்லாக்குற்றங்களும் நீங்கி உயர்பதவியையடைவார். இது நிச்சயமானது. சிறியநெற்றியையுடைய பெண்ணே! கேட்பாயாக. இவ்வாறுயர்ந்த தீர்த்தத்தருகுசென்று தவம் முதலிய செய்யினும், பலதானங்களைச் செய்யினும், பிதிர்க்களுக்குச் செய்யும் கடன்களைச் செய்யினும், அவற்றின் பயனை எவராலுஞ் சொல்லமுடியாது".

இங்ஙனம் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளியதைக் கேட்ட உமாதேவியார், மிக்க உவகையடைந்து; வணங்கி நின்று, துதித்து, "என் நாதனே! அளவில்லாமல் நெருங்கிய அந்தப் பலதீர்த்தங்களுள்ளும் சில தீர்த்தங்கள் மிகச் சிறந்தனவென்று திருவாய்மலர்ந்தருளினீர்; அண்ணலே! அந்தத் தீர்த்தங்களின் பெயர்களையும் அவற்றில் ஸ்நானஞ்செய்தவர்களையும், அவைகளில் ஸ்நானம் செய்யும் விதிகளையும், ஆடவேண்டுங் காலத்தையும், ஜபிக்கும் மந்திரத்தையும், எய்தும் பயனையும், அவற்றைக் காப்போரையும், அவற்றிற்குரியதேவதைகளையும், கொடுக்கவேண்டுந் தானங்களையும், தேவரீர் உரைத்தருளவேண்டும். தேவரீரையன்றி, அந்தத் தீர்த்தங்களினது மகிமையை உள்ளவாறுரைக்கவல்லவர் யாவர்? அடியேன் பிரார்த்திக்கின்றேன்"

என்று மனங்கனிந்து வாஞ்சையாய் பின்னையும் வணங்கிக் கைகட்டி வாய் புதைத்து நின்றனள். பரமசிவன் உமா தேவியாரின் மனவிருப்பத்தைக்கண்டு, "மாதராய்! ஒப்பில்லாத தீர்த்தங்களின் மகிமையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற ஊக்கமுனக்கு மிகுதியாகவுள்ளது; அப்படியே அவற்றைச் சொல்லுவோம், தெரிந்துகொள்ளுவாயாக" வென்று சொல்லத்தொடங்கினர்,

"பிரமதீர்த்தம், இந்திரபுஷ்கரணி, சம்புபுஷ்கரணி, இராமதீர்த்தம், ஸ்ரீமத்தீர்த்தம், அக்கினிதீர்த்தம், அகத்தியதீர்த்தம், சோமதீர்த்தம், சூரியதீர்த்தம், இவை மிகச் சிறந்த தீர்த்தங்களாம் என்று தெரிந்துகொள்ளுவாய்; பிரமதேவன் முன்னொருகல்பத்து, அழகிற்சிறந்தவொரு பெண்ணைப் படைத்தனன். அதிரூபவதியான அப்பெண்ணனவள் தன் எதிரில் வந்து நிற்க, மேகத்தைக் கண்ட சாதகப் பறவைபோல, ஆசையானது தூண்டினமையால், நான்முகன் அவள் நலந்துய்த்தனன். அத்தீயவொழுக்கத்தினால் அவன் படைப்புத்தொழிலை மறந்தான். அவனால் படைக்கப்பட்டோர், நரை, திரை, மூப்பு, அகாலமரண முதலியவற்றை யடைந்தனர். அப்படிப்பட்ட தவறு நேர்ந்ததைக்கண்டு, மனம் நடுங்கி, அருந்தவத்தாலெல்லை யடைந்தான். மேகலாபரணங்களை யணிந்தவளே! யாம் அந்நான்முகனுக்கு இரங்கி மகாமகிமைபொருந்திய பஞ்சாக்ஷரத்தை அவனுக்குபதேசித் தனுப்பினோம். அவன் விடைபெற்றுச் சென்று தான் பரிசுத்தனாகும்பொருட்டு ஞானக்ஷேத்திரத்தையடைந்தான்; அந்த க்ஷேத்திரத்தின் வளங்களையெல்லாம் கண்டு, அதிசயித்து, அங்குள்ளவொரு தீர்த்தத்தில் பக்தியோடுவிதிப்படி ஸ்நானஞ்செய்தெழுந்தனன். மெய்ம்முழுதும் விபூதியணிந்து, ருத்திராக்ஷமாலையை மந்திரபூர்வமாகத்தரித்து, மந்திரங்களுள் சிறந்த

தாகிய பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, அந்த க்ஷேத்திரத்தில் வசித்தனன். ஐம்பொறிகளையும் வென்று, ஆங்குள்ள சிவலிங்கப்பெருமானை வழிபட்டுப் புத்திரியைக் கூடின பாவம் நீங்கிச் சிருஷ்டித்தொழிலையும் பெற்றனன். வளைகளையணிந்த கையையுடைய மாதே! அந்தத் தீர்த்தமானது பிரமதீர்த்தமென்று பெயர் பெற்றது. அதில் ஸ்நானம் செய்தோர் புத்திரியாதியரை இச்சித்த பாவங்களெல்லாம் நீங்கப்பெறுவர். கற்பக நாட்டுக்குத் தலைவனாகிய இந்திரன் விருத்திரன் என்னும் பெயரையுடைய வொருவனைக் கொன்றனன். அந்தப் பிரமகத்தியானது அவனைப் பிடித்து வருத்தியலைத்தது. அவன் வலிமையெல்லா நீங்கி, விரைந்து சென்று, ஞானப்பதியை அடைந்தனன்; நம் சன்னிதியை யடையவேண்டி மேற்றிசைக் கண்ணே வந்தான்; வந்தபொழுது, அங்கேயொரு தடாகத்தைக் கண்டு உவந்து அதில் ஸ்நானஞ்செய்தான். அந்தத் தீர்த்தத்தின் கரையில் நம்மைப் பூசித்துத்தன் பாவத்தினின்றும நீங்கிச் சென்று முன்போலவே தன்னரசாட்சியை யடைந்தனன். தேமொழியே! அஃது, அன்றுதொட்டு இந்திரதீர்த்தம் என்று பெயர் பெற்றது. அந்தத் தீர்த்தத்தைத் தரிசித்தோர்க்கும் பஞ்சமா பாதகங்களும் பறந்தோடும். தவத்திற சிறந்த சம்புமுனியென்னுமொருவர் நம் சன்னிதிக்கு அக்கினி திக்கிலேயுள்ள வொருதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து பஞ்சாக்ஷரத்தைச் செபித்துச் சங்கரநாதப் பெயரினையுடைய நமது அருட்குறியைக் காதல் பெருகப் பூசித்து, நமது தன்மையினை யடைந்தனர். ஆகலால், அதற்கு அன்றுமுதல் சம்புதீர்த்தமென்று பெயருண்டாயிற்று. அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தோர் பெரும் பாதகங்களினீங்கிப் புத்திமுத்திகளைப் பெறுவர். இராமன், இராவணனை வதஞ்செய்து, சீதையோடும்

மீண்டு நமது சன்னிதியின் மேற்பக்கத்துள்ள வொரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அதன் கரைமேல் நீலவிண்டுநாதரைப் பிரதிட்டைப்பண்ணிப் பூசித்தான். அந்தத் தீர்த்தம் இராமதீர்த்தமென்னும்பெயர் பூண்டது. அது பிரமகத்தியாதி பாவங்களையும் ஒழிக்கும். அதில் விபீஷணனும் பக்தியோடு ஸ்நானஞ்செய்து பாவங்களினீங்கி நமது திருவடிகளைப் பூசித்துச்சென்று இலங்கையில் அரசாட்சி செய்தான். நமது கோயிலினுள் நமக்கருகே சிற்றாறலாக ஒரு தீர்த்தமுள்ளது. அந்தத் தீர்த்தமானது இனிமேலுன் பெயரினால் ஸ்ரீமத் தீர்த்தமென்னும் பெயரோடு விளங்கும். அதில் நீராடுவோர்க்கு உண்டாகும் பயன் இவ்வளவென்று தேவர்களாலுஞ் சொல்லவரிதாகும். முன்னொரு காலத்து, அக்கினிதேவன், வருணனுடைய மனைவியைக் கண்டு அவளுடைய வடிவழகில் மயங்கி மனவலியிழந்து, அவளைக்கூடி யின்புற்றான். பிறன் மனைவியைக் கூடிய பாவத்தால் அவனுடைய சுவர்ணவீரியமொழிந்து, மிக்க வலியும் ஒளியுநீங்க, அவன் துணுக்குற்று அஞ்சி, விரைந்து சென்று ஞானதலத்தை யடைந்தான்; அடைந்து, நம் சன்னிதிக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ள வொரு தீர்த்தத்தை எதிர்கண்டு மனமகிழ்ந்து அதிலே ஸ்நானம்செய்து, நம்மை முறைப்படி பூசித்தனன். நாம் அவன் வழிபாட்டிற்கிரங்கி, அருள்சுரந்து, ஊர்த்துவ வீரியமும், வலிமையும், தேஜசும், அழகும், வரங்களும் அளித்தோம். அவன் அவைகளைப்பெற்றுச் சென்று முன்போலத் தேவதைகளுடைய அவிர்ப்பாகத்தை வகிப்பானாயினன். மிக்க பிரகாசத்தையுடைய அக்கினிதேவன் ஸ்நானஞ்செய்து வரம்பெற்றமையால், அதற்கு அக்கினிதீர்த்தமெனப்பெயர் வழங்கலாயிற்று. அதில் விதிப்படி ஸ்நானஞ்செய்தோர், பிறர் மனைவியைக் கூடிய பாவங்களினீங்குவர்; தேகவலி

யில்லார், அவ்வலிமையை யடைவார்; தேககாந்தியில்லார், அதனைப் பெறுவர்; பாக்கியமில்லாதார், சகல பாக்கியங் களையும் பெறுவர். உமாதேவியே! பருவதராஜன் உன்னை எமக்கு அளித்தபொழுது, தேவர் முதலாயினோர் இமய மலைச் சாரலில் ஒருங்குகூடி யிருந்தமையால், தென்திசை யுயர்ந்துவடதிசை தாழ்ந்தது; அந்தச்சமயத்தில் நாம் அகத்தியமுனிவனையழைத்து இவ்வுலகம் சமனாகும்பொரு ட்டு, பொதிய மலையின்கண் நமக்கு ஒப்பாக வசிக்கும்படி யேவினோம்; அதுகேட்ட முனிவன், நம்மைப்பணிந்து, "சுவாமீ! தேவரீருக்கு ஒப்பாவாரில்லையே; அங்ஙனமாக, அடியேன், தேவரீரை எங்ஙனம் ஒப்பாவேன்; அருளிச் செய்ய வேண்டு" மென்று வேண்டினான். நாம், ஞானதலத் திடைச்சென்று, நம்மைப் பூசித்து நமக்குச் சமானமாகும் படி சொன்னோம்; அவன் "நன்று நன்று" என்றுகூறி, நம் மைத்தாழ்ந்தெழுந்து ஞானக்ஷேத்திரத்திற் சென்று, நம் சன்னிதிக்கு உத்தரதிக்கிலுள்ள ஒரு தடாகத்தைக்கண்டு அதில் பத்தியோடு மூழ்கி, மனவுறுதியோடு நம்மைப்பூசி த்து, நமக்கு ஒப்பாகும்படியான வரத்தைப் பெற்றுப் பொதியமலையைச் சார்ந்தான். அந்தத் தீர்த்தத்தில் நீராடி னோர், தீவினைகளினீங்கிப் பற்பல மேன்மைகளையுமடைவர். கல்வியையும், மிகுந்த ஆயுளையும், குறைவில்லாத குணங்க ளையும் அடைவர். தக்கன் பெற்ற மக்களுள் இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சந்திரன்மணந்தான். அவன் அவர்க ளைச் சமமாகப்பாராது, ரோகிணியிடத்து அதிக நேசம் பாராட்டி நடந்தனன். ஆகையால், அவன் தக்கனால், சபிக்கப்பெற்றுத் தன் கலைகளெல்லாம் நீங்கப்பெற்றான். அவன் அதனால் மிக்க கவலையுற்று, ஞானதலத்தை விரை விலடைந்து, தேவர்களால் பணியப்பெற்ற நமது சன்னிதி க்கு மேற்குத்திசையிலேயுள்ள ஒரு அற்புத தீர்த்தத்தைக்

கண்டு, அதில் மூழ்கி அதன் கரையில் பஞ்சாக்கினி மத்தி யினின்று அரிய தவஞ்செய்தான்; அன்று, நாம் அவன் தவத்துக்கிரங்கி, அவனுடைய சாபம் நீங்கும்படி அனுக்கி ரகஞ்செய்தனம். அன்றுதொட்டு, அவன் அமரர் முதலி யோர்க்கு அகமகிழ்ச்சியை யுண்டாக்கத் தக்க நலனைப் பெற்றனன். அத்தடாகமானது சோம தீர்த்தமென்று பெயர்பெற்று விளங்குகின்றது. அதில் நீராடினோர் க்ஷய முதலிய நோய்கள் நீங்கப்பெற்று, இம்மையில் மிக்க செல் வங்களையடைந்து, சுவர்க்கானுபவத்தையும் பெறுவர். மாயவன் எமது அருளைப்பெறும்பொருட்டு இனிமேல் தன் நாயகியை நடனமாடச் செய்வான். அக்காரணத்தால் அவ்விடம் ஸ்ரீரங்கமெனப் பெயர்பெற்று விளங்கும். உல கத்திற்கு இருளைப்போக்கிப் பிரகாசத்தைக் கொடுக்கின்ற சூரியனானவன், அழகிய இந்த ஞானதலத்தை யடைந்து நமது சன்னிதியின் மேற்றிசைக் கண்ணேயுள்ள ஒரு தீர்த் தத்தில் ஸ்நானஞ்செய்து, பல மலர்களைக்கொண்டு நம்மை வழிபட்டுத் துதித்தனன். அதனால், அவன், உலகையெல் லாம் விளக்கும் பிரகாசத்தைப் பெற்றதோடு, எல்லாக்கரு மங்களுக்கும் சாக்ஷியுமாயினன். அந்தப் பெரிய தீர்த்த மானது உலகத்தில் சூரியதீர்த்தமெனப் பிரசித்திபெற்றது. மலர்கள் நிரம்பிய அத்தடாகத்தில் பக்தியோடு ஸ்நானஞ் செய்தவர், சகல காரியங்களிலும் சித்திபெறுவர். வளையல் களையணிந்த கையினையுடைய உமாதேவியே! ஒன்பது தீர் த்தங்களிலும் நீராடினோர்களையும், அவர்கள் அடைந்த பயன்களையும் கூறினோம். இனி அவற்றில் ஸ்நானஞ்செய்ய வேண்டிய முறைகளைக் கேட்பாயாக.

(இன்னும் வரும்.)

M. V. இராமாநுஜாசாரியர்.

---



# ஸ்ரீராமானுஜ சரிதம்.

இவ்வாறு ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் ஜைனர்களை வென்ற இடமானது 'தொண்டனூர்' என்னும் இடமாம். அங்கே ஓர் பெரிய ஏரி இருக்கிறது. அது மைசூரிலிருந்து திருநாராயணபுரம் போகும் வழியில் ஈரோடை என்னும் ரயில் ஸ்டேஷனுக்கு மேற்கே 7 மயில் தூரத்திலிருக்கிறது. இப்போதும் அங்கே அவ்வேரியெதிர்வாயில் அந்த கற்காணங்கள் காணப்படுகின்றன. வாது செய்த மண்டபமும் இருக்கிறது.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் தொண்டனூரிலேயிருக்கும் போது தான் ஸ்ரீரங்கத்திலிருந்து வந்தவர்களால் கூரத்

தாழ்வானுக்கும் பெரிய நம்பிகளுக்கும் சோழராஜனால் நேர்ந்த பாதை தெரியவந்ததென்றும் அதனால் ஸ்வாமிகள் மிகவும் வருத்தமுற்று வாடினார்களென்றும் சோழன்மீது கோபங்கொண்டு காலை ஸந்த்யாவந்தனத்தில் அர்க்ய ப்ரதானம் செய்யும்போது ஸ்ரீநிவாஸனுக்கு ஒரு அர்க்கியம் ஸமர்ப்பித்தார்களென்றும் அதனாலாவேசங்கொண்ட திருவேங்கடமுடையான் தமது சக்கிரத்தின் நுனியால் சோழன் கழுத்தில் ஒரு சிறு காயம் செய்தாரென்றும் அது ஆறாப்புண்ணாகிப் பல்லாயிரம் புழுக்கள் நெளிந்து பாதை செய்யத்தொடங்கியதென்றும் அவனைச் சித்திர வதை செய்வதற்குப்பதிலாகவே இப்படி செய்யப்பட்டதென்றும் சிலநூல் கூறும். இவ்விருத்தாந்தம் சிங்கர் கோயிலிலேயே நடந்ததென்று சிலரும் ஸ்வாமிகள் தொண்டனூரில் ஜயம்பெற்ற பின்பு சிங்கர்கோயிலுக்கே எழுந்தருளிவிட, அங்கே நடந்ததென்று சிலரும் கூறுவார்கள். இங்கு கூறப்பட்ட அரசனைப்பற்றி யாம் இதனடியில் சில விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது.

பிரஸித்திபெற்ற யதுவின் வம்சத்தில் கலியுகத்தில் 'ஸளன்' என்னுமோரரசனிருந்தான். ஓர் ஸன்னியாஸி இவனை ஹோய் ஸளா என்றழைத்துத் தனக்கு உதவிசெய்யும்படி வேண்டினன். அரசனவருக்குதவியாகி ஓர் பெரும்புலியைக்கொன்றான். அது முதலாக அவன் வம்சஸ்தர்களுக்கு 'ஹோய் ஸளர்கள்' என்று பெயராயினது. அவர்கள் கொடியில் புலி அடையாளமாகக் கொள்ளப்பட்டது. அவர்கள் மஹா தார்மிஷ்டர்களாகவும் மஹா வீரர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் வம்சத்தில் விநயாதித்யனென்னும் அரசனொருவன் பிறந்தான். அவனது வம்ச வரலாறு.

விநயாதித்யன் முதல் திரிபுவனமல்லன் ஹோய்ஸளராஜன். } பாரியை கேளியதேவி.

இரேயங்கன் எருயங்கன் } பாரியை ஏசலதேவி

நரஸிஹ்ம விஷ்ணுவர்த்தன ஹோய்ஸளராஜா

வல்லாளதேவன்
பாரியை பத்மலாதேவி
கி. பி. 1103

*விஷ்ணுவர்த்தனன்
விட்டலதேவன்
விட்டலன்
இரண்டாம் திரிபுவனமல்லன்
புஜபலகங்கன் வீரகங்கன்
விஜயகங்கன்
பாரியைகள் சாந்தளதேவி 1 லக்ஷ்மி 2
கி. பி. 1117 முதல் 1137

உதயாதித்யன்

முதல் நரஸிஹ்மன் வீரநரஸிஹ்மன்,
விஜயநரஸிஹ்மன் பாரியை ஏசலதேவி.
கி. பி. 1142-1191

இரண்டாம் வல்லாளன் வீரவல்லாளதேவன்
பாரியை பத்மலாதேவி
குந்தலதேசத்தை ஜயித்தவன் பாண்டிய
சோழர்களையடக்கினவன். கி. பி. 1192—1211.

சா. ச 1114 கி. பி. 1192. பரிதாபி வருஷத்தில் லொக்கிகொண்டியில் ஓர் தானசாஸநம் பிறப்பித்திருக்கிறான். இண்டியன் ஆண்டி[illegible]ரி—2—296—303.

இவன் ஸ்ரீராமானுஜாசாரியரால் வைஷ்ணவனாக்கப்பட்டான் என்று மைசூர் சாஸநங்களை சோதனை செய்த மிஸ்டர் ரீஸ் துரை யெழுதுகிறார். இவனது முதலாவது பாரியை சாந்தளதேவி. இவளது பிதா சிவமதம். தாயார்

*இந்த விஷ்ணுவர்த்தனனைப்பற்றி அடியில்கண்ட ஒரு சுலோகம் கூறப்படும் அதாவது:

“ निर्दलितक्षेयतूरो भस्मीकृतकोङ्गराय रायपुरः ।
घट्टित घट्टकवाटः कम्पितकाञ्चीपुरस्सविष्णुनृपाल. ॥”

ஜைனமதம். இவளுக்குப் பிறகு லக்ஷ்மீதேவியை மணம் புரிந்தான். இவ்வரசர்கள் தேவர சமுத்திரத்தில் இருந்தார்கள். விஷ்ணுவர்த்தனன் தலைக்காட்டை ஜயித்துப் பிடித்தவன். காஞ்சிபுரம் வரையில் வந்து வீரங்காட்டினவன்.

அரசன் தன் குருக்களாகிய அமணரை விருந்துக் கழைத்தானென்றும் அவர்கள் வரமாட்டார்களென்று பத்னி கூறினளென்றும் அதைக்கேளாதழைத்தும் இவன் அங்கஹீநனென்று அவர்கள் வராமல்போகவே இவன் கோவித்துச் சமணரை வெறுத்திருந்தானென்றும் ஸ்ரீ பாஷியகாரஸ்வாமிகள் அவ்விடம் வந்தபோது அவன் பத்னி இவருக்குச் சிஷ்யராகும்படி போதித்தாளென்றும் காட்டேரி தானே ஓடிவிட்டதனால் அரசனவருக்கு சிஷ்யனானென்றும் ஓர் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

முன்காலத்திய அரசர்கள் தங்கள் வாழ்நாளுக்குள்ளே பல இடங்களை ராஜதானியாகக்கொண்டு அரசுபுரிந்து வருவது உண்டு. மைசூர் இராஜ்ஜியத்தைச்சேர்ந்த ஹாஸனம் ஜில்லா பேலூர் தாலூகாவுக்கு 6-மயில் தூரத்தினுள்ள ஹளேபீடு என்னும் கிராமத்தில் ஓர் அற்புதமான ஜைனர்கோயில் இருக்கிறது. அது இவ்வரசனால் ஆதரிக்கப்பட்டதென்று கூறுகிறார்கள்.

எது எவ்வாறாயினும் நமது சரித்திரப் போக்குக்கு முக்கியமாய் அத்தேசத்தரசனொருவன் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளுக்கு சிஷ்யனாகி வேண்டிய உதவிபுரிந்தானென்பது மாத்திரமே வேண்டுவது.

பிரதிதினமும் அணிந்துகொள்ள வேண்டியதற்காகக் கையோடு பாதுகாத்துவரப்பட்ட திருமண் (வெளுப்பு நிறமுடைய மண்)கவர்கள் எல்லாம் செலவாய்விட்டதனால் திருமண்ணுக்கென்ன செய்கிறதென்று ஸ்ரீ பாஷியகாரஸ்வாமி

கள் சிந்தித்துக்கொண்டே சயனித்தவன்றிரவில் ஒரெம் பெருமான் இவர்கள் முன் தோன்றி 'யதுகிரி' என்னுமிடத்துக்கு வந்து தன்னைக்காணும்பக்ஷத்தில் திருமண் கொடுப்பதாகவும், தாம் ஓரர்ச்சாரூபமென்றும் ஸ்வப்னம் காட்டியபடியால் மறுநாளுதயம் அரசனுக்கு இச்செய்தியைத் தெரிவித்து அவனைக்கொண்டு காடுவெட்டி வழியாக்கி யதுகிரி போய்ச்சேர்ந்து அங்கு முழுதும் தேடிப்பார்த்தும் எம்பெருமானைக்காணாது திகைத்து மதிமயங்கித் துயரத்துடனேரிடத்தில் படுத்தார்கள், அன்றிரவில் அவ்வெம்பெருமானிவருக்கு மறுபடி காட்சிகொடுத்து கல்யாணஸரஸ்ஸின் தென்மேற்கு மூலையில் ஓர் மகிழமரமிருக்கிறதென்றும், அதற்குத் தெற்கே ஓர் பெரிய திருத்துழாய்ச்செடியிருக்கிறதென்றும், அதன் கீழே பெரிய புற்றிருக்கிறதென்றும், அதற்குள் தாமிருப்பதாகவும், கல்யாணஸரஸ்ஸின் வடமேற்கு மூலையில் சுவேதத்வீபத்திலிருந்து கொண்டுவந்து திருமண் என்றுமழியாதபடி சேமித்து வைக்கப்பட்டிருக்கிறதென்றும், தாமிருக்குமிடம் வரையில் வழி அடையாளம் தெரிவிக்கும்பொருட்டுத்திருத்துழாய்ச்செடிகள் முறிக்கப்பட்டிருக்குமென்றும் தெரிவித்து மறைந்தார். உதயமான உடனே ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் வேதபுஷ்கரிணியில் நீராடி நித்யகர்மம் முடித்து தத்தாத்ரேய பகவான் ஸன்யாஸாச்ரமஸ்வீகாரம் செய்த இடமாகிய பரிதான சிலையைத்தண்டனிட்டு அங்கே தாமும் புதிதாகத் திரிதண்ட காஷாய பரிக்ரஹம் செய்து திருத்துழாய்ச்செடி முறித்தவழியே சென்று புற்றைச்சோதிக்க அதற்குள்ளே ஒரு கோயில் காணப்பட, எல்லோரும் பேராவலோடு கோயிலைச் சோதித்து நாராயணனைக்கண்டு க்ஷீராபிஷேகம் செய்து கொண்டாடி ஸேவித்து அரசனுக்கும் ஸேவைசெய்வித்து அவனைக்கொண்டு அக்கோயிலை ஜீர்

ஜ்ஜேத்தாரணம் பண்ணுவித்து அதைச்சுற்றி மண்டபாக ராதிகளை நிர்மாணம் செய்வித்து ஸ்ரீ பாஞ்சராத்திர சாஸ்திர முறைப்படி பிரதிஷ்டாப்ரோக்ஷணாதிகளைச் செய்வித்து, நித்தியாராதனாதிகள் குறைவற நடத்திவரும்படி யேற்பாடு செய்து வைத்தார்கள்.

அப்படிப்பூற்றையகற்றிக் கோயிலைக் கண்டுபிடித்தது கலி. 4200, சா. ஃ. 1021, (கி. பி. 1099) பகுதானியஸூ பங்குனிமீ சுக்லபக்ஷ தசமீ புநர்வஸு நக்ஷத்திரம் கூடிய வியாழக்கிழமை தினமாம். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அவ்வூருக்குத் திருநாராயணபுரமென்று பெயரிட்டார்கள். ஸ்வப்நத்தில் குறித்துக்காட்டியபடி கலியாணஸரஸின் வடமேற்கு மூலையில் திருமண் இருப்பிடமும் கண்டு பிடிக்கப்பட்டது.

நித்யம் நைமித்திகம் முதலிய உத்ஸவங்கள் செய்விக்கவேண்டியதற்காக உத்ஸவபேரத்தை யெங்குத்தேடியும் காணாமல் ஸ்வாமிகள் துயரப்பட்டபோது நாராயணப்பெருமாள் தமது உத்ஸவபேரம் டில்லி ராஜகிருகத்தில் இருப்பதாகவும், அங்கே சென்று அவரைப்பெற்று வரவேண்டியதாகவும் ஸ்வப்னத்தில் நியமித்தார். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அந்த நியமனத்தை சிரமேற்கொண்டு அடியார்களோடு டில்லிக்குப் பிரயாணமானார்கள். டில்லியில் அரசுபுரிந்துவந்த ஓர் அரசன் திவ்யதேசங்கள்தோறும் விக்கிரஹங்களைக் கொள்ளையாடிக்கொண்டு வந்து வைத்திருந்தான். அவன் பெயர் 'எம்மாடுராயன்' அல்லது 'இம்மடிராயன்' என்று சிலநூல் கூறும். அவன் யவனஜாதியான்.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் டில்லி நகரம் போய்ச்சேர்ந்தார்கள். அவன் கீழதிகாரிகள் ஸ்வாமிகளிடத்தில் விசேஷ பக்தி விசுவாஸங்களை வஹித்தவர்களாக இருந்தால் டில்லி சக்கிரவர்த்தியானவன் அவர்களால் ஸ்ரீபாஷி

யகாரரது வைபவங்களைக்கேட்டும் தேஜோவிசேஷத்தைப் பார்த்தும் மிகுந்த பிரீதியை வைத்தவனாகி ஸ்வாமிகளைத் தனது தோட்டத்தில் சுத்தமான ஓரிடத்தில் வரவழைத்து மரியாதைசெய்து 'வேண்டுவதென்ன' என்று பணிவாய்க் கேட்டான். ஸ்வாமிகள் தாம் தேடிவந்த* 'ராமப்ரியர்' விக்கிரஹத்தைத் தரவேண்டுமென்று கோரினார்கள். கொள்ளையடித்துக் கொண்டுவந்த விக்கிரஹங்கள் சேர்த்து வைக்கப் பட்டிருந்த அறைகளைத்திறந்து காட்டும்படி அரசன் உத்திரவிட்டான். அங்கு எங்குந்தேடியும் 'ராமப்ரியர்' கிடைக்கவில்லை. அதனால் ஸ்ரீபாஷியகாரர் மனம்

*திருநாராயணப் பெருமாளது உத்ஸவ விக்கிரஹத்துக்கு 'ராமப்ரியர்' என்று பெயர். ஸ்ரீராமாவதாரத்தில் இக்ஷ்வாகுமுதல் பரம்பரையாய் ஆராதிக்கப்பட்ட ரங்கநாதனை விபீஷணனுக்கு வெகுமதியாகக்கொடுத்தபின் ஸ்ரீராமனே சிந்தைப்பட்டுக்கொண்டிருக்க, பிருஹ்மதேவன் அந்த ரங்கநாதனது அம்சமாகிய ஒரு மூர்த்தியை ராமனுக்குக் கொடுத்தாரென்றும், ஸ்ரீராமபிரானது குமாரனான குசன் தன் குமாரி கனகமாலினியை யதுபூஷணனென்றும், யதுகுலத்தரசனுக்கு மணம்செய்து கொடுத்தபோது ஸ்ரீதனமாக அந்த மூர்த்தியையும் கொடுத்தானென்றும், அதுமுதலாக யதுவம்சத்தார் ஆராதித்து வந்து கடைசியாக வாஸுதேவர் பலராமன் கண்ணபிரான் இவர்களால் ஆராதிக்கப்பட்டதென்றும், தீர்த்தயாத்திரையாகப்பலராமர் முதலானோர் யதுகிரிவந்தபோது அந்த மூர்த்தி அங்கே திருநாராயணப்பெருமாளோடே சேர்த்து ஸ்தாபிக்கப்பட்டதென்றும், இது பற்றியே அந்த மலைக்கு யதுகிரியென்று பெயர் வந்ததென்றும் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமபிரான் ஆராதித்தமைபற்றியும், பலராமர் வெகு ஆதரவோடு ஆராதித்தமைபற்றியும், அவருக்கு ராமப்ரியர் என்ற பெயர். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளும் பலராமனைப்போலே ஆதிசேஷனது அவதாரமாகையாலே ராமப்ரியரிடத்தில் அதிக அன்பு வைத்திருந்தாரென்று சிலர் கூறுவர்.

வாடிப்பதைத்து ஆஹாரமில்லாமலே உபவாஸத்தோடு சயனித்தார்கள்.

தாம் டில்லி ராஜபுத்திரியினது கன்னிகா மாடத்தில் அவளால் பர்த்தாவாக உபசரிக்கப்பட்டு அவளது படுக்கையறையில் இருப்பதாக ராமப்ரியர் அன்றிரவு ஸ்ரீஸ்வாமிகளுக்கு ஸ்வப்னம் ஸாதித்தார். மறுநாள் காலையிலெழுந்து நித்யாநுஷ்டானம் முடித்து அரசனிடம் சென்று வரலாற்றைத் தெரிவிக்கவே அரசனும் ஸ்வாமிகளுடன் கன்னிகா மாடவாசல் வரையில் சென்று அந்த முன்மண்டபத்தில் உட்கார்ந்து தன் மகளுக்குச் செய்தி சொல்லியனுப்புவதாகத் தீர்மானித்தான்.

அந்த விக்கிரஹத்தினிடத்தில் ராஜகுமாரி மட்டில்லா அன்பு வைத்திருப்பது ஸ்வாமிகளுக்கு ஸ்வப்னத்தால் தெரிந்திருந்தபடியாலும், அரசனுக்குப் பெண்ணிடத்தில் வாத்ஸல்யம் அதிகமாயிருப்பது இப்போது தெரிந்தபடியாலும், அவளுக்குத் தெரிந்தால் தமதிஷ்டம் நிறைவேறுவது அஸாத்தியமென்று ஸ்வாமிகளுக்குத் தோன்றவே வேறே ஒரு வியாஜமாய் அதைத் தடுத்துவிட்டார்கள். தாம் அநுஷ்டானத்துக்கு விரைவாய்ச் செல்லவேண்டுமென்று துரித்தார்கள். தான் இவ்வாறு செய்யவேண்டுமென்று தெரியாமல் அரசன் சிறிது நேரம் திகைத்தான். 'எனது குமாரியின் உத்திரவு பெறாமல் இதற்குள் யாரும் போகமுடியாது, உள்ளே யிருப்பது உங்கள் தெய்வமானால் நீங்கள் இங்கிருந்தே அழையுங்கள், தானாகவே வந்தால் நீங்கள் எடுத்துப்போகலாம்' என்று அரசன் முடிவாய் உத்திரவு செய்துவிட்டான்.

ஸ்ரீஸ்வாமிகள் பக்திபூர்வகமாய் ஸ்துதி செய்து

"வருக வருக வருகவிங்கே வாமனநம்பீ வருகவிங்கே
கரியகுழல் செய்யவாய் முகத்தென் காகுத்தநம்பீ வருகவிங்கே

"......அஞ்சனவண்ணா அசலகத்தார்
பரிபவம்பேசத் தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கே போதராயே."

(பெரியாழ்வார் திருமொழி 2-ல் 9-பதிகம் 2-பாட்டு) என்றுரதரவோடழைத்தார்கள். ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அழைத்த குரல் ராமப்ரியரது செவியில் பட்டது. கிருஷ்ணாவதாரத்தில் யசோதை கூப்பிட்ட குரல்போலிருந்தது. அத்தோடு அச்சக்குறிப்பும் துயரமும் தோன்றியது. டில் விராஜகுமாரி அந்த ராமப்ரிய விக்கிரஹம் அழகாயிருந்தமை பற்றி முதலில் விளையாட்டுக்காகத் தன் கன்னிமாடத்துக்குக் கொண்டு வந்தாள். நாளாவர்த்தியில் ப்ரீதி அதிகரித்து மனப்பற்று வளர்ந்து அந்த ராமப்ரியரை பர்த்தாவாக வரித்துக்கொண்டாள். ராமப்ரியர் பகற்பொழுதெல்லாம் விக்கிரஹ ரூபமாயிருந்து அவளுக்குச் சுகத்தைக் கொடுப்பார். அஸ்தமயமானவுடனே படுக்கை அறையில் யாருமில்லாது அகன்றுபோனவுடனே தாம் ராஜகுமாரரூபனாகி ராஜகுமாரியோடு கொஞ்சிக் குலாவித் தழுவியணைத்துப் பலவகையும் போகரஸம் தந்தருளுவர். இவ்விருத்தாந்தம் யாருக்கும் தெரியாது. அன்று ஸ்நாநமுறையாதலால் ராஜகுமாரி ராமப்ரியருக்கு எண்ணெயிட்டு ஸ்நாநம் செய்வித்து அலங்கரித்து வழக்கப்படி பொன் வட்டிலில் பஞ்சபக்ஷ்ய பரமான்ன போஜநம் வழங்கித் தாம்பூலம் கொடுத்துக் கட்டிலில் கண் வளர்த்திவிட்டுத் தான் எண்ணெயிட்டு ஸ்நாநம் செய்யச் சென்றாள்.

ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் 'வருக வருக' என்று கூவியழைத்தபோது ராஜகுமாரி நிச்சிந்தையாய் தோழிப் பெண்களோடு உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டெண்ணெயிட்டுக்கொண்டிருக்கிறாள். ராமப்ரியர் யோக நித்திரையிலிருக்கிறார். கஜேந்திராழ்வான் 'ஆதிமூலமே' என்று கூவியபொழுதும், பாஞ்சாலீ 'கோவிந்தா' என்று கதறியபொ

முதும் மனம் திடுக்கிட்டதுபோலத் திடுக்கெட்டெழுந்து நின்றார். மஹிஷிகளை விட்டோடி வந்து பாதுகாப்பது வழக்கமாயிற்றே; அவ்வாறே ராமப்ரியரும் ராஜகுமாரியை யெதிர் பாராது உபேக்ஷித்துக் காலிலிட்ட சதங்கை கல் கல் என்றொலிக்கக் கிங்கிணிகள் ஆரவாரிக்க, உடைமணி கணகணென்ன, திருமுகத்திற் சுட்டித்திகழ்ந்தெங்கும் புடை பெயர மின்னுக்கொடியுமோர் வெண்டிங்களும் சூழ்பரி வேடமுமாட்டப் பின்னித்துலங்கு மாசிலையும், பீதகச்சிற் றுடையோடும், மின்னிற்பொலிந்ததோர் கார்முகில் போலக் கழுத்தினிற் காறையோடும், துடர் சங்கிலிகள் சலார் பிலாரென்னக் குதித்துக் குதித்துக்கொண்டே ஓடிவந்து இளையாழ்வார் மடியில் ஏறியுட்கார்ந்துவிட்டார்.

ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் 'என் செல்வப்பிள்ளையே என்றணைத்துக்கொண்டார்கள். அது முதலாக ராமப்ரிய ருக்குச்செல்வப்பிள்ளையென்று திருநாமம் (பெயர்) வழங்க லாயிற்று. ராஜகுமாரி ராமப்ரியருக்குக் காதிலிட்டிருந்த பெரியமுத்து முருகலைக் கண்டு ஸ்வாமிகள் மனம் பூரித்தது. இவ்வதிசயத்தைக் கண்ட ராஜா ஸ்வாமிகளை விசேஷமாகப் பூஜித்து ராமப்ரியரோடு ஊர்போய் சேரும்படி கட்டளை கொடுத்துவிட்டான். அரசன்யவனனுகையால், மறுபடி எவ்விதம் மாறுதலான உத்திரவு செய்வானோ என்னும் அதிசங்கையால் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகள் அங் கொரு நிமிஷமும் தாமதியாமல் புறப்பட்டுக் கடுநடை யாய்த் திருநாராயணபுரம் திரும்பினார்கள்.

பலநாள் பிரிந்திருந்து ஒரு தோழி அன்று புதிதாய் வந்திருந்ததால் ராஜகுமாரி ஸ்நாநம்செய்து போஜனம் முடித்து அவரவர்களை அனுப்பிவிட்டுத் தன் உல்லாஸசாலை வந்துசேரக் கொஞ்சம் தாமதமாயினது. உல்லாஸ மண்டபத்தைச் சிங்காரித்துவைத்துப் படுக்கையறையில்

சென்று பார்த்தபோது தனது பிராணநாதன் காணப்படாமற்போகவே மூர்ச்சித்து விழுந்தாள். சிறிதுநேரம் கழித்துத்தானகவே தேறினள். அவர் இராக்காலங்களில் பரிஹாஸத்துக்காக ஒளித்துக்கொண்டு அழவிடுவது வழக்கமாகையால் இன்று புதிதாய் பகல்பொழுதிலும் அவ்வாறு லீலை செய்வதாக நினைத்து அங்கு முழுதும் தேடிப் பார்த்தாள். எங்கும் காணப்படவில்லை. பின்பு துயரப் படத்துடங்கிப் பலமுறை பலவிதமாய் அழுது அலற்றியாயிற்று. ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாய் விசாரிக்கப்பட்டதில், யாரோ ஒரு ஸந்நியாஸி வந்து அரசனை வசப்படுத்திக்கொண்டு அவ்விக்கிரஹத்தை யெடுத்துப் போய்விட்டாரென்று ராஜகுமாரிக்குத் தெரியவந்தது. இதைக்கேட்டபின் இராஜகுமாரிக்குப் பிராணன் போய் விட்டது போலாயிற்று. ராமப்ரியர் மறுபடி தன்னருகே வந்தாலொழியத் தான் ஆஹாரம் செய்வதில்லை யென்று பிரதிஜ்ஞை செய்துவிட்டாள்.

இந்தச் செய்தி அரசனுக்கு மறுநாட் காலைதான் தெரியவந்தது. அவன் தன் குமாரிக்குப் பலவாறு தேறுதல் சொல்லியும் அவள் கேட்கவில்லை. ராஜன் யவனனாகையாலும், அவனுக்கு அவள் ஒருத்தியே பெண் ஆனதாலும், அந்த ஸந்நியாஸியைப் பின்துடர்ந்தோடி மடக்கி அந்த விக்கிரஹத்தைப் பிடுங்கி வந்துவிடுங்களென்று கட்டளை யிட்டுத் தன் குதிரைப்படைவீரர் சிலரை அனுப்பினன். இவ்வாறு அரசன் புத்தி மாறுபடக்கூடுமென்று முன்னமே ஸ்வாமிகள் எதிர்பார்த்திருந்தபடியால் இராப்பகல் பேதமின்றி யெங்கும் நிற்காமல் கடுநடையாய்த் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போய்க்கொண்டிருந்தவர்கள் ஓர் பகுதி குதிரைவீரர் படைவேகமாய் தங்களைத்துடர்ந்து வருவதைக்கண்டு மனம் கிலேசித்து மறைவான

ஒரு பள்ளத்தாக்கில் வந்தவுடனே வழியைவிட்டு விலகி வெகு தூரம் ஓடிச்சென்றார்கள். மறைவாய் ஓரிடத்தில் ஒளிந்துகொண்டாலல்லது அவ்வபத்துக்குத் தப்பமுடியாதென்பது நிடமாய்விடவே அங்கே அருகே இருந்த பறைச்சேரியாரின் உதவியைவேண்டி வேண்டிற்று.

அவர்கள் இச்செய்தியை யெல்லாம் கேட்டு மனமிரங்கித் தங்கள் சேரிக்கு அடுத்துள்ளதோர் மலைக்குகைக்குள் அவர்களனைவரையும் போகச்செய்து, அதன் வாயிலில் சேரிப்பறையர் எல்லாரும் சேர்ந்து ஏதோ திருவிழா நடத்துவதாகப் பாவனைசெய்துகொண்டிருந்தார்கள். குதிரைப் படைவீரர்கள் வழியே போய்க்கொண்டிருந்தவர்கள் முன்னே சென்றவர்களைக்காணாது எதிரே வருபவர்களைக் கேட்க, அவர்கள் யாரும் செல்லவில்லையென்னவே திரும்பி மூலைக்குமூலை தேடிக்கொண்டே அச்சேரிக்கருகே வந்து சேர்ந்தார்கள். அங்கும் யாதொன்றும் புலப்படவில்லை. சில பிராஹ்மணர்கள் இங்கு வந்ததுண்டோ என்று அச்சேரியாரைக் கேட்டார்கள். காதவழிதூரம் வரையில் எங்களினத்தார் சேரித்தொடர்ச்சியாயிருப்பதால் இங்கே பிராஹ்மணர்கள் எப்படி வரக்கூடுமென்று சேரியார் கூறினார்கள். அன்று மாலைப்பொழுதுக்குள் திரும்பிவிடும்படி அரசன் கட்டளையாகையால் குதிரைப்படைவீரர்கள் செய்வதிதுவென்றறியாமல் வந்தவழியே திரும்பிப்போய்விட்டார்கள்.

(இன்னும் வரும்.)

ச்யாம-திருமலை தாதாசாரியர்.

# சுரங்கவழியிலோர் சம்பவம்.

உதயநாராயணபுரம் என்னும் சிற்றூரில் மகாதேவய்யர் என்றொரு பிராம்மணர் இருந்தனர். அவர், வெள்ளைக்காரர்கள் நமது நாட்டுக்கு வந்ததும், ஆங்கிலேயம் கற்றுக் கொஞ்சம் முன்னுக்கு வந்த பழைய பிராம்மணக் குடும்பங்களைச் சேர்ந்தவர். இதனாலேயே அவரை சற்று ஜாதியில் குறைவாயே எண்ணி. நிமர்தரண வைதிகர்கள் பேசுவதண்டு. இதையறிந்து தான் நமது ஐயரும் தமது வீட்டில் நடக்கக்கூடிய வைதிக காரியங்களுக்கு நல்ல சாப்பாடு போட்டும் அக்கம் பக்கங்களில் கொடுக்கக்கூடிய தக்ஷிணையைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாகவே கொடுத்தும் மேற்கூறிய பேராசைப் பேய்களைத் திருப்தி செய்யப்பார்த்தனர்.

மகாதேவய்யர் பீ. எ. பரீக்ஷையில் தேறியவர். அவரது ஊருக்குச்சுற்றி ஐம்பதுமைல் தூரத்திலுள்ள கிராமங்கள் வரையில் இங்கிலீஷ் எழுத்துவாசனையறிந்திருந்தவர் வேறொருவருமில்லை. இதனால் அவருக்கு இங்கிலீஷ் மகாதேவய்யர் என்றும், பீ. எ. மகாதேவய்யர் என்றும்பேர் வந்தன. அவர் அந்நாளில் பெரிய வேலைகளிலிருந்து பெருந்தனமும் புகழும்பெற்று உபகாரசிவேதனம் பெற்றுவாழ்ந்தனர்.

அவருக்குப் பன்னிரண்டு வயதில் ஒரு மகன் இருந்தான். பின்னும், அவர் வீட்டிலேயே வளர்ந்து வந்த அவரது தங்கை மகன் கோபாலனும் இருந்தான். இவ்விருவர்களும் வேகுநேசம். கணேசனும் கோபாலனும் சென்னையில் "பச்சையப்பன் காலேஜில்" எப்.

ஏ. பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தனர். கோடை லீவாகையால் உதயசா ரயணபுரத்துக்கு வந்திருந்தனர்.

ஒரு நாள், தமது நண்பர் ஒருவர் வரச்சொல்லுகிறாரென்று, மகாதேவய்யர் ரயிலேறி ஊருக்குப் போகப்புறப்பட்டார். கோபாலனையும் துணைக்கு அழைத்துக்கொண்டார். உண்மையில் துணைக்கல்ல. சிறுவேலைகள் செய்வதற்காகத்தான் அழைத்துக்கொண்டு போனார். அவர்கள் ரயில்வே ஸ்டேஷனில் தங்கள் வண்டியை விட்டுக் கீழிறங்கி, ரயில் வந்துவிடுமோ வென்றஞ்சி, வெகுவேகமாக ஓடினர். கோபாலன் சிறு பையன். அவன் ஒரே ஓட்டமாய் ஓடிப் போய்விட்டான். ஐயரோ, தமது பெருத்த தேகத்தைத் தூக்கிக்கொண்டு ஓட முயல்கையில் கல்விடறி இரண்டு மூன்றுதரம் கீழே விழுந்துவிட்டார். உள்மூச்சு மேல்மூச்சு வாங்கக் கடைசியாய் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்.

சிறிய ஸ்டேஷன்களிலெல்லாம் அதிக கட்டுப்பாடு கிடையாதாகையால் ஐயர் வெகுவேகமாய் உள்நுழைந்து, வண்டித்தொடரில் முதல் வகுப்பில் ஒரு அறை பார்த்து, ஏறுவதற்குத் தலையை நீட்டினார். உடனே, "அடடா, மறந்துபோய் விட்டேனே" என்று சொல்லிக்கொண்டு 'டிக்கட்' வாங்குவதற்குத் திரும்பியவர், திரும்பிய வேகத்திலும் அவசரத்திலும், கீழே நின்றுகொண்டிருந்த ஒரு ஸ்திரீயின்மேல் விழுந்து, அவள் கையில் வைத்துக்கொண்டிருந்த நாய்க்குட்டியையும் வெகு கோரமாகக் கதறும்படி செய்துவிட்டார்.

"ஏனய்யா அவசரப்படுகிறீர்? இன்னும் வேண்டிய சாவகாசம் இருக்கிறது. மூன்று நிமிஷம் வண்டி நிற்கும்" என்று ஒரு சட்டைக்கார "கார்டு" சொல்லிப்போனான்.

இவன் சொன்ன பிறகு, 'டிக்கட்' வாங்கப்போவதைப் பற்றி யோசிக்காமல், தனது சட்டைப்பையினின்றும் பெரியதோர் கைக்கடிகாரத்தை யெடுத்துப்பார்த்து, ரயில்வே கடிகாரங்கள் எல்லாம் வெகு தாமதமாகப் போகின்றனவென்று தூஷிக்கவாரம்பித்துவிட்டார். கணேசன் பக்கத்திலிருந்தால், அவருடைய கடிகாரந்தான் வேகமாகப் போகிறதென்றும் சொல்லியிருப்பான். நான் ஒன்றுஞ்சொல்லவேயில்லை.

"கோபு இரண்டிடம் விட்டுவை" என்று ஐயர்சொன்னதும், நான் என் மேல்வேஷ்டியையும், குல்லாவையும் போட்டுவிட்டு,

அவருடன் கூடப்போனேன். ஐயருக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் தாமதமாய் விட்டால், பதைபதைப்பும் உடனே வந்துவிடும். முதன் முதலில், 'டிக்கட்' கொடுக்குமிடத்தில் போய் நின்றார். நின்றதும், அவரது தேககாத்திரத்தால், அவ்விடத்துக்கு வேறொருவரும் வர மாட்டாமல், தடையுண்டாகிவிட்டது. தமது சட்டைப்பையில் கையைவிட்டு, அதினின்றும் பணப்பையை யெடுத்து, பத்து ரூபா 'நோட்டு' ஒன்றைக்காட்டி இதற்குச் சில்லரை கிடைக்குமாவென்று கேட்டார்.

"இல்லை, ஐயா, போ" என்று கனகடுமையாக 'டிக்கெட்' விற்கும் ரயில்வே உத்தியோகஸ்தர் சொன்னார்.

உடனே ஐயர், நோட்டைத்தமது பைக்குள்ளேயே போட்டுவிட்டு, வேறு பையிலிருந்த பணத்தினாலே இரண்டு 'டிக்கெட்' வாங்கிக்கொண்டு வெளியேறிய விபரம், அவருக்கே தெரியாது. இதற்குள் டிக்கட் வாங்குவதற்காகவே பெருங்கூட்டம் கூடிப்போயிற்று. மெள்ள, மெள்ள வெளியில் வந்ததும் 'டிக்கட்' கிரையம்போக மீதச் சில்லரையை எவ்வளவென்று பாராமல் மற்றொரு பைக்குள் கொட்டிக் கொண்டு நேராக வண்டிக்குப்போகாமல், ரயில்வே பெரிய கடிகாரம் வைக்கப்பட்டிருக்குமிடத்துக்குப் போனார்.

தமது கடிகாரத்தைக் கையில்வைத்துக்கொண்டு "பார்த்தாயா? கோபு, சரியாக நாலரை நிமிஷம் வித்தியாசமிருக்கிறது. ரயில்வே கடிகாரத்தையே நல்ல ஸ்திதியில் வைக்காமலிருப்பது மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது" என்றார்.

"இல்லை மாமா எனது கடிகாரம் சரியாகவே போகிறது. ரயில் கடிகாரத்தோடு ஒத்திருக்கிறது."

"சீ முட்டாள்! சரியாகவிருக்கிறதா? அதெப்படியிருக்கும்? ஊருக்குப்போனவுடன் முதல்காரியமாக 'அடிசன்' ஷாப்புக்கு அனுப்பி அதைச்சரியாக்க சொல்லு. இல்லாவிட்டால் உனக்குக் கஷ்டமுண்டாகும்."

கடைசியாய் நாங்கள் ரயில்வண்டிக்குப்போனபோது, நாங்கள் பார்த்திருந்த அறைக்குள் வேறுசிலர் இருந்தனர் என்றாலும், எங்கள் இடம் காலியாகவேயிருந்தது. மகாதேவய்யர் ஒரு புறமாய் உட்கார்ந்தனர். உட்கார்ந்து தனது உடுப்புக்களையெல்லாம் சீர்திருத்

திக்கொண்டனர். அவசரமெல்லாங் கடந்துவிட்டபடியால் வெகு சாவதானமாயிருந்தனர். அவருக்கு எதிராக நாற்பது வயதுள்ள ஒரு பிரபு உட்கார்ந்திருந்தனர். அவரது கையில் ஒரு முத்திரை மோதிரம் இருந்தது. மேலெல்லாம் நல்ல பட்டாடையும், தலையில் ஒரு விலையுயர்ந்த பாகையும் தரித்துக்கொண்டிருந்தனர். எனக்குப் பக்கத்தில் ஒருவர் தங்க மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்தவண்ணமாகவேயிருந்தனர். அவருக்கு அப்பால் ஒரு மூலையில் ஒரு பைத்தியம் பிடித்தவன் இருந்தனன். பத்துநிமிஷங்களுக்குள்ளேயே அவனது குணத்தைக் காட்டிவிட்டான். அடிக்கடி தனது மூட்டைகளை அவிழ்த்துப்பார்ப்பதும், 'போர்ட்டர்'களையும் 'கார்டை'யும் கூப்பிட்டு அநாவசியமான கேள்விகளைக் கேட்பதுமே அவன் தொழிலாய்விட்டன.

உடனே ஒரு சேவகன், உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை, ஜமீந்தார்கள் சேவகனைப்போல உடைதரித்துக்கொண்டு, கதவண்டை வந்து, தாழ்மையுடன் வணங்கி, "துரையே! 'டிக்கட்' இதோ இருக்கிறது" என்று சொல்லி மேற்கூறிய பிரபுவிடம் கொடுத்தான். ஜமீந்தார்கள் அடிக்கடி பிரயாணம் போவதில்லையாதலால் நாங்கள் எல்லோரும் நிமிர்ந்து பார்த்தோம். பிரபு டிக்கட்டை வாங்கித் தமது சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டார்.

"சடையா, ஏதேனும் ஒரு பேபர் வாங்கிவருகிறாயா? இங்கே "ஸ்ரீ வாணீ விலாஸினீ" கிடைக்குமா?"

"அப்படியே செய்கிறேன். துரையே."

"அம்மா, இங்கே இடமிருக்கிறது. சீக்கிரம் ஏறுங்கள்" என்று 'கார்டு' குறுக்காக வந்து நின்று கதவைத்திறந்தான். அந்த ஸ்திரீ யாரெனில், முதன் முதலில் நமது ஐயரால் தாக்கப்பட்டவள் தான். எனக்கு எதிராக அவள் உட்கார்ந்திருந்தாள். உட்கார்ந்ததும், ஒவ்வொருவராக உற்றுப்பார்த்து, மேற்கூறியபிரபுவை நன்றாகக்கவனித்தாள். இதற்குள்ளேயே முன்சொன்ன சேவகன் வந்து "ஸ்ரீ வாணீ விலாஸினீ" வருவதற்கு நாழிகையாகுமென்கிறார்கள்" என்றான்.

"கிடக்கட்டும். அடுத்த ஸ்டேஷனில் வாங்கிக்கொடு"

"அப்படியே செய்கிறேன் துரையே" என்று சடையன் சொல்லியதும், வண்டி புறப்பட்டுவிட்டது. அவன் எப்படித்தான் வண்

டியில் ஏறினுனே அது எனக்குத் தெரியாது. வண்டி 'மெயில்' அன்ருதலின், எல்லா ஸ்டேஷன்களிலும் நின்றுநின்று போகும். நாங்கள் போகவேண்டியது வெகுதூரம்.

"பையா, நீ இந்த இடத்தில் உட்கார்ந்து, எனக்கு உன்னிடத்தை விடுகிருயா?" என்று அந்த ஸ்திரீ என்னைக்கேட்டாள். நானும் உடனே எனது இடத்தினின்றும் எழுந்து, மாமாவுக்கு எதிராகவுட்கார்ந்தேன். அந்த ஸ்திரீ நானிருந்தவிடத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"இவர் எந்தவூர் ஜமீந்தார்?" என்று அவர் ஜன்னலுக்குவெளியே தலையை நீட்டியதும், அவர் காதில்கூடப் படும்படியாக இரைந்த ரகஸியத்தில் மாமாவைக் கேட்டாள்.

"எனக்குத்தெரியாது. எங்களூர்ப்பக்கத்திலுள்ள "முள்ளுக்கோட்டை" "சாம்பற்பட்டி" முதலிய ஜமீந்தார்களைத் தான் எனக்குத் தெரியும்" என்று மகாதேவய்யர் விடையளித்ததும், அந்த ஸ்திரீ மேலாடையில் ஒளித்துவைத்துக்கொண்டிருந்த 'கோம்பை' நாய்க்குட்டி, கனகடோமாய்க் குலைக்கத் தொடங்கிற்று. மாமா பயந்துவிட்டார். நாயிருக்கிறதே அவருக்குத் தெரியாது.

"சும்மாயிரு. குழலி. இங்கேயே குரைக்கிருயா? அது கடிக்காது ஐயா—"

"யார் வண்டியில் நாயை வைத்துக்கொண்டிருக்கிறது? 'கார்டு'! 'கார்டு'! என்று அப்பைத்தியம் பிடித்தவன் உரத்த கூச்சலிட்டான்.

ரயில்வண்டி கனவேகத்துடன் போய்க்கொண்டிருக்கையில் கார்டு எப்படி வருவான்? ஆகவே, அப்பித்தன் சும்மா உட்கார்ந்துவிட்டான்; அம்மாளும் அவனைப்பரிகாசம் செய்வாள்போல, கார்டுக்காகப் பயந்தே நாய்க்குட்டியை மறைத்துக்கொண்டு வந்ததாக கூசாமல் சொன்ஞள்.

இதற்குப்பிறகு அமளியடங்கியிருந்தது. வண்டியோ வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ அடிக்கடி மாமாவுடன் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தால், ஏதோ அவ்விருவருக்கும் வெகுநாளைய பழக்கம்போலிருந்தது. அவளும் நாய்க்குட்டியை மறைத்து வைத்துக்கொண்டிருந்தாள். அதன் தலை மாத்திரம் கொஞ்சம் மேலே தெரிந்தது.

"அடே! இதென்ன விந்தை! வண்டியில் விளக்கு இல்லையே!" என்று அப்பித்தன் சொன்னதும், நாங்கள் எல்லோரும் அண்ணாந்து பார்த்தோம்; விளக்கு அவிந்திருந்தது; ஆனால் முதன்முதல் வண்டியிலேறும்போது விளக்கு எரிந்துகொண்டிருந்தது நிச்சயம். மாமா வண்டியில் ஏறி நிமிர்ந்து நின்றதும், விளக்கு அவர் தலையில் இடிக்கும்போலிருந்தபோது, தீபத்தை நான் பார்த்தேன்.

"நாம் டிக்கட்டு வாங்கப்போயிருந்தபோது இதை அவித்திருக்க வேண்டும்" என்று பாமா சொன்னார்.

"இதன் காரணத்தைச் செம்மையாய் விசாரிக்கிறேன். அடுத்த ஸ்டேஷனுக்குப் பிறகு, பெரிய தரைக்கீழ்ப்பாதை வருகிறது. அதில் விளக்கில்லாமல் எப்படிப்போகிறது?" என்று அப்பித்தன் மறுபடியும் உரத்துக்கத்தினான்.

"அதுவும் ஒரு பொல்லாத நாயொன்று வண்டியிலிருக்கையில்" என்று கோபக்குறியுடன் ஜமீந்தார் சொன்னார். இதற்குப் பிரதியாக, உடனே அந்த நாய் மிகுந்தசப்தத்துடன் குரைத்துக்கொண்டு, அவரை நோக்கிப் பாய்கையில், அந்த ஸ்திரீ கெட்டியாகப் பிடித்து மடக்கிக்கொண்டாள்.

இது சென்ற இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் வண்டியின் வேகம் குறைந்தது. அடுத்துவந்த ஸ்டேஷன் வெகு சிறியது. இரண்டு நிமிஷங்கள் தான் வண்டி நிற்கும். நின்றதும் பித்தன் தலையை வெளியே நீட்டி கார்டைக் கூப்பிட்டான். அத்தருணத்தில், ஜமீந்தார் "நான் ஏற்பாடு செய்கிறேன். என்னையெல்லோரும் தெரிந்துகொள்வார்கள் என்றார். பிறகு சடையனைக் கூப்பிடவும்; அவன் ஓடிவந்து "விலாஸினீ" வேண்டுமா?" என்று கேட்டான்.

"'விலாஸினீ' வேண்டாம்; வண்டியில் விளக்கு இல்லை. உடனே ஏற்றச்சொல்லு" என்றார்.

நாங்கள் எல்லோரும் விளக்கு வரும் வரும் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் வண்டி புறப்படத் தொடங்கிற்று. விளக்கு முன்னிருந்தபடியே ஏற்றப்படாமலிருந்தது. பித்தன் கதறினான். ஜமீந்தாரும் சடையனைக்கூப்பிட்டார். ஒன்றும் பயனில்லை.

"வழிவைக்கிறேன், இதற்கு. இந்த ரயில்வேயில் எனக்குப் பங்குண்டு. இம்மாதிரி அஜாக்கிரதைக்குத் தண்டனை செய்கிறேன்" என்று பித்தன் பிதற்றிக்கொண்டிருந்தான்.

"விளக்கு இருந்தால் நல்லதுதான்; இல்லாதபோனாலும் கெடுதியொன்றுமில்லை" என்று ஜமீந்தார் சொன்னதும், பித்தனுக்குக் கோபம் பொங்கிவிட்டது. "கெடுதியொன்றுமில்லையா! இருட்டில் போகும்போது, இந்த நாய் கடிக்கவரும்; இல்லாதபோனால் ஏதேனும் ஒரு அபாயம் உண்டாகும்; அதுவும் வேண்டாமென்றால், விளக்கிருந்தால் நமது பணமுடிப்புகள் பத்திரமாகவிருக்குமல்லவா?" என்றான்.

"நம்முடைய பணப்பைகளெல்லாம் சரியாகவிருக்கின்றனவல்லவா?" வென்று சொல்லிக்கொண்டு ஜமீந்தார் எல்லோரையும் ஒருமுறை பார்த்தார்.

"நாய் கடிக்காமலிருக்கும்படி நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று அந்த ஸ்திரீ திருவாய்மலர்ந்தாள். பிறகு ஜமீந்தாரை நோக்கி, "ஐயா, நீங்கள் தயவுசெய்து அடுத்த ஸ்டேஷனிலாகிலும் விளக்கு ஏற்றும்படியான ஏற்பாடு செய்யவேண்டும் என்றாள்.

ஜமீந்தார் ஒன்றும் பதிலுரைக்கவில்லை. பித்தனுக்கு உடம்பெல்லாம் நடுக்கமாகவிருந்தது. அவனுக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்துகொண்டு பெரிய புஸ்தகமொன்றை முழுவதும் படித்துவிட்டு, சட்டைப்பையில் கையை நுழைத்து எதையோ தேடிக்கொண்டிருந்த மூக்குக்கண்ணாடிப்பேர்வழி இவையனைத்தையும் கவனிக்கவேயில்லை.

"இதோ வந்துவிட்டது, அந்தச் சுரங்கவழி" யென்று, நாங்கள் மையிருட்டாகவுள்ளவிடத்தில் வந்ததும், பித்தன் கத்தினான். உடனே ஸ்திரீயிடமிருந்த நாய் குதித்துக்கொண்டு கிளம்பி முதவில் என்மீது பாய்ந்து, பிறபாடு மாமாவின்மீதும் பாய்ந்து கத்தத் தொடங்கிற்று. மாமா மிகப்பயந்து, அதைத்தள்ளிவிட்டார். இதையொன்றையும் கவனியாதவள்போல, அந்த ஸ்திரீ பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டுமிருந்தாள். இருட்டில் ஒன்றுந் தெரியவேயில்லை. மாமா கத்துகிறார்; நாய் குரைக்கிறது. இந்தச் சப்தத்தில் ஒன்றும் கேட்கவில்லை.

"வெளியில் பிடித்துத் தள்ளும்" என்று பித்தன் சொன்னான்.

"உன்னைப் பிடித்துத்தள்ளினால் என்ன?" என்று அந்த ஸ்திரீ கோப த்தோடு பதில் சொல்லிக்கொண்டு நாயை ஒரு பக்கமாகத் தள்ளவே, அதை ஜமீந்தார் பிடித்துக்கொண்டார். "அம்மா நீ உன் துணியால் மறைத்துவைத்துக்கொண்டால் நல்லது. ரயில் வண்டியில் நாயை வைத்துக்கொள்வது சிலருக்குத் திருப்தியாக விருக்கமாட்டாது' என்று சொல்லிக்கொண்டு, அவளிடம் நெருங்கிவந்து நாயை அவள் கையில் கொடுத்துவிட்டுத் தம்மிடம் சென்றார். சென்றதும், நாங்க ளும் சுரங்கவழியினின்றும் வெளிவந்துவிட்டோம். பித்தன் பயத்தி னால் நடுநடுங்கிப்போயிருந்தான்.

அடுத்த ஸ்டேஷன் வந்தோம். சடையன் ஓடிவந்து வண்டிக் கதவைத் திறந்தான். ஜமீந்தார் கீழேயிறங்கும்போதே "நான் விள க்கேற்றும்படி சொல்லச்சொன்னேனே, மறந்துபோய்விட்டாயா?' என்று கேட்டுக்கொண்டே யிறங்கினார். சடையனும் தான் கார் டைக் காணாததினால் சொல்லவில்லையென்று விடையளித்துவிட் டான். இத்தருணத்தில் 'கார்டு'ம் வந்துவிட, அவனுக்கு வண்டியில் விளக்கில்லாத விஷயத்தை ஜமீந்தார் தெரியப்படுத்தினார். அவ்வ ளவுதான்; பிற்பாடு ஜமீந்தார் மாயமாய்ப் போய்விட்டார். வண்டியி லிருந்த பித்தன் கார்டைக் கண்டபடியெல்லாம் திட்டினான். கார்டும் விளக்கில்லாமையைப்பற்றி ஆச்சரியபபட்டுக் கொண்டிருந்ததினால் இவைகளைக் கவனிக்கவேயில்லை. கவனித்தாலும் மூன்றுவது வகுப் பில் பிரயாணம் செய்பவர்களைத் தான் அதட்டிப்பேசலாமாகையால் சும்மாவிருந்திருப்பான். விளக்கை ஏற்றினவன் அந்தக் கார்டேயா கையால் அவனுக்கு ஆச்சரியம் மிகுந்திருந்தது. வண்டியிலிருந்த எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஒரு நிமிஷத்தில் விளக்கேற்றிப்போயினன். உடனே வண்டியும் புறப்பட்டுவிட்டது. ஸ்திரீயும் அவளது நாயும் இருந்தவிடமே தெரியாதபடி அவ்வளவு சாந்தமாயிருந்தனர். அடுத்த ஸ்டேஷனும் வந்தது. இங்கே ஐந்து நிமிஷங்கள் வண்டி நிற்கும். உடனே, படித்துக்கொண்டிருந்த மூக் குக்கண்ணாடிப் பேர்வழி தனது கைமூட்டையை யெடுத்துக்கொண்டு இறங்கினார்; இறங்கினதும் அந்த ஸ்திரீயும் தனது நாயுடன் எல்லோ ருக்கும் வந்தனங்கள் செய்துவிட்டு இறங்கினள். நான் அவளுடைய அழகைக் கவனித்துக்கொண்டிருக்கும்போது, மாமா தம்முடைய சட்டைப்பையில் போட்டுக்கொண்டிருந்த பணப்பையைக் காண

வில்லையென்று சொல்லிக்கொண்டு குதித்தெழுந்தார். இதைக்கேட்டதும் வண்டியைவிட்டிறங்கிய ஸ்திரீயும் பயந்தவள்போல நடுங்கிப்போய் நாய்க்குட்டியைக் கீழே நழுவவிட்டாள். உடனே நாங்களும் வண்டியைவிட்டிறங்கினேம். எல்லோருமாக 'ஸ்டேஷன் மாஸ்டர்' இருந்த அறைக்குப் போனேம்; மூக்குக்கண்ணுடிப் பேர்வழி கம்பி நீட்டிவிட்டான். மாமாவின் பணப்பையில் நூறு ரூபாய் நோட்டுகளில் பத்தும், சில்லரைகளும் இருந்தன. அவரது பேரையும் ஊரையும் கேட்டதும், அங்கிருந்தவர் எல்லோரும் மரியாதை செய்யத் தலைப்பட்டனர்.

அந்த ஸ்திரீயும் "ஒருவேளை என் நாய்தான் எடுத்து வண்டியில் போட்டுவிட்டதோ, பாருங்கள்" என்றதும், கார்டு, மாமா, இருவரும் வண்டியைப் பரிசோதிக்க ஓடினர். ஆனல் அங்கேயிருந்தாலல்லவா அகப்படும்; தொங்கிய முகத்துடன் திரும்பி வந்தனர். மாமாவும், முந்திய ஸ்டேஷனிலிறங்கிப்போன ஜமீந்தார் யாரென்று கேட்டதற்கு, கார்டு, தனக்குத்தெரியாதென்று சொல்லிவிட்டான். இத்தருணத்தில் பித்தன் குறுக்கிட்டு "ஐயா, உம்முடைய பணப்பை வண்டியில்தான் யாராலாவது எடுக்கப்பட்டிருக்கவேண்டும். அங்கிருந்த நால்வரில், முந்திய ஸ்டேஷனிலிறங்கியவர் பெரிய ஜமீந்தாராகையால் சந்தேகப்படத்தக்க நடத்தையுள்ளவராகவிருக்கமாட்டார். இவ்விடத்தில் இறங்கியவன் மறைந்துவிட்டான்: போக மற்றைய இருவரும் இருக்கிறேம். எங்களைப்பரிசோதனை செய்துவிடுவது நலம்" என்றதும், அந்த ஸ்திரீ தனக்கும் சம்மதந்தானென்று முன் வந்தாள். மாமாவுக்கு இவ்விஷயம் இஷ்டமில்லாதபோதிலும், பித்தனும் ஸ்டேஷன்மாஸ்டரும் செய்த பிடிவாதத்தால் ஒப்புக்கொண்டார். வண்டி உடனே புறப்பட்டுவிடும் போலிருந்ததால் பித்தனை முதலில் பரிசோதித்தனர். அவனிடம் ஒன்றுமில்லை. ஸ்திரீயும் வேறு அறையில் இரண்டு இதர ஸ்திரீகளால் பரிசோதிக்கப்படுவதற்காகப் போயினள். போனதும், பித்தன் தனது பேர், ஊர் முதலியவைகளைச் சொன்னன், உடனே மாமா திடுக்கிட்டுவிட்டார். ஏனெனில், பித்தனென வேஷம் போட்டுக்கொண்டிருந்தவர் அந்தப் பிரதேசங்களில் வெகுவாய்ப் பிரபலமான ஓர் தனிகர், அவ்வளவு கண்ணியமுள்ள ஒருவரைக் கேவலம் திருடனைப்போலப் பாவித்துப் பரிசோதனை செய்யச் சம

மதித்ததற்காக மாமா அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகையில், அவர் "நான் பரீக்ஷாதனைக்குச் சம்மதப்படாமற்போனால், அந்த ஸ்திரீயும் சம்மதப்படமாட்டாள். எனக்கு அவள்மேல் சந்தேகம் இருந்தது" இல்லாவிட்டால், நாம் சுரங்கவழிக்குள் வந்ததும், நாயைச்சூறைவிட்டு வேடிக்கை பார்த்தது எதற்காகவிருக்கலாம்? இன்னுமொன்றுகூடத் தோன்றுகிறது: எனக்குப்பக்கத்திலிருந்த மவுனவாதியும் அவளுடன் சேர்ந்தவனென்றே தோன்றுகிறது. எனக்கு அவளுடைய நடவடிக்கையே பிடிக்கவில்லை" என்று சொல்லிவிட்டு, ரயிலேறினான்; உடனே ரயிலும் புறப்பட்டுவிட்டது. உடனே அந்த ஸ்திரீயும் திரும்பிவந்தாள். அவள்மீதும் ஒன்றும் அகப்படவில்லை, தன்னைப் பரிசோதித்த இரண்டு ஸ்திரீகளும் கன கொடுமையானவர்களென்றும், அவர்களைப் போன்றவர்களைத் தான் இதற்கு முன்பு பார்த்ததேயில்லையென்றும் கோபத்தோடு சொல்லிக்கொண்டு, "பணப்பையைத் திருடிக்கொண்டோடினவன் மூக்குக்கண்ணாடிப் பேர்வழியாகத் தானிருக்கவேண்டும்" என்று முடித்தாள். மாமாவும் அப்படியே யிருக்கலாமென்று நம்பினார். உடனே அவன் போனவழியைத் தேடிக்கொண்டு போன சில நாழிகைக்கெல்லாம், ஒரு வயலில் வரப்பின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்த மூக்குக் கண்ணாடிப் பேர்வழியைப் பிடித்துக்கொண்டார்.

"போக்கிரித்தனமா? இப்படியா மோசம்பண்ணித் திருடுகிறது?" என்று மாமா தனது கோபமெல்லாந் தோன்றும்படிச் சொன்னார்.

"மன்னிக்கவேண்டும். இது உங்களுடையதென்று தெரியாது. இருந்தாலும் நான் எடுத்துக்கொண்டு ஓடிப்போகவில்லை" என்றான் மூக்குக்கண்ணாடிப் பேர்வழி.

"நன்றாகச் சொன்னாய்! செய்தது போக்கிரித்தனம். ஓடிப்போகவில்லையென்று சாக்குச் சொல்லுகிறாய்? பார், இதோ, போலீஸ் ஸ்டேஷனுக்குச் சொல்லியனுப்பி உன்னை ஜெயிலில் போட்டுவிடுகிறேன். போக்கிரி, திருடா! என்று மாமா கத்தினார்.

"ஐயா, இந்த அற்பகுற்றத்துக்காக வென்னை வைவது நியாயமா? ஒருக்கால் பொதுப்பொருளாகவிருக்கலாமென்று நம்பிவிட்டேன். மன்னிக்கவேண்டும்.

"பொதுப்பொருளா! என்னுடைய பணப்பையா பொதுப்பொருள்! பலே திருடன் நீ!"

"உம்முடைய என்ன?"

"என்னுடைய பணப்பை. என்னவா? இதுவும் என்ன மோசம் பண்ணப் பார்க்கிறாயா?"

"உம்முடைய பணப்பையைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. நீர் சொல்வது எனக்குப் பொருள்படவில்லை." என்று அவன் வெகு சாவதானமாய்ச் சொன்னான்.

மாமாவுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. என்றாலும் கொஞ்சம் தைரியத்துடனேயே "நான் சொல்வதா படவில்லை? சற்றுநேரத்துக்கு முன்புதானே என் பணப்பையைத் திருடியதாக வொப்புக் கொண்டாய்?"

"நான் ஒப்புக்கொண்ட விஷயம் வேறு. இந்த வயலில் ஒரு விதமான மூலிகை ஒன்று கண்டேன். இதுதான் உங்களுடையதோ என்று நான் சொன்னேன். இதைத்தவிர வேறொன்றையும் நான் அறியேன்" என்று அவன் கள்ளங்கபடமற்ற குரலுடன் சொன்னதும், மாமா மயங்கிவிட்டார்.

"மூலிகையா நான் தேடிக்கொண்டு வந்தேன். நீ முட்டாளா, என்ன?"

"இல்லை, ஒருக்கால், உம்முடைய வார்த்தையினின்றும் இந்த வயல் உங்களுடையதாகவிருக்கலாமென்று கொண்டேன்."

"அது ஒன்றும் இல்லை. என்னுடைய பணப்பை காணமற் போய்விட்டது. அதில் பத்து நூறுரூபாய் நோட்டுக்கள் இருந்தன. வண்டியில் தான் காணமற்போய்விட்டது; எனக்குப் பக்கத்தில் நீ இருந்தாயல்லவா?" என்று மாமா சொன்னார்.

சமாசாரங்களை யறிந்ததும், மூக்குக் கண்ணாடிப் பேர்வழி, தான் ஒரு பெரிய வைத்தியனென்றும், அங்குள்ளவோர் அபூர்வ மூலிகையை ஓர் மருந்துச்சரக்காகக் கொண்டுபோகவந்தவனென்றும் சொல்ல, இதற்குச் சான்றாக தன் சட்டைப்பைகளிலிருந்து பல கடிதங்களை யெடுத்துப்போட்டான். அதற்கு ஏற்றாற்போல, அவ்வைத்தியனை நன்றாயறிந்த ஒருவன் அவ்வழியே வந்து அவர் தாம் "வைத்திய ரத்னகோவிந்த சாஸ்திரியார்" என்று சொன்னதும் மாமா உடனே அவருக்கு நமஸ்காரம்செய்து மன்னிப்புக்கேட்

டுக்கொண்டதுமன்றித் தம்மூருக்கு வந்தால் இம்மாதிரியான மூலிகைகள் வெகு விசேஷமாய்ச் சேகரித்துக் கொடுக்கச்சொல்வதாய் வாக்களித்துத் திரும்பினர். ஆகவே இதுவும் பிழைபாய் முடிந்தது.

திரும்பி ஸ்டேஷனுக்கு வந்ததும், இதையெல்லாம் கேட்ட அந்த ஸ்திரீ பணப்பையைத் திருடிக்கொண்டு போனவன் ரயிலிலேயே போன பித்தனாகத்தானிருக்கவேண்டுமென்று ஒரே பிடியாய்ச் சாதித்தாள். மாமாவும், ஒருவேளை இது நிஜமாகவிருக்கலாமோவென்று எண்ணினார். என்னவென்றாலும், பணப்பை போனது போனதுதான். அகப்படவேயில்லை.

* * * * *

எட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகு நானும் கணேசனும் சென்னப்பட்டணத்தில் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், எனக்குப் பழக்கமான ஒரு குரல் கேட்டது. யாரென்று திரும்பிப் பார்க்கையில், ரயில் வண்டியில் முன்பு எங்களுடன் கூடப் பிரயாணம்போன ஸ்திரீயும், ஜமீந்தார் என்று வேஷம் போட்டுக்கொண்டிருந்தவனும் வந்தனர். உடனே எனக்குப் பழைய சமாசாரங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. கணேசனிடத்தில் சொல்லிக்காட்டினேன். நாங்களிருவரும் அவர்களைப் பின்றொடர்ந்தோம். அவன் எந்தவூர் ஜமீந்தார் என்று தெரிந்து கொள்வதற்காகவே கூடப்போனோம். எதிர்ப்பட்ட சிலரோடு அவர்கள் பேசின பேச்சினின்றும், ஜமீந்தார் வேஷம் போட்டிருந்தவன் முனியாண்டி தேவனென்னும் பேருடையவன் என்று தெரிந்தது. திடீரென அந்த ஸ்திரீ என்னைப்பார்த்தாள். அவ்வளவுதான்; உடனே எப்படியோ மறைந்துவிட்டனர், அவ்விருவரும் அவ்விருவரையும் உற்று நோக்கிக்கொண்டு அங்கு நின்றவொருவரைக்கண்டு கணேசன் அவரிடம் போய், "அங்குச் சென்றவர் யாவரென்று தெரியுமா, உங்களுக்கு?" என்று கேட்டான்.

"தெரியும்" என்று பதிலுரைத்தார், அவர்.

"அவர் ஜமீந்தாரா?"

"ஆம், சிலவேளைகளில்."

"சிலவேளைகளிலா! எனக்குக் கேட்கவேண்டிய விஷயம் நன்றிருக்கிறது" என்று நான் குறிக்கிட்டேன்.

"ஏதாவது பறிகொடுத்தாயா?" என்று அவர் சாவதானமாய்க் கேட்டார்.

"என் மாமா ஒரு பணப்பையை இழந்துவிட்டார். அப்போது ரயில்வண்டியில் இவ்விருவரும் இருந்தனர். ஆனல் ஒருவரையொருவர் அறிந்திராதவர்போல அப்போதிருந்தனர்."

"ஆமாம்; அப்படியே யிருப்பார்கள். கூட ஒருசேவகனும் இருப்பானே."

"ஆமாம்; இருந்தான்."

"இவர்கள் எல்லோரும் முடிச்சவிழ்க்கிகள். மூன்று பேரும் ஒன்று சேர்ந்து கொள்ளையடிக்கிருர்கள். நாங்களும் இவர்களைப் பிடிக்கிறதற்குப் பார்க்கிறோம். முடியவேயில்லை. எங்களுக்குமேல் பன்மடங்கு சாமாத்தியசாலிகளாக விருக்கின்றனர்."

அவன் ஒரு துப்பு போலீஸ்காரன் என்று தெரிந்தது. நான் பழைய கதையை அவனுக்குச் சொன்னேன். கேட்டபிறகு, "சரிதான், முதலில் புறப்படுவதற்கு முன்பேயே விளக்கை அவித்துவிட ஏற்பாடு செய்துவிட்டார்கள். சுரங்கவழியில் நாய் குரைத்தெழுந்தபோது, அந்த ஸ்திரீ மெதுவாய்ப் பணப்பையை யெடுத்து, ஜமீந்தாரிடம் அவர் நாயை அவளிடம் கொடுக்கவந்தபோது, பணப்பையைக் கொடுத்திருக்கவேண்டும். அடுத்த ஸ்டேஷனில் இறங்கும்போது கையில் கொண்டுபோய் விட்டான். அவள் மாத்திரம் பரிசோதனைக்குச் சம்மதித்து நின்ருள். இதனுல் உங்களுக்கு ஜமீந்தாரிடம் சந்தேகமுண்டாகவில்லை. நல்லவேலை. இருந்தாலும் ஒருநாளைக்கு அகப்பட்டுக்கொள்வார்கள்" என்ருள்.

"இப்போது அவர்களைப் பிடிக்கமுடியாதா? இன்னும் பத்து நாள்களுக்கு இங்கேயே இருக்கப்போகிறதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்களே."

"ஆமாம்; உன்னைப்பார்த்த பிறகு ஒரு நிமிஷங்கூட இங்கே நிற்கமாட்டார்கள். மேலும் என்னையும் பார்த்திருப்பார்கள். ராத்திரி ஒன்பதுமணி வண்டியிலேறிப்போய் விடுவார்கள்; சந்தேகமில்லை பார்."

"வழியில் கண்டு பேசினர்களே, அவர்கள் யாவர்?" என்று கணேசன் கேட்டான்.

"அவர்கள் சாதாரண வழிப்போக்கர்கள். சற்று அறிமுகமாக விருக்கலாம்; என்னவென்றாலும், இன்னும் இரண்டுமணி நேரத்துக்கெல்லாம், அவர்கள் இவ்வூரைவிட்டுப் போய்விடுவார்கள்." என்று சொல்லிவிட்டு, துப்பன் போய்விட்டான்.

இதனுண்மையை யறிவதற்காக நாங்கள் இருவரும் ராத்திரி ஒன்பதுமணிக்கு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனோம். அங்கே இவ்விருவரும், ஒருவனையொருவர் முன்பின் அறியாதவர் போல முதல்வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்தனர்.

"பார்த்தால் பசுப்போன்றிருக்கிறார்கள். கூடவிருப்பவர்களை ஜாக்கிரதையாக விருக்கும்படி சொல்லட்டுமா, கணேசா," என்று நான் கேட்டுக்கொண்டேயிருக்கையில் ரயில் நகர்ந்துவிட்டது. அடுத்தவண்டியில் ஜமீந்தாரனுடைய பழைய வேலைக்காரனும் ஒன்றுமறியாதவன்போல் உட்கார்ந்துகொண்டிருந்ததையும் கண்டோம்.





# தென்னாட்டுக்

## கள்ளர்கள்.

தென்தேயத்திற் சிறந்த ஜாதியார் கள்ளர்கள். இவ்விடத்தினின்றும் வந்தார்களென்பதும் அவர்களுடைய உற்பத்தி விஷயமும் ஒரு சிறிதும் தெரியவில்லை. கள்ளன் என்னுஞ் சொல் கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் ஆகிய பாஷைகளுக்குப் பொதுச்சொல்லாம். நம் நாட்டைச் சுற்றிப்பார்த்த "அபி டியூபாய்ஸ்" என்பவர் 'கள்ள பண்டா' என்பவர் மைசூர் தேசத்தில் திரிகின்றனர் என்று கூறுகின்றனர். கள்ளர்கள் கீழ்நாட்டுக்கள்ளர் என்றும் மேல்நாட்டுக்கள்ளர் என்றும் இரண்டு வகுப்பினராகவிருக்கின்றனர். இவ்விருவகுப்பினருக்குள் மணஞ்செய்வதில்லை. அம்பலக்காரன் என்றும், தேவன் என்றும் முறையே கீழ் மேல்நாட்டுக் கள்ளர்கள் தம் பெயரின் பின் அடைமொழியாய் வைத்துக்கொள்கின்றனர். மேல்நாட்டுக் கள்ளர்கள் காஞ்சியினின்றும் தெற்கே மதுரை ஜில்லாவிலுள்ள மேலூர் என்னும் நாட்டிற்கு வேட்டையினிமித்தம் கை ஈட்டியுடனும் வல்லரித்தடிகளுடனும் வந்ததாக ஒரு சரித்திரம் வழங்குகின்றது. இச்சாதியார் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு மயில் தம் நாயுடன் சண்டையிட்

டதாம். இதைக்கண்டு தங்கள் தைரியத்தையும் பலத்தையும் வளர்க்கும் இந்த நாடு என்று நினைந்து அதையே தங்களிருப்பிடமாகக் கொண்டனராம். உடனே இவர்கள் அத்தேயத்து நிலச்சொந்தக்காரராகிய வேளாளரிடம் வேலையாளாகவமர்ந்தனர். பிறகு நாளடைவில் சிறிதுசிறிதாக அவர் தம் உறவினர் ஒருவர்பின் ஒருவராய் வந்துசேர்ந்து அவர்கள் பெருங்குடியாயினர். இவ்வாறாகச் சில காலத்திற்குப் பிறகு தலைவருடன் இவர்கள் சண்டையிட்டுக் கொண்டனர். மனவருத்தம் நாளுக்குநாள் விருத்தியாகித் தம்மைக் காத்துக்கொள்ளச் சில விதிகள் ஏற்படுத்திக்கொண்டனர். அவைகளுள் முக்கியமான சிலவற்றை எடுத்துரைப்பாம்.

1. தலைவனின் செய்கையால் கள்ளனின் ஒரு பல் உடைந்துபோமானால் பத்து கலிச்சக்கிரங்கள் அவனுக்குக் கொடுக்கவேண்டும்.

2. அவன் காது அறுபடுமானால் ஆறு கலிச்சக்கிரங்கள் தலைமகன் கொடுக்கவேண்டும்.

3. கள்ளனுடைய மண்டை யுடைந்துபோமானால் முப்பது கலிச்சக்கிரங்கள் கொடுக்கவேண்டும். அந்தத் தொகையைக்கொடுக்கச் சக்தியிலனாயின், தலைவனுடைய மண்டையை உடைத்துப்போடவேண்டியது.

4. கைகால்கள் நீக்கப்பெறுவானானால் ஒரு கலம் விதை விதைக்கக்கூடிய நன்செய் நிலமும், ஒரு சிறு புஞ்சை நிலமும் கொடுக்கவேண்டும்.

5. ஒரு கள்ளன் கொலைசெய்யப்பட்டானானால் தலைமகன் நூறு கலிச்சக்கிரங்கள் அவன் உறவினர்க்குக் கொடுக்கவேண்டியது. அப்படிக்

கொடுக்கச்சக்தியிலனானால் அவனை என்னவேண்டுமாயினும் இறந்தவன் உறவினர் செய்யலாம்.

இச்சட்டங்கள் நிரூபணமானபின் வெள்ளாளரின் மேன்மை குறைந்துபோயிற்று. சிலகாலத்திற்குப் பிறகு வேளாளர் வறுமையை யடைந்து ஊரைவிட்டும் ஓடிவிட்டனர். இக்கள்ளர்கள் அனேகரைக் கொலை செய்தனர். பின்னர் இவ்விதம் அடைந்த நாட்டைத் 'தன்னரசு நாடு' என்று சொல்லிக்கொண்டனர். அக்காலத்திய இராசாங்கத்தார் இவர்களைக் கப்பப்பணம் கேட்டபொழுது "யாங்கள் பயிரிடும் நிலத்திற்கு ஆகாயம் மழையைத் தருகின்றது; எங்கள் ஆடுமாடுகளைக்கொண்டு பயிர்செய்து வாழ்கின்றோம்; ஆகையால் யாது காரணத்திற்காக உங்களுக்குக் கப்பப்பணம் கொடுக்கவேண்டும்" என்று சொல்லிச் சிரித்தனராம். திருச்சிராப்பள்ளிமுதல் திருநெல்வேலி வரையிலும் கள்ளர்கள் 1801-ம் வருஷம் வரையும் அருகினிலுள்ளவர்க்குப் பெருந்துயரமிழைத்து வந்தனர்.

மேல்நாட்டுக் கள்ளர்கள் கீழ்நாட்டுக் கள்ளரினின்றும் பிரிந்தவர். 1640-ம் வருஷம் மேலூர்க்கள்ளர்கள் சிறப்புற்றோங்கிய திருமலைநாய்க்கரிடம் சில ஊர்மணியங்களையும் காவற்பகுதி வாங்க அதிகாரமும் பெற்றனர். அருகிலுள்ள மாந்தரைத் தொந்தரை செய்யாமலிருக்கும் பொருட்டே திருமலைநாய்க்கர் இவ்விதம் அதிகாரத்தை யிக்கள்ளருக்குத் தந்தனர். சிறிது சிறிதாக நாடுமுழுமையும் இவர்கள் பரவித்தம் தாய்ச்சாதியரினின்றும் பிரிந்து 'அன்னியர்' அல்லது 'மேல்நாட்டுக் கள்ளர்' என்றமாறு பெயரை வகித்தனர்.

மரவர்களைப்போலக் கள்ளர்களும் சைவர்களே என்றாலும், இவர்களுடைய குலதெய்வம் அழகர்கோயில் வதி

யும் 'கள்ளழகரே'. இக்கள்ளர்கள் பெரும்பான்மையும் மகம்மதியரைப்போன்று "சுண்ணத்" கல்யாணம் செய்து கொள்கின்றனர். மகம்மதியர்களை 'மாப்பிள்ளை' என்றும் இவர்கள் அழைக்கின்றனர். இதனால் மகம்மதிய ராஜ்ஜியத்தில் இவர்களைக் கட்டாயப்படுத்தி மகம்மதியராக மாற்றப்பட்டாரென்றும் நாளடைவில் மறுபடியும் இந்துக்களாயினரென்றும் ஊகித்தறியக்கிடக்கின்றது.

இவர்கள் உறவினரையே மணஞ்செய்துகொள்கின்றனர். தன் அத்தை மகளை வயது ஏற்றத்தாழ்வைக் கவனியாமல் இவர்கள் மணஞ்செய்துகொள்கின்றனர். ஆகவே பதினைந்து வயதவன் முப்பது அல்லது நாற்பது வயதவளான ஸ்திரீயை மணத்தல் ஆச்சரியமாகாது. இவரிடம் நடைபெறும் மணச்சடங்குகள் மிகுதியும் சாதாரணம். மணமகளின் உடன்பிறந்தவள் பெண்ணின் வீட்டையடைந்து சிறிது பணத்தையும் ஒரு வஸ்திரத்தையும் கொடுத்துவிட்டு ஒரு குதிரைமயிரை யவள் கழுத்தில் முடிந்து தன் உடன்பிறந்தாளின் அகத்திற்கு அழைத்து வந்து ஆடு வெட்டி மதுவுடன் விருந்திடுவது வழக்கம். பிறகு 'வல்லரித்தடிகளை' மணமகனும் மணமகளும் மாற்றிக்கொள்ளுதல் வழக்கம். பின்னர் மணமகளின் வீட்டில் ஒரு மரக்கால் அரிசியும் ஒரு பெண் கோழியையும் ஸ்ரீதனமாகத் தந்து விருந்திடுவதுடன் மணவினை முடிவுபெறுகின்றது. கல்யாணமான பன்னிரண்டு மாதத்திற்குள் ஏதாயினும் விசேஷ தினம் வருமாயின் பெண்ணின் வீட்டில் விருந்திட்டு ஒரு மரக்கால் அரிசியையும் ஒரு ஆண்கோழியையும் வரிசையாக வனுப்புவார்கள். மணமான வருஷத்திய சங்கிராந்தியன்று ஐந்து மரக்கால் அரிசியும், ஐந்து சுமை மண்பாண்டங்களும், ஐந்து குலை வாழைப்பழமும், ஐந்து உருண்டை வெல்லமும் வரிசையாக மருமகன் மாமனகத்தி

னின்றும் அடைகின்றான். மரவர்களைப்போல மணமான ஸ்திரீ புருஷர்கள் பிரிந்து வாழ்தல் அருமை. புருஷன் மனைவியைப்பிரிய வேண்டுமானால் புருஷனுடைய சொத்தில் பாதிபங்கு கொடுத்துவிடவேண்டும். மனைவி புருஷனைப் பிரியவேண்டுமானால் அவனுக்கு நாத்தியாற் கிடைத்த ஸ்ரீதனத்தை யிழக்கவேண்டும். ஒரு கள்ள ஸ்திரீ கைம்பெண்ணானால் எவனேனும் பத்துப்பணம் பரியம் கொடுத்தால் மணக்கலாம்.

மரவர்களைப்போன்று கள்ளர்களும் ஸ்திரீ புருஷர்கள் தங்கள் காதுகளைத் தோள்களிற் படும்படி வளர்க்கிறார்கள். கள்ளர்கள் கோபித்துக்கொண்டால் தம் காதுகளை அறுத்துக்கொள்வார்கள். முற்காலத்தில் பிரயாணிகள் கள்ள ஜாதிப்பெண்களை வழித்துணையாக அழைத்துப்போவது வழக்கம். பிரயாணிக்கு அவள் ஜாதியாரால் துன்பம் வராமல் காத்துக்கொள்கிறாள். மீறி அவள் ஜாதியார் துயர் செய்தனராயின் தன் காதுகளை யறுத்துக் கூச்சலிட்டுக்கொண்டு தன் இருப்பிடம் சேர்ந்து பெரிய சண்டையுண்டாக்குவாள்.

இக்கள்ளர்கள் கொடிய மிருகத்திற்குச் சமானமானவர்கள். சிறிதேனும் இரக்கமின்றிப் பழிக்குப்பழி வாங்குவதில் இவர்க்கு நிகர் எவருமில்லை. இவர்களுக்குள் சண்டை வந்தால் ஒரு புருஷன் தன் மனைவியையும் குழந்தைகளையும் கொலைசெய்து தன் எதிரியும் தன் மனைவியையும் குழந்தைகளையும் கொலை செய்வான் என்ற சந்தோஷத்தையடைய விரும்புவானெனின் இவர்களுடைய இரக்கமின்மையை என்னவென்று சொல்லலாகும்! இரண்டு ஸ்திரீகள் சண்டை செய்துகொண்டால் ஒருத்தி தன் குழந்தையை மற்றவளின் வீட்டுக் கதவண்டை எடுத்துச்சென்று கொன்றுபோட்டு வருவது வழக்கம். திரும்பிவந்து தன்

சங்கமப்பொருள்களை எடுத்துச்சென்று ஊரைவிட்டுப் போக முயலுவாள். அப்பொழுது அனைவரும் தடைசெய்து மிகுந்த கலகத்தை யுண்டுபண்ணுவார்கள். இந்தச் சச்சரவை நாட்டாமைக்காரனை அம்பலக்காரனிடம் சொல்லுவார்கள். அவ்வம்பலக்காரன் ஊரில் தலைமையானவரிடம் இவ்விஷயங்களை எடுத்துச்சொல்லுவான். தன் மனைவியிடம் குற்றமிருக்கிறதென்று தோன்றினால் உடனே தன் குழந்தைகளிலொன்றை எடுத்துச்சென்று முதலிற் கொன்றவளின் வீட்டுவாயிலிற் கொன்று போட்டு வருவான். அப்படிச் செய்யாமற் சும்மாவிருந்தானேயாயின் விசாரணை நடக்கும் மூன்று தினத்திற்கும் ஆங்குக் கூடியவருக்கு உணவு அளித்துக் கடைசியில் தன் குழந்தையையும் கொன்றுவிட ஆஞ்ஞாபிப்பார்கள். இத்தகைய கொடுமைகள் நம் நாளில் நடவாது.

மேல் நாட்டுக் கள்ளர்களிடம் வெகுநாயகவரணம் பெரும்பான்மையாக வழங்குகின்றது. ஒரு ஸ்திரீ பத்து, ஆறு, அல்லது நான்கு புருஷர்களை வேட்டு எல்லோருடைய குழந்தையென்று பிள்ளையைப் பெறுகின்றாள். ஒவ்வொரு கள்ளனையும் பிறக்கும்போதே திருட்டுத்தொழிலையே கற்கச்செய்கின்றார்கள்.

நிலமுழுது பயிர்செய்தால் நிலவரியைக் கேட்பார்கள் நேர்த்தியாக
பிலமதனி லிருந்திடலா மென்றாலும் வீட்டுவரி
யெங்கே யென்பர்
நலமிகுகைத் தொழில்செய்ய லாமென்னின் றொழில்வரியை
நல்கென்பார்கள்
இலகுபுய லருள்நீர்க்கு நீர்வரியைக் கெட்பார்கள் இராசாங்கத்தார்
யாண்டேனுஞ் சென்று பிழைப்போ மென்றால் வண்டிவரி
யெடுவென்பார்கள்
ஆண்டவையாம் வள்ளுவனார் மேன்மையுறு தொழிலென்ன
அன்பினேற்ற

மாண்டதனித் தொழில் செய்ய லாமென்னின் தறிவரியை
வாகசென்பார்கள்
பூண்டனரால் வரியில்லாத் திருடுதொழில் கள்ளரைப்போற்
புவியிலுண்டோ.

அவனுக்குப் பதினைந்து வருஷமானதும் கள்ளப்படிப்பு முடிகிறதென்கிறார்கள். பிறகு அக்கள்ளன் தன் தலைமயிரை இஷ்டப்படி வளர்த்திக்கொள்ளலாம். திருடுவதிற் றிறமையுற்றவனானால் உறவினர் தம்பெண்ணை மணஞ்செய்து கொடுக்கிறார்கள்.

அகம்படையர்களைப்பற்றியும், மரவர்களைப்பற்றியும், கள்ளர்களைப்பற்றியும் பூர்வீகமாக ஒரு கதை வழங்கிவருகிறது. ஒருகாலத்தில் கௌதமரிஷி தன் வீட்டை விட்டு வெளியே செல்ல நேரிட்டது. அது கண்ட இந்திரன் வெகு நாளாக அவர் மனைவியினழகில் மயங்கித் தக்கசமயம் வாய்த்ததென்று நினைத்து அவளைப்புணர்ந்து மூன்று புதல்வரைப் பெற்றனன். ரிஷிபகவான் திரும்பிவந்தபொழுது ஒருவன் கதவின் பின்புறம் ஒளிந்து கொண்டான், மற்றொருவன் மரத்தின்மீது ஏறிக்கொண்டான்; மூன்றுமவன் எதிரே நின்றான். ஒளிந்து நின்றவன் கள்ளன் என்றும், மரத்தின்மீது ஏறியவன் மரவன் என்றும், எதிரில் நின்றவன் அகமுடையவன் (தைரியமுடையவன், கர்வமுடையவன்) என்றும் சொல்லப்பட்டனராம். இவர்களினின்றும் உற்பத்தியாயினவர் கள்ளர்கள், மரவர்கள், அகம்படையர்கள் என்று மூன்று வகுப்பினராக வழங்கப்படுகிறார்கள்.

சீதாபதிஐயர், பி. ஏ.

# கமலினீ கலஹம்ஸம்.

தேர்ச்சியடைந்து எழுந்திருக்கின்றாள். இரவு வந்தாலின்னும் அதிகம் வருத்தம். அம்மம்ம! அதையாரால் சொல்லமுடியும்? கைகொண்டு முகத்திலறைந்து கொள்கின்றாள். "என் அன்புள்ள மணவாள! என்ன துன்பமடைந்தாயோ? இன்பமுண்டாகுமென்று எண்ணினேனே! நானென்னவெல்லாம் நினைத்திருந்தேன். என்னின்னுயிர்த்தலைவ! நீயிப்பொழுதெங்கிருக்கின்றாயோ? காட்டில் அலைகின்றாயா? நாட்டில் நாலுபேரறியாவண்ணமிருக்கின்றாயா? எங்கிருக்கின்றாய்? நீயெப்பொழுது வருவாய்? உன்னையெப்படிக் காண்பேன்? என்னாசைநேச! அங்கம் வேகின்றதே! ஐயோ என் காதற்குஞ்சரமே! கற்பகத்தருவே! "உன்னை நான் மணம்புரிந்தால், என்னென்னவனர்த்தங்கள் நேரிடுமோ? கமலினீ! நீயென்னை யிவ்வாறு நிர்ப்பந்தஞ்செய்யாதே." என்றாயே. பாவிநானல்லவா வுன்னை மோசத்திற்குட்படுத்தினேன். என்னதைரியத்தோடு வந்தெழுப்பினேன்? என்னவெல்லாஞ்சொன்னேன்? எல்லாவற்றையும் அங்கீகாரஞ்செய்யாமற் றள்ளிவிடவே, உன்னை நான் என்ன கஷ்டமடையும்படி செய்தேன்? நீயன்று "கமலினீ! என் மானத்தைக் கெடுத்துவிடாதே! உன்னை நமஸ்கரிக்கின்றேன். என்னை விட்டுவிடு" என்றாயே. அதை யெண்ணி யெண்ணி யென் மனமுருகுதே! அக்காலத்தில் என் ஹிம்சை பொறுக்கமுடியாமலன்றோ என்னை மணந்தாய்? என்ன துன்பமியற்

றினேனுனக்கு? இனி நானென் செய்வேன்? ஐயோ கலஹம்ஸா! உன்னைப்பிரிந்து நானின்னும் இப்பூமியிலுயிரோடிருக்கின்றேனே. இன்னுமென்னுயிர் போகவில்லையே! ஹா! கலஹம்ஸா! உன்முழு மதிபோன்ற முகத்தை நான் மறுபடியும் காண்பேனோ?" என்றும் இன்னும் நானாவிதமாகவும் கதறிக்கொண்டிருக்கிறாள் கமலினி. இன்னுமிவள் படுந்துயரத்தை யுரைக்க நம்மாலாகாது. கருணாரஸமே கமலினியுருவெடுத்துவந்து கண்டோர் கதறும்படி தன் சோகத்தை யபிநயித்தால் யாரால் சொல்லமுடியும்? நிற்க. மூர்ச்சையுடன் வீழ்ந்தானே கலஹம்ஸன். அவன் கதியென்னவாயிற்று? அப்பா! என்ன கஷ்டம்? கொஞ்சமேனும் கருணையில்லையோ தெய்வத்திற்கு? இதுவரையிலிவன் அனுபவித்த துன்பங்கள் போதாதா? இதுவும் நேரிடவேண்டுமா? என் செய்வோம்? விதியை வென்றவர் யார்? அவ்வாறு கீழே சாய்ந்தவன், அண்டையில் ஒடிக்கொண்டிருந்தவோர் அரவத்தின்மேல் விழுந்தான். அவ்வரவும் இவனைக் கடித்தது. முந்தியே பிரக்ஞையின்றி வீழ்ந்தான். அரவின் விஷந்தலைக்கேறிற்று. கீழே விழுந்தவன் மறுபடி யெழுந்திருக்கக்காணோம். அருணோதயமாயிற்று. இத்தனை நாண்மட்டும் இவ்வனத்தில் ஒருவரையுங்காணாதிருக்க, இன்று யாரோவோர் சந்நியாசி யவ்வழியே வந்தான். இவ்வலங்கோலத்தைக் கண்டான். மிகவும் துக்கங்கொண்டான். திவ்விய சரீரம் தரணியிற் கிடக்கின்றது. பொன்னிறமாயிருந்தவுடல் கண்ணுக்கவலட்சணமாகக் கரேலென்றிருக்கின்றது. பார்த்தான் சன்னியாசி. அரவு தீண்டியதென்றறிந்தான். மனதிற்கொண்ட சோகத்தை நீக்கினான். உடனே கொஞ்சந்தூரஞ்சென்று ஓர்விதப் பசுந்தழையைக் கையிற்கொணர்ந்து அஃதைக் கசக்கிக் கலஹம்ஸனது மூக்கிற் பிழிந்தான். உடனே துயிலெழுபவன் போல் கண்விழித்தெழுந்தான் கலஹம்ஸன். பக்கத்தில் நிற்கும் யதியைக்கண்டான். வணங்கி நின்றான். ராஜகுமாரனை யந்த யதீந்திரனும் சற்றுநேரமுற்றுநோக்கி அவனது குலமுதலியவற்றை விசாரிக்கலானார். துறவியைக் கண்டதும் கலஹம்ஸனுக்கும் ஓர்விதப் பெருந்துயரம் தோன்றிற்று. மறுமொழியொன்று முரையாமல் மனவருத்தத்துடன் குனிந்து நின்றான். சன்னியாசிக்கு முன்னிலும் வருத்தமதிகமாகி, ராஜகுமாரனைப் பன்முறையும் வினவ, அவன் கண்ணீர் விட்டுக்கொண்டு மிக்க தீனமான ஸ்வரத்துடன் தனது நாமதேயத்

தை மொழிந்தான். "கலஹம்ஸன்" என்ற பெயரைச் செவியுற்றவுடன் அச்சன்னியாசி மூர்ச்சையாகித் தரையில் வீழ்ந்தான். கலஹம்ஸனிதைக் கண்டு சோகமுமாச்சரியமும் அடைந்து, இப்பொழுங்காட்டில், பைன்னகத்தின் விஷத்தைப் போக்கித் தனக்குயிரளித்த அந்த யதியைப் பலவுபசாரங்கள்செய்து மூர்ச்சைதெளியும்படி செய்தான். அந்த யதீச்வரனும் மூர்ச்சை தெளிந்தெழுந்து கலஹம்ஸனை மார்போடணைத்து தாரை தாரையாகக் கண்ணீர்பெருக்கிப் பேசமுடியாமல் சற்றுநேரமிருந்தான். இவைகளைக் கண்ணுற்ற கலஹம்ஸன் தானும் ஆருத்துயர்கொண்டு "ஐய, இவ்வேளையில் என் மனத்தின் நிலைமையை யென்னலெடுத்துரைக்கக் கூடவில்லை. தங்களது திருமுகத்தை நோக்குங்கால், எனக்கடங்கா மகிழ்ச்சியும் ஆருத்துயரமும் உண்டாகின்றது. ஐயோ! என் செய்வேன்? இப்புவியில் என்னைப்போலும் மானிடப்பிறவி யெடுத்தோருண்டோ? முன்ஜென்மத்தில் யானியற்றிய தீத்தொழில்கள் யாவும் இப்போழ்தென்னைச் சூழ்ந்திருக்கின்றன. அற்பனனவெனது பெயரைக்கேட்டதும் தாங்கள் படுந்துயரோ பெரிது. இதன் காரணமெனக்குத் தோன்றவில்லை. தாங்களோ, இவ்வுலகத்தில் எல்லாவற்றையுந் துறந்து பேரானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள். தங்களைப்போன்ற துறவிகளுக்குச் சுகதுக்கங்களின் பேதமில்லையன்றோ? அவ்வாறிருக்க, எளியோன் மீதிவ்விதக் கருணைகொண்ட காரணத்தைச் சற்று அருள்புரிந்து உரைக்கவேண்டும்" என்றுரைத்துத் தன் சரித்திரத்தையும் சுருங்கச்சொன்னன். இதைக்கேட்டதும் அத்துறவி, அழுதுகொண்டு "கல்ஹம்ஸா! ராஜஹம்ஸனின் கதியென்னவாயிற்று? "என்றுரவலுடன் கேட்க, ராஜகுமாரனுக்கு ராஜஹம்ஸனின் நினைவு வந்தவுடன் மனோநிலையற்றுக் கீழே விழுந்தான். யதீந்திரனிவனை யெழுப்பியுட்கார்த்தி "கலஹம்ஸா! நான் யாரோவென்று நினையாதே யப்பா! நான் துறவியல்லடா! இவ்வேடங்கொண்டேனேயொழிய வேறில்லை. என்னருமை மன்னனை சந்திரவர்மனின் குலதீபமே! மஹாபாபியான் மஹாமதியுடா நான். உங்களனைவரையும் பிரிந்துவேறு விஷயங்களிலொன்று மாசையின்றி இத்துறவி வேடங்கொண்டு இந்த வனத்தில் அகப்பட்ட காய்கனிகளைத் தின்று ஜீவித்து வருகின்றேன். கலஹம்ஸா! என் கண்மணீ! உன்னை நான்காண்பேனென்று கனவிலும் நினைக்கவில்லையே. அப்பா, இவ்வனத்தில்

—மனித சஞ்சாரமற்ற இவ்வனத்தில், எப்படி வந்தாய் நீ? நீயிங்கு வந்து எவ்வளவு காலமாயிற்று? உனது தோழனான ராஜஹம்ஸன் எங்கிருக்கின்றான்? உங்களெல்லோருடனும் நான் கப்பலில் பிரயாணஞ்செய்து வருகையில், கர்மவசத்தால் கப்பலுடைந்ததே! என் கண்மணி ராஜஹம்ஸனைக் கனகலதை யெடுத்துக்கொண்டனளா? உங்களைவிட்டு நான் பிரிந்து ஈரேழு வருஷங்கள் ஆயினவே. உன்னைக் காணும்போதெனக்கு முகச்குறிகூடத் தெரியவில்லையே. பெருந்துயருற்றவன்போலத் தோற்றுகின்றாய். என்னிடமெல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாகச் சொல்" என்றுவினவினான். இவைகளையெல்லாம் கேட்ட ராஜகுமாரன் மந்திரியைக் கட்டிக்கொண்டு மெய்மறந்து அலறியழுதான். சமாதானமடைந்த பிறகு தனது சங்கதிகளையொன்றும் விடாமல் ஆதியோடந்தமாகச் சொன்னான். மிக்க பரிதாபமான நிலைமையிப்பொழுது இவனுக்கு நேர்ந்திருப்பதையும், ராஜஹம்ஸனும் கனகலதையும் ஆதரிப்பாரின்றி யிருப்பதையும் நினைந்து மந்திரி மனவருத்தமுற்றான். உடனே மஹாமதி "கலஹம்ஸா! நீங்களெல்லோரும் ஜிவித்திருப்பதைக் கேட்கும்படி நான் என்ன பாக்கியஞ்செய்தேனோ? நீயோ ஸகலகலைகளையும் கற்றிருக்கின்றாய். மஹா ஸாமர்த்தியமுள்ளவன். பராக்ரமசாலி. எவ்வுபாயத்தாலாவது நமது தேசத்தை யடையவேண்டும். சந்திரபுரத்துக்குப் போகும் வழியுனக்குத்தெரியாது. நான் தெரிவிக்கின்றேன். நீயங்கு சென்று இவ்வேடத்துடனேயே சிலநாட்களிரு. உண்மையை விளக்கிவிடாதே. நான் ரத்ன த்வீபத்திற்குச் சென்று ராணியையும் ராஜஹம்ஸனையுமழைத்து வருகிறேன். அரசன் உயிருடனிருப்பதில் ஆக்ஷேபணையில்லை. எப்படியாவது ஜயஸேனனை ஹதஞ்செய்து நமது நாட்டைக்கைக்கொண்டோமென்றால் பிறகு ஸார்வபௌமனை நாம் நிச்சயமாகவடையலாம். அப்பாவிதான் நம்மரசனை யெங்கேனும் சிறைப்படுத்தியிருக்கவேண்டும். ஆதலால் நான் ரத்ன த்வீபத்தினின்றும் வந்தபிறகு வேண்டியவுபாயங்களைச் செய்வோம். போவோம் வா." என்றழைத்தான். உடனே ராஜகுமாரன், ஆச்சரியமடைந்து மந்திரியை நோக்கி "ஐய! இப்பொழுது தெய்வம் கொஞ்சம் அனுகூலமாக இருப்பதுபோல் தோன்றுகின்றது. தாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தபிறகு தங்களுடைய சரித்திரத்தைக் கேட்க மிகவும் ஆசைகொள்கிறதென் நெஞ்சம்" என்றுகேட்க மஹாமதி

கூறுகின்றான் "கலஹம்ஸா! என் கண்மணி ராஜஹம்ஸனை நான் ஓர் சிறு மரப்பலகையில் வைத்த க்ஷணத்தில் ஓர் பெரும் அலைவந்து என்னை வெகுதூரத்திற்கப்பால் தள்ளிற்று. நடுச்சமுத்திரத்திலகப்பட்டுத் தத்தளித்தேன். பாழும் பிரம்மன் என் தலையில் இவ்வளவு வருத்தங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டுமென்று எழுதியிருக்கையில் என்னுயிர் எப்படியடா நீங்கும்? சிறிதுநேரம் நீரில் மேலும் கீழுமாக அவதிப்படுகையில், சிறுபடகொன்று நானிருந்த விடத்தினின்றும் வெகு சமீபத்தில் சென்றுகொண்டிருந்தது. மிகவும் பயங்கரமான ரூபத்துடன் சிலர் அதில் உட்கார்ந்திருந்தனர். நான் பட்ட துயரத்தை யறிந்து அவர்கள் என்னிடம் படகைச்செலுத்தி என்னைத் தூக்கியெடுத்து அதில் ஏற்றிக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் மிக்க வந்தனஞ்செய்தேன். மீன் பிடிப்பதற்கு வந்த செம்படவர்களாமவர்கள். தங்களுடன் என்னையுமழைத்துச் சென்றார்கள். சமுத்திரத்திற்குச் சமீபத்தில் சிறு குடிசைகள் அமைத்துக் கொண்டு அவர்கள் வசித்திருந்தார்கள். அவ்விடத்தில் நான்சேர்ந்தவுடன் அஃதெந்த தேசமென்று அறிந்துகொள்ளவில்லை. அவர்களைக் கேட்கவுமில்லை. அவர்கள் என்னிடங்கேட்ட சில கேள்விகளுக்கு மாத்திரம் எனது உண்மையை வெளியிடாமற் சில மறுமொழிகளுரைத்து அன்று பகல்முழுவதும் அவர்களுடன் வஸித்தேன். இரவில் எல்லோரும் நித்திரை செய்தவுடன் நான்எழுந்து வெகுவிரைவாக நடந்து பொழுதுவிடியுமுன் இவ்வனத்திற்குட் புகுந்தேன். மறுதினமும் ஓயாமல் நடந்தேன். இதுவொரு பெருங்கானகமாதலின் இதன் முடிவைக்கண்டேனில்லை. அவ்வாறு இரண்டு மூன்றுநாட்கள் நடந்து கடைசியாக வோர் தபோவனத்தையடைந்தேன். இவ்விடத்தினின்றும் இரண்டுமைல் தூரத்திலிருக்கின்றது அந்தத் தபோவனம். அவ்விடத்தில் அநேக ரிஷிகள் இருக்கின்றனர். மஹாத்மாக்கள். அவர்களைக் கண்ணுற்றாலே நமது பாபந்தொலையும். அவர்களுக்குச் சிலநாள் பணிவிடை செய்து அவர்களுடைய அநுக்ரஹம் பெற்றேன். அப்பெரியோரின் மஹிமையாலன்றோ உன்னையிப்பொழுது உயிருடன் எழுப்பினேன். நாம் போகும்வழியில்தான் இருக்கின்றதவ்வனம். நான் பிரதிதினமும் ஸமித்துக்களும் தர்ப்பையும் கொண்டு செல்ல இதுவரையில் வருவது வழக்கம். இன்று உன்னைக்கண்டேன்." என்றிம்மாதிரி மந்திரி கூறிக் கலஹம்ஸனை

யழைத்துச் சென்றான். இருவரும் வேகமாக நடந்தார்கள். தபோவனத்தை யடைந்தார்கள். கலஹம்ஸன் அந்தத் தபோவனத்தைக் கண்டு அதிகமான ஆனந்தமடைந்தான். வெகு ரமணீயமாக இருக்கின்றதவ்வனம். கூட்டம் கூட்டமாக மான்கள் கொஞ்சமும் அஞ்சாமல் மனிதர்கள் போகும் வழியிற் படுத்திருக்கின்றன. ரிஷிகுமாரர்கள் அநேகர் மான்குட்டிகளுடன் வேடிக்கையாக விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். நான்கு பக்கங்களிலும் ஹோமஞ்செய்த புரோடாசம், ஆஜ்யம் முதலியவைகளின் வாஸனை வீசுகின்றது. ஆச்ரமத்தில் அன்பாக வளர்த்துவரும் மான்களுக்கு ஆஹாரத்திற்காகத் தினையரிசி யுலர்த்தப்பட்டிருக்கின்றது சிலவிடத்தில். சிலவிடத்தில் பசுமையான ஸமித்துக்களும் தர்ப்பாங்குரங்களும் உலருகின்றன. சிலவிடங்களில் அநேக வித்தியார்த்திகள் ஒன்றுசேர்ந்து உச்சரிக்கும் வேதகோஷம் கேட்போரைப் பரிசுத்தஞ்செய்கின்றது. அநேக விடங்களில் கிளிகள், சாரிகைகள் முதலிய பறவைகள் மரங்களில் உட்கார்ந்து வேதம், வேதாந்தம் முதலியவைகளில் ஒன்றுக்கொன்று பிரஸங்கங்கள் செய்கின்றன. ஒவ்வொரு மரத்திலும், மான்தோல், மரவுரி, தர்ப்பை—ஆகியவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதைக்கண்டு கலஹம்ஸன், இவ்வனத்திலுள்ள மரங்களும் தவம் புரிகின்றனவோ' என்று ஸந்தேஹங்கொண்டான். அழகிய இத்தபோவனத்தைக் கண்டவுடன் 'ஏன் இவ்விதமான துன்பங்களையெல்லாம் ஸஹித்து ராஜ்யத்தைச் சம்பாதிக்கவேண்டும்? ஸுகமாக இவ்வனத்திலேயே இருந்து நமது காலத்தைத் தள்ளிவிடுவோம்" என்று எண்ணங்கொண்டான். கலஹம்ஸனுக்குப் பார்க்கப்பார்க்கத் திருப்தியுண்டாகவில்லை. அழகிய அந்தத் தபோவனத்தைத் தாண்டிச் சென்றார்கள். இவ்வாறு மந்திரி கலஹம்ஸனுக்கு அநேக ஆச்சரியமான இடங்களைக் காண்பித்துக்கொண்டே கடைசியில் இருவரும் வரதா நதிக்கரையை யடைந்தார்கள். உடனே கலஹம்ஸனிடம் சொல்லிக்கொண்டு மஹாமதி ரத்ன த்வீபத்திற்குச் சென்றமனத்தினனாக விரைவாய் நடந்தான். மற்றவன் மந்திரியை வணங்கி சந்திரபுரத்தை நோக்கிச் சென்றான்.

## ஸ்தபகம் 15.

சந்திரபுரத்தினின்றும் கொஞ்சதூரம் மேன்முகமாகச் சென்றால் ஸமுத்திரக்கரையை யடையலாம். இவ்விடத்தினின்றும் வெ

கு வேகமாகச் செல்லக்கூடிய மரக்கலமொன்றில் அல்லும் பகலும் பிரயாணஞ்செய்தால் பதினைந்து நாட்களுக்குப் பின்பு ஓர் கரை தென்படும். இதுவொரு சிறு தீவு. இதற்குப் பத்மத்வீபமென்று பெயர். நமக்கெதிரில் தோன்றும் கீழ்க்கரையினின்றும் மூன்று காதங்கள் சென்றால் சில சிறு குடிசைகளும் இன்னும் பலபெரும் வீடுகளும் காணப்படுகின்றன. இவைகளுக்கு மத்தியில் ஓர் உன்னதமான வீடு கட்டப்பட்டிருக்கின்றது. மாடியில் நாற்புறமும் இருப்புக் கம்பிகள் நெருக்கமாக ஊன்றப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இரவாயிற்று. மாடியில் ஸரியான வெளிச்சத்தைக் காணோம். ஓர் சிறு விளக்குமட்டும் எரிகின்றது. மத்தியில் ஓர் சிறு படுக்கை விரித்திருக்கின்றது. புருஷனொருவன் உட்கார்ந்திருக்கின்றான். மிக்க வாடிய முகத்துடனிருக்கின்றான். அழகு வாய்ந்தவன். மண்ணிற் புதைந்த மாணிக்கம்போல் இவனது அழகைத் துக்கமேலிட்டு மூடிக்கொண்டிருப்பதால் பார்ப்போருக்கு அழகு வாய்ந்தவனென்று தோன்றவில்லை. வெகு நாட்களாகத் துன்பத்தை யனுபவிப்பவன்போலத் தோற்றுகின்றான். தலையிலெங்கும் சடைகள் தொங்குகின்றன. உடல் மெலிந்திருக்கின்றது. கந்தையை யுடுத்திருக்கிறான். கண்ணீர் பெருகுகின்றது. படுத்துக்கொள்கிறான். எழுந்துட்காருகிறான். என்னென்னவோ புலம்பிக்கொண்டு கீழே விழுகிறான். சற்று மவுனமாக இருக்கிறான். பிறகு ஹோவென்று அழுதுகொண்டே "அரவணிந்தவனே! ஆலமுண்டவனே! இந்துகலாதர! ஈச்வரமனோஹர! உமையொருபாக! எந்தனையாள்வாய்! ஹே மஹாதேவா! இதுவரையிருந்தேன்! இறந்தேனில்லை. இன்னுஞ் சொன்னேன்! என்னுயிர்போகும். உன்னருள் காணேன்! ஓ ஜகதீசா! நகரையிழந்தேன்! நானென் செய்வேன்! மந்திரியை யிழந்தேன்! மாபாவியானேன்! தாரமிழந்தேன்! தஞ்சமொன்றில்லை! மகனை யிழந்தேன்! என் மனமெரிகுதே! ஹா கலஹம்ஸா! என்செய்வேன் நான்! உன் முகம் காணதென்னுடல் வேகுதே!" என்று கீழே விழுந்து புரளுகின்றான். எழுந்து சற்றுநேரம் மௌனமாயிருக்கின்றான். பின்னும் மனம் உருகி "இந்த க்ஷணமேயென் கண்மணி, கலஹம்ஸனின் முகமதியைக் காணவிட்டால் என்னாவி போகவேபோகும்" என்று அலறுகிறான். இச்சமயத்தில் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. உடனே ஒருவன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே

வந்து மறுபடியும் கதவை மெதுவாகத் தாளிட்டுச் சந்திரவர்மனின் அருகில் வந்து மூர்ச்சையாகித் தரையில் வீழ்ந்தான். இதைக்கண்டு அரசன் திகிலடைந்து எழுந்து நிற்கக் கீழேசாய்ந்தவன் கொஞ்ச நேரஞ்சென்றவுடன் எழுந்து மிஞ்சிய சோகங்கொண்டு சந்திரவர்மனைத் தழுவியவண்ணம் ஹோவென்று பிரலாபஞ்செய்தனன். இக்குமாரன் இன்னவன் என்று சந்திரவர்மனுக்குச் சந்தேகமறத் தெரியவில்லை. ஆனால் அவனைக்கண்டவுடன், வெகுநாட்களுக்கு முன் தான் அன்புடன் வளர்த்துவந்த தனது செல்வச்சிறுவனோ என்று சந்திரவர்மன் ஐயங்கொண்டான். சிறுவனுடைய வதனத்தைச் சற்று உற்று நோக்கியவுடன் சித்தப்பிரமைகொண்டு சித்திரப் பதுமைபோல் நின்றான். அவ்வேளையில் அந்தக் குமாரன் அரசனை நோக்கி "மன்ன! நான் வேறெவனுமல்ல. தங்களது மந்திரியின் புத்திரன், மஹாபாபியான ராஜஹம்ஸன் நான்" என்றான். இதைக்கேட்ட சந்திரபுரமன்னன் ஆச்சரியங்கொண்டு துக்காக்ராந்தனாகி ராஜஹம்ஸனை மார்போடணைத்து உச்சிமுகந்து கண்ணீர் விட்டு அழுதான். சோகஞ்சற்று ஆறியபின் ராஜன் ராஜஹம்ஸனை நோக்கி "என் கண்மணீ ராஜஹம்ஸா! கலஹம்ஸன் சுகமாக இருக்கின்றானே? நீயித்தனை நாட்களாக வெங்கிருந்தாய்? இப்பாழும் பத்மத்வீபத்திற்கு எப்படியடா வந்தாய்? பாபி ஜயஸேனன் என்னையிங்கு சிறைப்படுத்திப் பதினான்கு வருடங்கள் ஆயினவே! சந்திரபுரத்தை விட்டு நான் வந்தபிறகு, கண்மணீ! உங்கள் நிலைமையென்ன ஆயிற்று? உனது நண்பன் எங்கிருக்கின்றான்? கனகலதையெங்கிருக்கின்றாள்? மஹாமதியின் கதியென்ன? ராஜஹம்ஸா, இன்று மாலைப்பொழுது முதல் எனக்கு ஓர்விதப் பெருந்துயரும் மதிமயக்கமும் உண்டாயிற்று. ஏற்கனவே யென்னை வருத்திய சோகம் ஆயிரமடங்கு அதிகமாயிற்று. இன்றுடன் எனதுயிர் போய் விடுமென்று நினைத்தேன். உன்னைக் கண்டிராவிடில் நான் நிச்சயமாகப் பிராணனை விட்டிருப்பேன். நான் கேட்ட கேள்விகளுக்குச் சீக்கிரம் விடையளியடா, என் மனம் பதறுகின்றது" என்றான். ராஜஹம்ஸன், ராஜன் மொழிந்த மொழிகளைச் செவியுற்றுத் தங்களது விருத்தாந்த முழுமையையும் ஆதியோடந்தமாக வுரைத்தான். பின்னுங் கூறுகின்றான். "அரசே! ஐயோ! என் மித்ரனைப் பிரிந்து என் மனம் பின்னும் அந்த ரத்னத்வீபத்திலிருக்க எவ்வாறு உடன்படும்?

அந்தக்ஷணமே கலஹம்ஸன் ஓர்வேளை சந்திரபுரத்திற்கே சென்றிருப்பான்" என்று நினைத்து ஓர் படகில் ஏறிப்படகைச் சந்திரபுரத்தை நோக்கிச் செலுத்தும்படி மாலுமிக்குரைத்தேன். பெரும்புயலால் அடிபட்டு நான் ஏறிய படகு இன்று மாலையில் இத்தீவில் வந்து சேர்ந்தது. இது எந்ததேசம் பார்த்துவரவேண்டும் என்றுவல்கொண்டு நாவிகனை நலவு சொல்லிச் சமுத்திரக்கரையில் வைத்துவிட்டு அவனிடமிருந்த ஓர் கத்தியை வாங்கிக்கொண்டு கொஞ்சந்தூரம் வந்தேன். வழியிலோர் கிழவன் தென்பட்டான். அவ்விருத்தனிடமிருந்து இத்தீவின் ஸகல ஸங்கதிகளையும் தாங்கள் சிறையிலிருப்பதையும் அறிந்தேன். ஈவ்விதமேனும் இங்கு வந்து தங்களைக் காணவேண்டுமென்று நிச்சயங்கொண்டு, மறுபடியெனது மாலுமியிடஞ்சென்று அவனுக்கு என்னிடமிருந்த சில விலையுயர்ந்த ஆபரணங்களைக் கொடுத்து அவனது ஆடைகளை வாங்கியுடுத்து ஓர் பெரியபோர் வீரன்போல் வேடங்கொண்டேன். வெகு மனோதைரியத்துடன் இங்குவந்தேன். என்னைக் கண்டவுடன் காவலாளரெல்லோரும் திடீரென்று வெகுபயத்துடனும் பக்தியுடனும் எழுந்து நின்றார்கள். நல்லஸமயந்தானென்று ஸந்தோஷங்கொண்டேன். நான் ஜயஸேனன் அனுப்பிய ஸேனாதிபதியென்றும், தங்களையெவ்வுபாயத்தாலாவது கப்பலிலேற்றிச்சென்று நடுக்கடலில் தள்ளும்படியுத்தரவளித்திருப்பதாகவும் சொன்னேன். நமது நற்காலத்தால் அச்சண்டாளர் ஸரிதானென்று நம்பிக்கைகொண்டனர். நம்மைப்பிடித்த துன்பங்கள் இன்றுடன் நீங்கின. தாங்கள் என்னுடன் வாருங்கள். போவோம்". ராஜஹம்ஸனுடைய ஆண்மையை ராஜன் அறிந்து ஆச்சரியமடைந்தான். அவனுடைய புத்திசாதுரியத்தைப்புகழ்ந்து, தான் ரத்னத்வீபத்திற்குச்சென்று கனகலதையுடன் மாறுவேடங்கொண்டு சந்திரபுரத்திற்கு வருவதாகவும், அதற்குள் ராஜஹம்ஸன் சந்திரபுரஞ்சென்று ராஜகுமாரனைத் தேடியடைந்தால் பின் எல்லாம் சுலபமாகக் கைகூடுமென்றுஞ்சொல்ல, தகுந்தயோசனைதானென்று எண்ணி ராஜஹம்ஸனும் ஸம்மதித்தான். உடனேயிருவரும் கதவைத்திறந்து வெளியேவந்தார்கள். ராஜஹம்ஸன் தனக்குச்சகாயமாக இரண்டு வீரரைவரும்படி ஆக்ஞாபித்தான். நால்வரும் ஓர் படகில் ஏறினார்கள். ராஜஹம்ஸன் ஏறிவந்த படகும் கூடவே வரவேண்டுமென்று திட்டஞ்செய்யப்பட்டது. ஆகவே இரண்டுபடகுக

ளும் பத்மத்வீபத்தினின்றும் புறப்பட்டன. கொஞ்சத்தூரஞ்சென்றவுடன், தாங்கள் யோசித்தவண்ணம் ராஜனும் ராஜஹம்ஸனும் தங்களுடனிருந்த இருவீரர்களையும் நீரில் தள்ளினார்கள். உடனே ராஜஹம்ஸன் தான் முன்னேறிவந்த படகில் அமர்ந்து சந்திரபுரத்தை நோக்கிச்சென்றான். ராஜனும் தனதுபடகை ரத்னத்வீபத்தை யுத்தேசித்துச் செலுத்தினான். கொஞ்சதூரஞ் சென்றவுடன் எதிரில்வரும் ஓர் சிறு படகைக்கண்டான். பயமும் ஸந்தோஷமுமுண்டாயிற்று. அப்படகு சமீபத்தில் வந்ததும் அதிலிருந்த நால்வரும் திடீர் என்று அரசனது படகிற் குதித்து அவனிடம் ஏதேனும் திரவியம் இருக்கின்றதாவென்று வினவினர். உடனே யரசன் அவர்களைக் கடற்கொள்ளைக்காரர்களென்று அறிந்து மிகவும் பயங்கொண்டான். அந்நால்வருள் ஒருவன் சந்திரவர்மனைக் கண்டவுடன் ஹோவென்று அலறிக்கொண்டு கீழே வீழ்ந்தான். உடனே அரசன் அவனையுற்று நோக்கியபின் தன் மந்திரியான மஹாமதியென்று அறிந்து, மஹத்தான துக்கமும் ஆச்சரியமும்கொண்டான். சில நிமிஷங்கள் சென்றவுடன் மந்திரியான மஹாமதி அரசனை வணங்கித்தனது வரலாற்றைத் தெளிவாகவுரைத்துத் தான் ராஜகுமாரனான கலஹம்ஸனைக் கண்டதையும் அவனுக்கு நேர்ந்த ஆபத்துக்களையும் இப்போது அவன் சந்திரபுரத்திற்குச் சென்றிருக்கும் விஷயத்தையும் அரசனுக்கு அறிவித்தான். ராஜனும் ராஜஹம்ஸனைக் கண்டதையும் அவனும் சந்திரபுரத்திற்கே ராஜகுமாரனைத் தேடிக்கொண்டுபோயிருக்கும் விஷயத்தையும் மந்திரி மனமகிழும்படியுரைக்க, இருவரும் ஆநந்தபரவசர்களாகச் சற்றுநேரம் மௌனமாக நின்றார்கள். இவர்களது விருத்தாந்தங்களையும் இவர்கள் தற்காலத்தில் அனுபவிக்கும் சுகதுக்கங்களையும் கண்ட மற்றைக் கடற்கொள்ளை கொள்ளுவோர் மூவரும் வெகு ஆச்சரியமடைந்து அரசனையும் மந்திரியையும் வணங்கி, "ஐய, எங்களது ஆண்டவர்களே! பாபியான ஜயஸேனனுடைய ராஜ்யத்திலிருந்து பிழைப்பது எங்களுக்கு மிக்க அஸாத்தியமாக இருந்ததனால், நாங்கள் இந்த துஷ்கிருத்யங்களைச்செய்தேனும் பிழைப்போமென்று வந்தோம். அந்தச் சண்டாளனை ஹதஞ்செய்வதற்கு நாங்களும் சந்திரபுரஞ்சென்று வேண்டியவுபாயங்களைத் தேடுகிறோம்" என்றுசொல்லிச்

சென்றனர். உடனே மந்திரி "ராஜாதிராஜ, நாமிருவரும் தெய்வச் செயலால் இங்கு சந்தித்துக்கொண்டோம். இவ்வாறே நமது அருமை மைந்தர்களிருவரும் சந்திரபுரத்தில் ஒருவரையொருவர் கண்டு மகிழ்வர் என்பதில் ஐயமில்லை. பூர்வஜன்மத்தில் நாம்செய்த பாபம் நம்மை இந்நாள்மட்டும் வருத்திற்று. இனி நமக்கொன்றும் குறைவில்லை. அதிசீக்கிரத்தில் நாம் ரத்னத்வீபம் செல்லவேண் டும். அங்கே கனகலதை வருந்திக்கொண்டிருக்கின்றாள். நாம் சென்று ராணியைச் சமாதானஞ்செய்து பின்னும் வேண்டிய சங்கதி களை யோசித்துக்கொள்வோம். சீக்கிரம் போவோம்." என்றான். இருவரும் சந்தோஷத்துடன் ரத்னத்வீபத்தை நோக்கிச்சென்றார் கள். இஃதிங்ஙனம் நிற்க, கதாநாயகனின் கதியைக்கவனிப் போம். கலஹம்ஸன் வரதாநதீதீரம் வந்தவுடன் வரதையை வணங்கினான். கரையிலிருந்த விருக்ஷங்களினின்றும் அழ கிய புஷ்பங்களைப் பறித்துத் தனது துன்பமுற்றும் இன்றுடன் தீர வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு வரதையை அர்ச்சனை செய்து அர்க்கியங்கொடுத்து ஸ்நானஞ்செய்தான். இப்புண்ணிய நதியைக் கண்ணுற்கண்டநிமிஷமே கலஹம்ஸனது துன்பமுழுதும் பறந்துபோயிற்று. இவன் செய்த ஸ்நானத்தின் பலனையதிசீக்கிரம் அடைவான்போலும். ஸ்நானஞ்செய்து நித்ய விதிகளைமுடித்துக் கொண்டு, அவநி, பவநன், உதகம், ககனம், தஹனன், தபனன், சந் திரன், யஜமானன் என்னும் அஷ்டமூர்த்திகளுடன் பரமாத்மாவை தியானஞ்செய்தான். சந்திரபுரத்தை நோக்கிப் புறப்பட்டான். பல சுபசகுனங்கள் தோன்றின. எல்லாமீசன் செயலென்று நினைத்து விரைந்து நடந்தான். சந்திரவர்மன் குமாரன் சந் திரபுரத்தின் எல்லையில் வந்தவுடன் இன்றுள்மட்டும் ஜயஸேன னுக்குப் பயந்து ஒளித்திருந்த ராஜ்ய லட்சுமீ சந்தோஷத்துடன் ராஜகுமாரனை அடைந்தாள். கலஹம்ஸன் வெகுவிரைந்து நட ந்து வருகையில் வழியில் வந்த ஓர் அந்தணன் இக்குமாரனைக் கண்டு மனம்வாடி "அப்ப, நீயார்! உன்னைப்பார்க்கையில் எனக்கு மிக்க வருத்தமாயிருக்கின்றது. அதிரமணீயமான இப்பருவத்தில் நீ இவ்வேடம்கொள்ளக் காரணம் என்ன?" என்று வினவினான். ராஜகுமாரன் இவ்வார்த்தைகளைக்கேட்டு அவரை வணங்கி "ஸ்வாமீ! என் கதைகளையெல்லாம் பின்னுடித்தெரிவிக்கிறேன். தாங்கள்

இருப்பது இவ்வூர்தானே? தங்களுக்கு இவ்வூரில் கிருஹம் முதலியன இருக்கின்றனவா? அப்படியானால் என்னைத் தங்களுடைய கிருஹத்திற்கு அழைத்துக்கொண்டு செல்வீர்களா? அங்குச் சென்றபின் நான் எனது விருத்தங்களையெல்லாம் தெரிவிப்பேன்." என்றான். அவரும் இவனைக்கண்டு இரக்கங்கொண்டு உடனே கலஹம்ஸனைத்தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுசென்றார். சென்றதும் இக்குமாரன் மிக்கக் களைப்படைந்திருக்கிறானென்று கண்டு அவ்வந்தணன் இனிய சில கனிகளையும் பாலையுங்கொணர்ந்து அவைகளை யருந்தும்படி கலஹம்ஸனை வெகு உபசாரஞ்செய்து வேண்டிக்கொண்டான். கலஹம்ஸனும் அவரது மொழிகளுக்கு, மாறாமல் அவைகளையருந்திச் சற்று சிரமம் தீர்ந்தான். கலஹம்ஸனது வரலாற்றைக்கேட்க மிகவும் ஆவல்கொண்டிருந்த அம்மறையோன் "குமார, உன்னை நோக்குங்கால் ராஜகுமாரன்போலத் தோற்றுகின்றது. உனது ஸௌந்தர்யத்தை நீ கொண்டிருக்கும் முனிவேடம் மறைக்கின்றது. மேகத்தில் மறைந்திருக்கும் சந்திரனைப்போலிருக்கின்றாய். உன்னைப் பார்க்கும்போது எனக்கு ஸந்தோஷமும் துக்கமும் உண்டாகின்றன. கொஞ்சமும் பரிசயமில்லாதிருந்தும் நான் இவைகளையெல்லாம் உன்னிடம் கேட்பதற்குச் சற்று மன்னிக்கவேண்டும். உனது வரலாற்றை நான் கேட்கலாமானால் தயவுசெய்து சொல்லவேண்டும்." என்ப் பிரார்த்தித்தான். ராஜகுமாரன் இவைகளையெல்லாம்கேட்டுச் சற்றுப் புந்நகைபுரிந்து, "ஆர்ய, நான் இவ்வூரிற் பிறந்தவன்தான். எனது விதிவசத்தால் மூன்றாம் வயதிலேயே மறுதேசமடைந்தேன். அங்கு வெகுநாட்களிருந்தேன். கொஞ்சம்பொருள் கையிற்கிட்டிற்று. அங்கு ஓர் நாள் ஒரு கமலத்தைக் கண்டேன். பறிக்கவேண்டுமென்றுவல்கொண்டேன். ஓர் ஹம்ஸம் என்னை வெருட்டிற்று. அப்படிக்கிருந்தும் பறித்தேன். உடையவன் கண்டான். கோபங்கொண்டான். கமலத்தையும் என்னிடமிருந்து பறித்துக்கொண்டான். ஹம்ஸமும் போயிற்று. கையிலிருந்து கனகமும்போயிற்று. கானகமடைந்தேன். கடுகிநடந்தேன். இவ்வூர்வந்தேன். தங்களுடைய தரிசனங்கிடைத்தது. இப்பொழுது கதியெவருமில்லை யெனக்கு. நெல் விதைக்கும் வயலுமில்லை. நிலாவிறைக்கும் முற்றமுமில்லை. தாங்களழைக்கத் தங்களுடன் வந்தேன். இதுவே யென்கதை. வேறொ

ன்றுமில்லை" என மொழிந்தான். கலஹம்ஸன் சொல்லியவைகளை க்கேட்ட வேதியன் "அப்பா, முன்னாளில் இவ்வூரைச் சந்திரவர்மனென்றவோர் ராஜசிகாமணி யரசாண்டுவந்தான். அவனுக்கோர் அற்புதப்புதல்வன் இருந்தான். உன்னைக் காண்கையில் அக்குழந்தையின் ஞாபகம் எனக்குண்டாகின்றது" என்றும் இன்னும் ஏதோ சில வார்த்தைகளையும் சொல்லிக்கொண்டிருந்தான். இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், வீதியிற் சென்றுகொண்டிருந்தவோர் குமாரன் இவைகளைச் செவியுற்று அவ்வீட்டுவாசலில் நின்றவண்ணமே யோசிக்கின்றான்:—இஃதென்ன ஆச்சரியம்! இவன் எனது மித்ரனான கமலஹம்ஸனாகவிருப்பானா? இவன் மொழிந்த வரலாற்றைக் கேட்கும்பொழுது, கலஹம்ஸனே தனது கதையை மறைபொருளாக யாரிடமோ சொல்லிக்கொண்டிருக்கின்றானெனத் தோன்றுகின்றது. இங்கு பிறந்தவனென்றான். இது சந்திரபுரம். மூன்றாம் வயதிலேயே வேறுதேசமடைந்தேனென்றான். அஃது ரத்னத்வீபமாக இருக்கலாகாதா? கமலம் பறித்தேன் என்றும் உரைத்தான். இது கமலினியின் கதை. உடையவன் என்றால் ரத்னஸேனன். கனகம்போயிற்றென்றானேயது கனகலதை. இவன் எனது பிராணநேசனான கலஹம்ஸனே. ஹம்ஸம் வெருட்டிற்று என மொழிந்தான். நான்தான்-ராஜஹம்ஸன். கமலினிமேற் காதல் கொள்ளாதே என்றேன். நான் நினைத்தபடி எனது தோழன் இங்கு வந்திருப்பானோ? எப்படியானாலுஞ்சரி. இங்குசென்று பார்க்கிறேன்." என்று யோசித்துக்கொண்டு அவ்வீட்டினுட் சென்றான். அங்குசென்று நோக்கக் கலஹம்ஸன் வீற்றிருக்கிறான். உடனே பரஸ்பரம் பார்த்துக்கொண்டனர். இருவருக்கும் தங்களது காட்சி கனவெனத்தோற்றியது. க்ஷணநேரம் மயங்கினார்கள். உடனே கலஹம்ஸன் தான் வீற்றிருந்த மணையினின்றும் எழுந்தான். இன்னும் ராஜஹம்ஸன் தன் கண்களை நம்பவில்லை. கலஹம்ஸனுக்குக் கண்களில் நீர் பெருகிற்று. ஓடிவந்து ராஜஹம்ஸனைத் தழுவிக்கொண்டான். இருவரும் மூர்ச்சையாகி வீழ்ந்தனர். அருகிலிருந்த அந்தணன் இருவரையுமாசுவாஸப்படுத்தினான். மூர்ச்சை தெளிந்தெழுந்து இருவரும் மிக வருத்தமடைந்து ஒருவரையொருவர் பிரிந்தபின் நடந்த சங்கதிகளைத் தெரிவித்துக்கொண்டனர். இவ்வாறே தங்களது பெற்றோரும் ரத்னத்வீபத்தில் பரஸ்ப

ரம் தரிசித்துக்கொள்வார்களென்று ஸந்தோஷமடைந்தனர். கமலினியை நினைத்துக் கலஹம்ஸன் கலங்கினன். இவற்றையெல்லாம் மறையோன் கண்டு ஆச்சரியங்கொண்டு இக்குமாரர்களின் உண்மையான விருத்தாந்தமென்னவென வினவினன். உடனே ராஜஹம்ஸன், "ஐய! எங்களது சரித்திரத்தைச்சொல்வதில் யாதொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனல் அஃது சிலநாட்கள் வரையில் மிக்க இரகசியமாகவேயிருக்கவேண்டும். "கடலிலொரு துரும்பு கிடப்பினும் மனதிலொரு சொற்கிடவாது" என்று முதியோர் கூறுவர். ஆதலின் தாங்கள் இவ்விஷயத்தில் மிகுந்தஜாக்கிரதையுடனிருக்கவேண்டும்" என்றும் இன்னும் பலவாருகவும் கூறித்தங்களது விருத்தாந்தங்களையும் தெரிவித்தான். இதையவ்வேதியன் கேட்டு ஆனந்தங்கொண்டு "ராஜகுமார, உன்னைக் கண்டவுடனேயே நான் ஸந்தேஹங்கொண்டேன். இனியுங்களுக்கு க்ஷேமமுண்டாகும். ஐயமில்லை. ராஜாதிராஜனுகிய சந்திரவர்மனின் அரசாட்சியில் சுகமாகவிருந்து இந்தப்பாதகன் ஜயஸேனனது ஆளுகையிலும் இருக்கும் என்னைப்போன்றவர்கள் இங்கு வெகுசொற்பம். சண்டாளனுகிய ஜயஸேனனின் கொடுங்கோலையென்னென்று கூறுவேன்! எப்பொழுதும் தீச்செயல்களிலேயே பிரியங்கொண்டவன். பழிபாவங்களுக்கஞ்சாதவன். பாமரஜனங்களை யாதரிக்கின்றவன். அதர்மமேயிவ்வாறு ஜயஸேனனுகை அவதரித்ததென்று கூறலாம். இவனிடமில்லாத் துர்க்குணங்கள் உலகத்திலில்லை. பாதகங்களுக்குப் போதகன். பழிகளுக்குவழி. கொலைகளின் நிலை. காமத்தீயெரியும் கானகம். ஐயோ! சந்திரவர்மன் அரசுசெலுத்துகையில் அந்தரத்தினின்றும் இறங்கிவந்த இந்திரபுரிபோலிருந்த இந்தச் சந்திரபுரம் இப்பொழுது பாழாய்ப்போயிற்று. பசுமையாகிய பயிரில்லை. பரிதபிக்காத உயிரில்லை. இனியென்னு லுரைத்திடவும் எனக்குச் சக்தியில்லை." என்முன். இவைகளையெல்லாம் செவியுற்ற ராஜகுமாரன் ராஜஹம்ஸனைநோக்கி "மந்திரிகுமார, இச்சத்துருவை நாம் வெல்லுவது எப்படி? சரியானயோசனை செய்தாலன்றி முடியாது". என்முன். ராஜபுத்திரனது மொழிகளைக் கேட்ட ராஜஹம்ஸன் கூறுகிமுன்:—ராஜநந்தன, நீ சொல்லுவது உண்மைதான். சத்துருக்களை நாசஞ்செய்வதற்கேற்ற நீதிசாஸ்திரங்களைச் சற்று ஆராய்வோம். இவ்விதக்காரியம், யோசனையின்றி நம்மாலல்ல, யாராலு

மாகாது." எனமொழிந்தான். அதைக்கேட்ட ராஜகுமாரன், "ராஜஹம்ஸ, அதிலென்ன ஸந்தேகம். அதற்காகவன்றோ நானுன்னிடம் கேட்பது? நீயோர் உத்தம மந்திரிகுமாரனாயிற்றே! இப்பொழுது மந்திராலோசனை செய்வதற்குவேண்டிய சாதனங்கள் முற்றுமிருக்கின்றன. என்ன இருந்தாலும் "அச்சாணியில்லாததேர் முச்சாணுமோடாது" மந்திரியில்லாதயோசனையும் ஆயுதமில்லாத ஸேனையுங்கெடுவது நிச்சயம். நீயின்றியோர் காரியமும்செய்ய நான்வல்லவனல்ல." என்றான். இதைக்கேட்டு ராஜஹம்ஸன் சற்று சிரித்துக்கொண்டு "மஹாராஜ, உலகத்திற்குக் கண்கள் மூன்று. ஒன்று நற்குணங்கொண்ட மன்னவன். இரண்டு-மன்னனுக்குரிய நீதி சாஸ்திரங்களில் பரிபூர்ணமானக்ஞானம். மூன்றாவது, மந்திரி. உலகமெனும் ரதத்திற்கு இம்மூன்று சக்கரங்களில் ஒன்று இல்லையென்றாலும் அசைந்து ஓடாது." என்றான். அதற்கு ராஜகுமாரன், "ஆம். ஆதலின், ஸர்வகலைகளிலும் வல்லவனான மந்திரி நீயிருக்குங்கால் மந்திராலோசனை செய்வதிலென்ன யோசனை?" எனமொழிந்து மௌனமாகவிருந்தான். "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" தான் அரசனாகிவிட்டதுபோலும், ராஜஹம்ஸன் தனக்கு மந்திரிபோலும் இப்பொழுதே கலஹம்ஸனுக்குத் தோன்றுகிறது. அதிலென்ன ஸந்தேகம்? கலஹம்ஸன் கூறியவற்றைச் செவியுற்ற ராஜஹம்ஸன் "ராஜகுமார, நாம் நினைப்பது ஸாதாரணமான காரியமல்ல. ஆதலின் அவசரப்படவொண்ணாது. நிதானித்துப்பார்க்கவேண்டும். ஆகையால் இவ்விஷயத்தை இன்று இரவில் யோசித்துத் தீர்மானம்செய்வோம்" என்றான்.

## ஸ்தபகம் 16.

"ராஜேந்திர, சந்திரனிடத்தில் உஷ்ணமும், சூரியனிடத்தில் இருளும், அனலிற் குளிர்ச்சியுமிருந்தால் நம் கலஹம்ஸனிடமும் தோஷமுள்ள குணங்கள் இருக்கும். "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்றுரைப்பது வழக்கமாயிற்றே! தாங்கள் வெகு காலத்திற்குமுன் குழந்தையைக் கண்ணுற்றிருக்கிறீர்களென்றாலும், குழந்தையாயிருக்கும்போதே அவனது விளையாட்டுக்களும் மதுர மதுரமான ஸல்லாபங்களும் அவனது இணையற்ற புத்திவைபவத்தைக்காட்டினவன்றோ? நானோ அவனை நேரிற்கண்ணுற்றேன். அவன்மேல் சற்றும் குற்றமின்று. வெகுநாட்களாகப் பழக்கங்கொண்டான். ஸகலகலைகளையும் கற்பித்தான். மாரனைப்போ லழகு

வாய்ந்தவன் நம் கலஹம்ஸன். கமலினியும் ரதிதேவிபோன்றவளாம். அனுரூபமான பதிதானிவன் என்று காதல்கொண்டனள். ஜகத்தைஜயிக்கும் தீரனான மாரனது ஆக்ஞையைமீறி நடப்பது அஸாத்தியமானதாலும், மிக்கவுன்மாதத்தை யுண்டுபண்ணுவது அபிநவமான யௌவனத்தினியல்பானதனாலும், அவ்வாறேயின்னும் பற்பல காரணங்களாலும் கலஹம்ஸனியற்றியது அவனது யௌவனத்தின் குற்றம். மேலும் காந்தர்வ மணம்புரிவது வேந்தர்களுக்கு ஸஹஜந்தானே. ஆகையால் தாங்கள் இவ்வண்ணம் கலஹம்ஸனிடம் கொண்டகோபத்தை யாற்றவேண்டும். ரத்னஸேனன் ஸங்கதிகளையெல்லாம் ஸரியாக அறிவானாகில் எல்லாம் அனுகூலமென்பதில் ஐயமொன்றுமில்லை. ஐய, எதற்கும் நாம் இந்நகரத்திற் பிரவேசித்து கலஹம்ஸ ராஜஹம்ஸர்கள் இவ்விடம் விட்டகன்றபின் நடக்கும் விருத்தாந்தங்களைக் கவனிப்போம். ஐயோ! அரசியைத் தனியேவிட்டுச் சென்றார்களே! என்செய்கின்றாளோ பாவம்! ரத்னஸேனனிடமிருந்து அவமதியடைந்ததனால் ரத்னத்வீபத்தை விட்டுச்சென்றான் கலஹம்ஸன். கொஞ்சமேனும் க்ஞானமின்றி ராஜஹம்ஸனும் சென்றானே! தான் அவ்வாறு தன்னை வளர்த்த அன்னையைவிட்டுச் செல்வது அதர்மமென்று சற்றும் யோசித்தானில்லை. ஆதலின் நாம் சென்று ராணியிருக்குமிடமறிந்துகொண்டு பிறகு செய்யவேண்டிய ஸங்கதிகளை யுக்தம்போல் யோசித்துக்கொள்வது நலமென்று தோன்றுகின்றது” என்றான் மந்திரி. இம்மொழிகளைச் செவியுற்ற மன்னன் “மந்திரிச்ரேஷ்ட, அவ்வாறு உரைக்கலாகாது. ராஜஹம்ஸனையவ்வண்ணம் நினைக்கவேண்டாம். அவன் மிக்க நற்குண நற்செய்கைகளுடையோனாயிற்றே! அவன் பன்முறையும் கலஹம்ஸனுக்கு நன்மொழிகள் கூறியேயிருப்பான். கலஹம்ஸனது துஷ்கிருத்தியத்தாலன்றோ இவ்வாறெல்லாம் ஸம்பவித்திருக்கிறது. எதற்கும் நாம் சென்று நோக்குவோம்” என்றான். உடனே இருவரும் துறவியுருவுடனேயே பட்டணத்திற் பிரவேசித்தனர். ரத்னத்வீபத்தின் ராமணீயகத்தையும் செழிப்பையும் கண்டு சந்திரவர்மன் மனமகிழ்ந்தான். இவ்வாறு இவ்விருவரும் அழகிய அநேக வீதிகளின்வழியே நடந்து சென்று கடைசியில் ராஜவீதியை அடைந்தனர். விசித்ரமாக நிர்மிக்கப்பட்டிருக்கும் அரண்மனையைக் கண்டார்கள். அவ்வீதியின் அழகை வர்ணித்துக்கொண்டு

மெல்ல நடந்துசென்றார்கள். அப்பொழுது மன்னன் மந்திரியை நோக்கி "என்ன ஆச்சரியம்! இந்நகருக்கு நிகராக இப்புவியில் வேறு இல்லையெனத்தோற்றுகின்றது. மணிமயமான மதில்கள் வானமட்டு மெட்டியிருக்கின்றன. மந்திரீ! இம்மதிலின் பக்கத்தில் மலர்ந்திருக்கும் உற்பலங்களைப்பார் இவ்வரண்மனையின் வெளிப்புறமேயிவ்வளவு அழகுள்ளதாயிருக்கின்றதே. இதனுட்சென்று நோக்கவேண்டுவதவசியமல்லவா!" என்றும் இன்னும் பலவாறுகவும் பேசிக்கொண்டே நடந்துசென்றனர். அவ்வாறவர்கள் செல்லும்பொழுது, தீராதசோகத்தால் ஆராதமனத்தோடு ஆறுய்க் கண்ணீர் பெருக்கி யாரோ அழுகிறவண்ணம் ஓர் பரிதாபகரமான பிரலாபத்தைக்கேட்டார்கள். திடீரென இருவரும் நின்றார்கள். பிரமித்தார்கள். சப்தமின்னவிடத்தினின்றும் வருகிறதென்று தெரியவில்லை. வெகு சூட்சுமமாக உற்றுக்கேட்டான் மந்திரி. அச்சப்தம் அரண்மனையினுள்ளிருந்து வருவதாகத் தோன்றிற்று. இருவரும் ஏகாந்தமான மனத்துடன் அன்னிய விஷயங்களைவிட்டு சித்திரத்தில் எழுதப்பட்டவுருவங்கள்போல அவ்விடத்திலேயே நின்று சற்றுநேரம் கேட்டிருந்தார்கள். சங்கதியொன்றும் நன்றாகத் தெரியவில்லை. மகாவியசனம் கொண்டார்கள். பின்னும் சற்று நிதானித்துக்கேட்ட மந்திரியரசனைப் பார்த்து "மன்ன! என்ன செய்வோம். கின்னரவநிதையின் தொனிபோலிருக்கின்றதே! கணவனைப்பிரிந்த காதலியின் பிரலாபமாக இருக்கவேண்டும். கலையைக் காணுத மான்போற் கதறுகின்றாள். இப்பெண்மணி யாரேனும் தேவஸ்திரீயோ? அல்லது கந்தர்வ வநிதையோ; அன்றேல் இவ்விதமான ஸ்வரமாதுர்யம் பூலோக நங்கையருக் கெங்கிருந்துண்டாவது? காமனைக் காணுத ரதி பரிதபிப்பதுபோலிருக்கின்றது. சாரீரத்தையனுசரித்து சரீரத்தை யனுமானஞ்செய்தால் ஸாதாரணஸ்திரீயெனத் தோற்றவில்லை. ஏதோ மஹாசோகம் நேர்ந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இம்மாதிரியான வனிதைகள் இவ்வண்ணம் வருத்தமுறக் காரணமேது? உலகத்தில் சரீரமெடுத்தோருக் கெல்லாம் துக்கமும் கூடவே பிறக்கின்றது. கொஞ்சமும் நெஞ்சீரமற்ற தெய்வம்! அட! புஷ்பம்போல் ஸரஸமாகிய இவ்விதச் சரீரங்களையும் சோகத்துட்படுத்துகின்றதே! ஐயோ!" என்றான். அவ்வார்த்தையைக் கேட்ட மன்னன் "பின்னும் ஆரம்பித்து பிரலாபம்

நன்ருய்க்கேட்போம். ஓர்வேளை ஸமாசாரம் தெரிந்தாலும் தெரிய வாம்.” எனவுரைத்தான். இவ்வாறு அவ்விருவரும் சிந்திய கண்ணீருடன் கேட்டுக்கொண்டிருக்கையில் “ஹா! நாத! கமலினீவத்ஸல! இவ்வாறு என்னை யனுதையாகவிட்டுச் சென்ருயே! இது ஸரியா! அன்றுகண்டவுன்னை யென்று காண்பேன்? என் ஜீவனும் போகக்காணேனே! காமஸுந்தரனே! அட கமலினியின் மானஸஹம்ஸமே! நீ யெங்கு பறந்தாய்? உன்னைக் காதலெனும் கயிறுகொண்டு கட்டியிருந்தேனே! நீ யெத்தனை தூரஞ்சென்ருலும் திரும்பியென்னிடமே வருவாயென்றிருந்தேனே! நீ யிக்கமலத்தைத் தவிர வேருெரு கமலத்தையும் கண்ணுறக் காணுயென்றிருந்தேனே! என்மேலுனக்கிருந்த ஆசையெனும் பாசம் என்னளும் அருதென்றிருந்தேனே! இன்னும் உன்னுடன் சின்னுட்கள் கொஞ்சலாமென்றிருந்தேனே——(சில நிமிஷங்கள் வரை மௌனம்)—அடி மல்லிகையே! உல்லாஸமாக வுன்னை யெதற்காக வளர்த்தேன்! உன்னை யல்லவோ முதன்முதலில் என் காதலனின் கமலக்கண்களிலொற்றினேன்! அவன் எங்கு சென்ருன்? நீ காண்பதுண்டோ?—(மௌனம்)—அஞ்சுகமே! நீ யென்னுயகன் வந்தானென்றறிந்து என்மேற்பறந்து கொஞ்சிக்குலாவி அறிவிப்பாயே! இப்பொழுது அவனெங்கு சென்ருன்? நீயாவது காண்பதுண்டா?—(மௌனம்)—அசோகமே! நான் சோகப்படுவதுனக்குத் தெரியவில்லையோ? உன்னை நான் உதைத்த வுதைகளை மறந்தாயோ? கொஞ்சமேனும் நீ யஞ்சுவதில்லையே! உன்னிடம் கேட்கின்றேன் நீ சொல்! என்னுசைத்தலைவனெங்கு சென்ருன்? நீயேனும் காண்பதுண்டா?—(மௌனம்)—வண்டினங்காள்! உங்களை யார் இங்கேவியது? என் மணவாளனைக்கண்டு மகிழ்வுற்று வந்தீரோ?—(மௌனம்)—அம்புலியே! பாவியாகிய என்னுவியைக்கொண்டு செல்லலாகாதோ? என்னை யேன் வீணே வருத்துகின்ருய்?——” என்றும் இன்னும் பலவிதமாகவும் உன்மாதாவஸ்தையால் புலம்பும் பிரலாபங்கள் கேட்டன. உடனே மந்திரி “ராஜசிகாமணீ! நம் கண்மணி கலஹம்ஸனிடம் காதல்கொண்ட கமலினீயின் கடோரமான நிலைமையை யென்னென்று கூறுவேன்? ஐயோ பாவம்! பாலியத்தில் இவ்விருவருக்கும் இவ்விதத்துன்பங்கள் நேர்ந்தனவே!” என்றுரைத்தான். “என் செய்வோம்! எல்லாமீசன் செயல். நாம் கூடிய சீக்

கிரத்தில் இக்கஷ்டங்களினின்றும் நம் கண்மணிகளை விடுவிக்க முயலவேண்டும்" என்றானரசன். இவ்வண்ணமிவர்கள் மிக்க வருத்தத்துடன் பேசிக்கொண்டு நடந்து சென்றார்கள். இதற்குள் கமலினியின் கதியைக்கண்டு செல்வோமென்றாவல்கொண்டவைபோல், கண்ணுறங்கிய கமலங்கள் கண்விழித்தன. நம் கமலினீ கலஹம்ஸர்களனுபவிக்கும் கடுந்துயர் சொற்பகாலத்திற்குள் தீருமென்று புகல்வதுபோல் இருள் மறைந்தது. தனது பிரதாபத்தால் கலஹம்ஸனிப் பூமண்டல முழுமையும் ஆள்வானென்றுரையாடுபவன்போல் ஜோதிர்மயமான வுடலுடன் தினமணியுதித்தான். இதோ போகின்றவரிருவரும் யாரோவெனவையமுறவேண்டாம். இவர்களை நன்றாக நமக்குத் தெரியுமல்லவா? ஆனால் இவர்கள் இவ்வூருக்குப் புதியவர்கள் தான். ஆதலின் ஜனங்கள் இவர்களைக்கண்டு அங்கங்கே பிரமித்து நிற்கின்றனர். "இவர்களைக் காணும்போது ஸகல லட்சணயுக்தர்களான சக்ரவர்த்திகள்போலிருக்கின்றனர். இவர்களணிந்திருக்கும் ஆடை முதலியவற்றை நோக்குங்கால் இவ்வுலகத்திலெதிலும் ஆசையையொழித்து அனுதினமும் பெருந்தவம்புரியும் முனிகள்போலிருக்கின்றனர்" என்கிறார்கள் சில ஜனங்கள். "அன்று, இவர்களரசனும் மந்திரியும், ஏதோ தீராத சோகத்தால் இவ்வேடம் புரிந்திருக்கின்றனர். இன்னாள்மட்டும் இவர்களிவ்வூரிலில்லை" என்கின்றனர் பல ஜனங்கள். எல்லோர் சொல்லுவதையும் நல்ல கவனத்துடன் கேட்டுக்கொண்டே யிருவரும் மெல்லமெல்லச் செல்லுகின்றனர். ஒவ்வொரு வீதியாகச் சென்றனர். ஒன்றும் புரியவில்லை. "ஐய, ஈதென்னவோர் அதிகருணமான சப்தம் கேட்கின்றதே. சற்று நின்று கேட்போம்" என்றானிவ்விருவருளொருவன். இருவரும் நின்றார்கள் சில நிமிஷம். இவ்வீட்டுத் திண்ணையின்மீதுட்காருகிறார்கள். கதவடைத்திருக்கின்றது. அனாதையாகப் பரிதபிக்கும் ஓர் அபலாரத்னத்தின் அதிதீனமான பிரலாபம் கேட்கின்றது. "இன்னும் நமக்கென்ன ஸந்தேகம்?" என்றானொருவன். "ஐய, அப்படியல்ல, சற்று பொறுத்தருளவேண்டும்" என்றான் மற்றொருவன். இதற்குள் கவாடந்திறக்கப்பட்டது.

(இன்னும் வரும்).

குப்புசாமி ஐயர்.




# டாக்டர் ராஷ் பிஹாரி கோஷ்.

டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் என்பவர் கல்கத்தா ஹைகோர்ட்டில் மிகவும் பிரஸித்தி பெற்ற நியாயவாதி. வங்காள நாட்டில் இவரின் மிக்க ஸாமர்த்தியமுள்ள நியாயவாதி வேறு யாருமே இதுவரையிலும் இருந்ததில்லையெனலாம். ஸ்தாவர ஜங்கமஸொத்துக்களை ஈடுவைக்கும் சட்டத்தைப்பற்றி இவரால் நன்காராய்ந்து எழுதப்பட்டிருக்கின்ற சட்டநூல் இந்தியாவிலுள்ளோர் யாவராலும்நன்று நன்றென்று கொண்டாடப்படுகின்றது. இது பன்முறை புதிது புதிதாகப் பதிப்பிக்கப்பட்டும் வருகின்றது. சென்ற நாற்பது வருஷகாலமாய் இவரே கல்கத்தா ஹைகோர்ட்டில் மிகுந்த கீர்த்திபெற்று வருகிறார். இவரது ஸாமர்த்தியத்தைக்கண்டு இந்தியா கெவர்ன்மெண்டார் இவரை

இந்தியா சட்ட நிரூபணஸபையாரில் ஒருவராக நியமித்த தில், இவர் அதின் தலைமை அதிகாரத்தை வகித்துவந்ததுமன்றி, இந்நாட்டில் இவர்பேர் என்றைக்குமே அழியாதிருக்கும்படியான இரண்டு விஷயங்களைப் பற்றிச் சட்டமாக்கி அவற்றை எல்லோர் மன்முங்குளிரும்படி ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்.

கல்வியிலோவெனின், மிகச்சிறந்தவர்; இங்கிலீஷ் பாஷாக் ஞானத்தில், இவருக்கு, காளிதாஸ மஹாகவிக்கு நிகரென்று சொல்லப்படுகின்ற ஷேக்ஸ்பியர் மஹாகவி செய்திருக்கின்ற நாடகங்களெல்லாம் நன்றாய் வாய்ப்பாடமாக வருமென்றால் இவரது திறமையைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? நமது சென்னை ராஜதானியில் ஸர் பாஷ்யமய்யங்காரும், ஸர் ஸுப்பிரமணிய அய்யரும் எப்படிச் சட்டத்தில் அற்புதமான நுண்ணறிவுடையவர்களோ அப்படியேதான் இவருமெனலாம். இந்தியாவிலுள்ள சட்டங்களையெல்லாம் அயல்நாட்டாரது சட்டங்களோடு ஒற்றுமைப்படுத்தி அழகுபெற விரித்துரைப்பதில் இவர் அதிநிபுணர். இளம்பிராய முதற்கொண்டே இவர் தமக்குத் தாமாகவே உழைத்து முன்னுக்குவந்து பெரும்பதவியைப் பெற்றார். லக்ஷ்மிதேவியும், ஸரஸ்வதியும் இவரிடத்து நின்று நீங்காமலும், பொறாமை கொள்ளாமலும், இணைபிரியாது ஒற்றுமையாய்க் குடிகொண்டிருக்கின்றார்கள்.

இவர் ஜகத்பந்துகோஷின் ஸீமந்த புத்திரர். 1845ம் டிஸம்பர்மீ 23உ பரத்வான் ஜில்லாவில் இவர் வங்காளநாட்டிலுள்ள சிற்றூராகிய டோரிகோணவில் பிறந்தார். இவர் அதிகமான ஸம்பன்னரல்லாவிடினும், நல்லநிலைமையிலிருந்தவர். ராஷ்பிஹாரிகோஷ் பால்யத்தில் பாங்கூரா என்ற பட்டணத்துப் பாடசாலையில் கல்விபயின்றார். சிறுபிள்ளையாயிருந்து படிக்கும்போதே இவர் மகாபண்டிதரா

வாரென்று நன்குபுலப்பட்டது. 1860ம்ஆ இவர் ஸர்வ கலாசாலை பிரவேசபரீக்ஷைகொடுத்து இரண்டாவது வகுப்பில் தேறினர்; அப்போது இவருக்குப்பதினறாவது வயது; அந்தப் பாடசாலையில் அந்தவருஷத்தில் பிரவேசபரீக்ஷை வகுப்பில்லை; இவர் ஒருவர்மட்டுமே கீழ்வகுப்பிலிருந்தபடியே சென்றபடியால், தேறினவர்களில் அப்படிக்குத் தாழ்ந்துபோகவேண்டியதாயிற்று. அடுத்த வருஷந்தொடங்கி இவர் கல்விகற்குநிமித்தம் கல்கத்தா நகரத்துக்குச்சென்று அங்குள்ள ராஜதானி வித்தியாசாலையிலமர்ந்துகொண்டார். அதில் சேர்ந்துகொண்டு 1862ல் எப். ஏ. பரீக்ஷை கொடுத்ததில், இவர் அந்த பரீக்ஷையில் தேர்ந்தவர்கள் எல்லோர்க்குமே தலைமையாய் நின்று பெருங்கீர்த்தியைப் பெற்றார். அடுத்தாற்போல 1866ம்-வருஷத்தில், இவர் பி. ஏ. பரீக்ஷை கொடுத்ததில் அதிலும் அந்தப்படியே சிங்கக்குட்டியைப் போல எல்லோர்க்குந் தலைமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கடுத்த மறுவருஷத்தில் இங்கிலீஷில் எம்.ஏ. பரீக்ஷைகொடுத்ததில் அதிலும் முதன்மையாகத் தேறிப்பல பரிசுகளைப்பெற்றார். இவர் வித்தியாப்பியாஸம் பண்ணுங் காலத்தில் ஒரு நொடிப்பொழுதையாயினும் வீண்போக்காமல் அல்லும்பகலும் அதுவே கருத்தாயிருந்ததனல் கல்வியில் அத்தனை ஆழ்ந்த அறிவுடையவரானர். இந்தக் காலத்திலேதான் இவர் ஒழிந்திருக்கும்போதெல்லாம் தமக்குப் பிரியமான ஷேக்ஸ்பியர் மஹாகவியின் நாடகங்களுள் ஒன்றையேனும் விடாமல் எல்லாவற்றையும் பாடஞ்செய்தார். அதனல் இவர் தாம் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசும்போதும், எழுதும்போதும் ஷேக்ஸ்பியரிலுள்ள சொற்றொடர்களையும், வாசகங்களையும் அநுசரியாமலிருப்பதில்லை. அப்படியே இங்கிலீஷிலுள்ள மற்ற வித்துவான்களின் காவியங்களையும் கருத்தாய்ப் படித்து வந்தவராகையால்

இவருக்கு இங்கிலீஷில் சிறந்த பாண்டித்தியமுண்டா யிற்று; இப்பொழுதும் இந்தியா முழுவதிலும் இவரைப் போல இங்கிலீஷ் பாஷையில் திராக்ஷபாகமாய்க் கருத்து களையமைத்து அர்த்தபுஷ்டியாய் விஷயங்களைப்பொருந்த எழுதும் ஸாமர்த்தியம் வேறு யாருக்குமே இல்லையென்றுந் துணிந்து கூறலாம். 1867-ம் வருஷத்தில் பி. எல். பரீக்ஷை கொடுத்து அதிலுந்தேர்ந்து அந்த வருஷத்திலேயே கல்க த்தா ஹைகோர்ட்டில் வக்கீல் வேலையில் அமர்ந்தார். அந்த வேலையில் அமர்ந்துகொண்டும், முதலில் யார்க்குமேயுள்ள வழக்கப்படி இவரும் சிறிதுகாலமளவும் அதிகசிரமபட்டு அதன்பின்புதான் மெள்ளமெள்ளத் தேர்ச்சிபெற்று நன் ருய் ஊன்றிக்கொண்டார்.

ராஷ்பிஹாரிகோஷ் வக்கிலானகாலத்தில், ஜகத்பிரஸி த்தி பெற்றிருந்த மகானுகிய த்வாரகாநாதமித்திரர் என் பவர் வக்கீல் வேலையை விட்டு கல்கத்தா ஹைகோர்ட்டில் நியாயாதிபதியானர். துவாரகாநாதமித்திரர் இன்னுஞ்சிறி துகாலமளவும் இருந்திருப்பாரேயாயின் இவருடைய பெரு மை குன்றின்மேலேற்றிய தீபத்தைப்போல அப்பொழுதே எங்கும் ப்ரகாசித்திருக்கும். ஆரம்பத்திலேமட்டும் இவர் பெருமை நன்ருய் வெளியே பரிமளிக்காமல் மற்றைய ஸா தாரணமான வக்கீல்களைப் போலவே தானிருந்தார். அதன் பின்பு, தாம் ஆதியில் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்தி ருந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு உலகம் புகழும் பெரு மையுடையவரானர். இவர் கல்வியிலேயே நோக்கமுடை யவராதலின், ஒழிந்த வேளைகளிலெல்லாம் சட்டங்களைப் படித்து அவற்றின் உள்ளுரையான பொருள்களையெல்லா ம் நன்குணர்ந்தார்.

மற்ற வக்கீல்களைப்போல நமது நாட்டுச் சட்டங்களை யேயன்றி, இங்கிலாண்டு, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய

அயல்நாட்டுச் சட்டங்களையும், நன்குணர்ந்தாராதலின், சட்டங்களில் இவரைஸர்வஜ்ஞர் என்று சொல்லும்படியாயிற்று. இவ்வாறு இவர் நான்குவருஷகாலம் சட்டங்களை நன்ருய் ஆராய்ந்ததன்பின் கல்கத்தா யூனிவர்ஸிட்டியில் புதிதாய் உண்டாக்கப்பட்ட உயர்தரப் பரீக்ஷையிலும் வெகு கௌரவமாய் 1871-ம் வருஷத்தில் தேர்ந்தார். சட்டங்களில் இவருக்கு இத்தனை ஆராய்ச்சியுண்டானதைக் கண்டு கல்கத்தா ஸர்வகலாசாலையில் மிகவும் உன்னதபதவியான டாகூர் சட்ட உபநியாஸஞ்செய்யும் உத்தியோகமும் இவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் இந்த வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது தான் இதுவரையிலும் இந்தியாவில் சட்டமாயிராத போக்கிய (ஒத்தி) மென்கிற சட்டத்தை எழுதிப் பிரசுரஞ்செய்தார். பின்பு 1882-ம் வருஷத்தில் ( Transfer of property Act. ) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்ட்டி ஆக்ட் ஏற்படுமளவும் இதுவே அந்தஸ்தானத்தில் உயர்ந்ததாக வழங்கப்பட்டு வந்தது. இது இந்தியா முழுமைக்குமே மிகவும் உபயோகமானது பற்றி இதுவரையிலும் மூன்று பதிப்பாய் இப்பொழுது நான்காவது பதிப்பும் ஆகப்போகிறது. இந்தியாவில் ஒத்தி விஷயமாய் இன்னும் இதுவே முக்கியமான சட்டம். இவர் எப்பொழுதும் வேலையுடையவராய், அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்திருக்கிருர். W. C. பானர்ஜி, துவாரகாநாத மித்தரர்முதலிய நாடெங்கும் பெரும்புகழ்பெற்ற நியாயவாதிகளைப்போலவே இவரும் புகழ்பெற்றிருக்கிருர். இவ்வாறிருப்பதினுல், கூட விருந்துகேட்பவர், இவர் பிரகஸ்பதி தாஞேவென்று நினைக்கும்படி தேன்மாரியாகப் பொழிவார். தாம் வாதிக்கின்ற விஷயம் உண்மையானதென்று கண்டால், தமது கக்ஷி ஜயிக்கும்வழியையெல்லாந்தேடி, யார்க்கும் பொருள் எளிதில் விளங்கும்படி அற்புதமாய்

வாதிப்பார். இவர் இலக்கிய இலக்கணங்களைப் பலகாலமும் நன்குணர்ந்தவராதலின் இவர் பேசும்போது குற்றங் குறைகள் ஒன்றுமிராவாம். இவ்வாறு நாளுக்குநாள் இவருக்குத் தமது ஸாமர்த்தியத்தினால் இன்னும் எத்தனையோ பெரும் பிரதிஷ்டையும் ஒன்றின்பின் ஒன்றாயுண்டாயின. 1877-ம் வருஷத்தில் இவரை கல்கத்தா யூனிவர்ஸிட்டியார் பி. எல். பரீக்ஷைக்குப் பரீக்ஷகராக நியமித்தார்கள். 1884ம் வருஷத்தில் கல்கத்தா யூனிவர்ஸிட்டியார் தாமாகவே இவரை கௌரவப்படுத்தி (Doctor of Laws) டாக்டர் ஆப் லாஸ் என்னும் பட்டத்தைக் கொடுத்ததுமன்றி, அதின் மெம்பராகவும் வைத்துக்கொண்டார்கள். 1893-ம் வருஷத்தில் கல்கத்தா யூனிவர் ஸிட்டியில் சட்டத்திற்கே தலைவரானார். 1895-ம் வருஷத்தில் கெவர்ன்மெண்டாரால் இவருக்கு C. I. E. என்னும் ராஜவிருதுங் கொடுக்கப்பட்டது. ஸிவில்புரொஸிஜரில் இதற்குமுன்னெல்லாமிருந்தபடி ஜங்கமஸொத்தை ஏலம் எடுத்தவன் அதனை ஆக்கிரமித்துக்கொண்டுபோகாதிருக்கும்படி, ஒருமாத காலத்திற்குள்ளே நூற்றுக்கு ஐந்து வட்டியைச் சேர்த்து ஏலத்தொகையைச் செலுத்திவிடுகிறபக்ஷத்தில் அந்த ஸொத்தை அவனிடத்திலேயே விட்டுவிடவேண்டியதென்று ஸ்தாபித்த வள்ளல் இவரேயாம். இவரால் இவ்வாறு செய்யப்படாதிருந்தால் எத்தனையோ குடும்பங்கள் அமிழ்ந்தேபோகவேண்டும்; ஆதலினால் இவரை இந்தியாவில் வாழ்த்தாதவரில்லை.

அன்றியும், சென்ற இரண்டு மூன்று வருஷகாலமாக சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப்போல இவரது தேசாபிமானத்தினால் இவரது கீர்த்தி நாளுக்குநாள் எங்குமே பரந்து பிரகாசிக்கும்படியாயிற்று. இவர் 1906-ம் வருஷத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மஹாஸபைக்கு வந்த

வர்களையெல்லாம் உபசரித்து அழைத்து வரவேற்கும் பதவியைப்பெற்று, இங்கிலீஷ் பாஷைக்கே ஆபரணமென்று நினைக்கத்தக்க அதி சிலாக்கியமான உபநியாஸமொன்றை அழகுபெறச்செய்தார். இதுமுதற்கொண்டுதான் இவரைச் சிறந்த தேசாபிமானியென்று உலகமுழுதும் புகழத்தலைப்பட்டது. இதே காலத்தில் இவர் இந்தியாவின் வரவு செலவு கணக்கைப்பற்றிச் சர்ச்சை செய்ததில், துரைத்தனத்தார் ஆராய்ந்து பாராமல் வீணே இந்தியாவின் பணத்தையெல்லாங் கொள்ளையிடுவதுபோல வாரியிரைப்பது தகாதென்று, ஒவ்வொன்றாய யார்க்கும் எளிதில் புலப்படும்படி வெகு அழகாய் எடுத்துக்காட்டினார். இவர் சொன்னது ஒவ்வொன்றுமே வாஸ்தவமாதலின் யாராலும் எதிர்த்து ஆக்ஷேபிக்கக்கூடவில்லை.

இவற்றையெல்லாம் விட இவர் இந்தியாவிற்கு ஓர் நிலையான பேருதவியைச் செய்ததென்னவெனின், இங்கிலாண்டிலிருந்து புதிதாக வருகின்ற ஸிவிலியன்களுக்கு இந்தியாவிலுள்ள ஸீவிவ் கிரிமினல் நடவடிக்கைகள் ஒன்றுமே தெரியாதிருக்கையில், அவர்களுக்கு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்வேலையைக் கொடுத்துவருகின்றதனால் நியாயங்களெல்லாந்தவறி அதிக அக்கிரமமுண்டாகிறதென்றும், அதிலும், அவர்கள் வந்ததுவுடனே அதிசீக்கிரத்தில் அவர்களுக்கு அந்த வேலையைக்கொடுப்பது இன்னுமேமுழுமோசந்தானென்றும் தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டினார். இந்த ஏற்பாடு அங்கிலேயர் இந்தியாவை ஆளவந்த பழையகாலத்துக்கேற்றதென்றும், நாகரீகமுள்ள இக்காலத்தில் இது ஒருபொழுதும் ஏலாதென்றும் எடுத்துரைத்தார். இந்த அபிப்பிராயத்துக்கு மாறாக, லார்ட் டப்ரின், லார்ட் கர்ஸன் முதலானோர், ஆங்கிலேய ஸிவிலயன்களை மஹா மேதாவிகளென்றும், எந்த வேலையைப் பார்ப்பதிலும் அதிசூரர்களெ

ன்றும், அதி நிபுணர்களென்றும் எவ்வளவுதான் அவர்களை ஸ்தோத்திரம் பண்ணினாலும், இது உண்மையன்றாதலால், ஆழ்ந்த விவேகிகள் இதனை ஒப்புக்கொள்ளாரென்பதே ஸரியாகும். இந்தியாவில் நெடுங்காலம் பழகி, ஸிவில் உத்தியோகங்களிலமர்ந்து, எல்லோருங்கொண்டாடும்படி வெகு நன்றாய் வேலைபார்த்து வருகின்ற ஸப்ஜட்ஜி முதலானோர்கள், ஒன்றுமே தெரியாதிருக்கின்ற இந்த அயலார்களைக் காட்டிலும் நியாயத்தை யறிந்து வெகு நன்றாய்த் தீர்மானிப்பார்களென்பது யார்க்குமே உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இது உண்மையென்பதை இந்தியாவில் நெடுங்கால அனுபவமுள்ளவர்களும், பெரிய அந்தஸ்துக ளிருப்பவர்களுமான அங்கிலேயர் நன்றாயறிந்துமிருக்கிறார்கள். இதைப்பற்றி இத்தனை தைரியமாகவும், அழகாகவும் எடுத்துப்பேசியவர்கள் இதுவரையிலு மில்லையெனலாம். இதனால், நல்ல விளைநிலத்தில் ஏற்றகாலத்தில் வித்தூன்றியதுபோல இனிமேல் இந்தியாவுக்கு நல்ல பலனுண்டாகுமென்பதற்கையமில்லை.

வங்காள நாட்டில் விபக்த ஸகோதரர்களின் வீட்டை அவர்களில் யாராவது பட்ட கடனுக்கென்று தீர்மானிக்கப் பட்டால், வம்சபாரம்பரியமாய் ஆண்டு அனுபவித்துவந்த அந்த வீட்டை மற்றவர்களின் நெஞ்சுருக அன்னியர்கள் ஏலத்திலெடுத்து ஆக்கிரமித்துக்கொள்வது முற்றுமே அநியாயமென்றும், ஆதலினால் அதன் விலையைக்கோர்ட்டாரே தங்கள் யுக்தானுஸாரமாய் மதித்து விதிக்கவேண்டுமென்றும், அப்படிக்கு ஏற்படுந்தொகையை மற்றைய ஸகோதரர்கள் கொடுத்துவிட்டால் அந்த வீட்டை அவர்களிடமே விட்டுவிடவேண்டுமென்றும் நியாயவழிபிறழாத சட்டமொன்றைச் செய்வித்திருக்கிறார். இக்காலத்தில் இந்தியாவில் அடிக்கடி கெவர்ன்மெண்டாருக்கு விரோதமாகப்

பல கலகங்கள் நேரிடுகின்றமையால், அதைப்பற்றி ஓர் சட்டத்தையுண்டுபண்ணியகாலத்தில், இதுவிஷயத்தில் துரைத்தனத்தார் வரம்புகடந்து செய்வது நியாயமல்லவென்றும், எங்கேயோ அராஜகம்போன்ற ரஷ்யாமுதலிய கொடுங்கோன்மன்னர் நாட்டிலுள்ள அநியாயமான சட்டத்தை நாகரீகம் மிகுந்த இந்நாட்டில்செய்யப்பார்ப்பது அங்கிலேயரின் தருமமான ஆளுகைக்கு முற்றுமே ஏலாததாகுமென்றும் அலசிஅலசிப்பேசி, ஸத்தியகாமிகளின் மனங்குளிரும்படிப் பலவாறாக நிரூபித்தார். இத்தனைக்கிருந்தும் இவர் எந்தக் காரியத்திலென்றாலும் உலகத்தோடேயொட்டி, லௌகீக நடையையும், வைதீக நடையையும் நன்றாக அநுஸரித்து, ஸாதுஜநங்களின் மனங்கோணாது செய்வதையே குறியாகவுடையவர்.

இவருக்கு இப்பொழுது அறுபது வயதாயிற்று; இன்னமும் தேகவலிமையும், மனோவலிமையும் சிறிதுங்குன்றாதிருக்கிறார். இவருடைய வம்சத்தாரெல்லோருமே "வேதநூற் பிராயிரம் நூறு" என்றபடி நெடுங்காலம் வாழ்ந்திருப்பவர்கள். இவர் தந்தை ஸமீபகாலத்தில் எண்பதாவது வயதில் காலகதியை யடைந்தார். இப்பொழுது நமது சென்னை நகரைச்சார்ந்த மைலாப்பூரில், பெரும்பான்மையாய் வக்கீல்களும், ஜட்ஜிகளும் குடியிருப்பதைப்போலவே, கல்கத்தாவிலுமுள்ளவிடமாகிய பவானிபுரத்தில் இவர் நெடுநாள் குடியிருந்தார். இப்பொழுதிவர் அந்நகரத்தை விட்டு நெடுந்தூரத்திலுள்ள அழகிய ஓர் தனி மாளிகையிலிருக்கிறார். பிரௌடையாகாத பெண்களை புருஷர்கள் பலவந்தப்படுத்துவது கூடாதென்று ஓர் சட்டமானது 1891-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டகாலத்தில், மற்றவர்களைப்போல "ஆம், ஆம்" என்று இவர் தலையாட்டியபடி ஒப்புக்கொள்ளவில்லை; இவர் பிராசீனவழக்கங்களை அநுஸரித்

தே நடப்பார்; ஆயினும், "பழயன கழிதலும், புதியன புகுதலும்" என்றபடி தமது புத்திக்கேற்ப நல்லதென்று தோற்றும் புதுவழிகளைத் தாம் தழுவுதலுமுண்டு.

"திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று ஔவை கூறியபடியே இந்துக்கள் ஸமுத்திர யாத்திரை செய்யலாமென்பதே இவரது கொள்கையாகும். தமக்கு விடுமுறை கிடைத்தபோதெல்லாம், பிரான்ஸ், இத்தலி இங்கிலாண்டு முதலிய தூரதேசங்களுக்குக் கப்பல் யாத்திரை செய்ததுமன்றி, இந்தியாவிற்கு ஸமீபத்திலுள்ள நாடுகளுக்கு அடிக்கடி போக்குவரத்தாயிருந்து, அங்கங்கேயுள்ள பல சீர்திருத்தங்களையும், நடவடிக்கைகளும் நன்கறிந்து கொண்டுவந்தார். ஆதலின் இவருக்குப் பல்வேறு தேசத்தாரின் கொள்கைகள் நன்றாய்த்தெரியும்.

நமது பரதகண்டத்தின் க்ஷேமத்திற்கென்றே கங்கணங்கட்டிக்கொண்டு சென்ற இருபத்துமூன்று வருஷங்களாக ஏற்பட்டு நடைபெற்று வருகின்ற இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மஹா ஸபையில் இவர் அது தோன்றியது முதற்கொண்டே அதற்கென்று இடைவிடாது உலையா முயற்சியோடு உழைத்து வருகின்றார் என்பது ஜகத்பிரஸித்தமானது.

சென்ற வருஷத்தில் தெய்வீகமாக ஏதோ குற்றங்குறைகளால் அந்த மஹா ஸபையானது நடவாமல்பெரும் பிளவுபட்டு நின்றுபோய்விட்டதென்றாலும், இவர் அதற்கென்று தாம் முன்பே வெகுஅழகாய் எழுதிக்கொண்டு படிக்க வந்தஅதன் பீடிகையைப்படித்திருப்பவர்களுக்குச்சென்ற வருஷத்திலும் அந்தஸபை நடந்ததென்றே தோற்றும். இவருக்கு எந்த விஷயமும் வெகு நன்றாய் புத்தியிற்படுகின்றதனால், லார்ட்கர்ஸன் எவ்வளவுதான் அதிக ஸாமர்த்தியத்தோடு கல்கத்தா ஸர்வகலாசாலையில் உபந்யாஸஞ்செய்தா

ரென்றாலும், அத்தனையும் தப்பான அபிப்பிராயமென்றே இவர் அதற்குக்கண்டனஞ்செய்து, புத்திமான்களெல்லோரும் அதுவே ஸரியென்று ஒப்புக்கொள்ளும்படிச்செய்தார்.

இந்த மகாபுருஷனுக்கு இந்தியாவிலுள்ளவர்கள் எல்லோருமே அயல்நாட்டாரைப்போல் எந்தக் கைத்தொழில்களையும் தாமே செய்யத்தலைப்பட்டு நன்றாய் ஊதியம்பெற்று அன்னவஸ்திரங்களுக்குச் சிறிதுங்குறையில்லாதபடி ஸுகித்து வாழ்ந்திருக்கவேண்டுமென்பதே குறியாதலின், இவர் அதற்கென்று படாதபாடெல்லாம் பட்டுவருகிறார். கைத்தொழிற்சாலையொன்றை கல்கத்தாவில் ஸ்தாபிப்பதற்கென்று இவர் முன்னின்று அதற்குத்தக்க நன்கொடையையளித்தார். இவர் இத்தனை பெருமையுடையவராகவிருந்தும், சிலரைப்போல ஐரோபியரின் நடை உடைகளைச் சிறிதும் விரும்பாமல், நம்மவர்கள் ஆதிகாலமுதற்கொண்டே எப்படி நடந்துவருகிறார்களோ அவ்வண்ணமே உடைதரிப்பதன்றி மற்றவர்களைப்போலவே வேறுவிதமாகவல்ல. உபகாரஞ்செய்வதின் அருமையை இவர் நன்கறிந்தவர். "தன்னை மிஞ்சித் தருமம்" என்றிருப்பதாலும், ஏழைகள் படும் வருத்தத்தை நன்கறிந்தவராதலாலும், தமது பந்துக்களில் அதிக ஏழைகளாயிருப்பவர்களுக்கெல்லாம் இவர் தம்மாலியலுமட்டும் ஏற்ற சமயங்களில் வேண்டும் பொருளைக் குறைவற கொடுத்து வெகு நன்றாய் பந்துபரிபாலனஞ்செய்து வருகிறவள்ளல். இவர் இருமுறை மணஞ்செய்துகொண்டாரெனினும், ஸந்ததியுண்டாகாமற்போயிற்று. அதுமுதல் நெடுநாளாக இவர் தனியே விதுரராகவேயிருக்கிறார். இவர் ராத்திரி காலங்களில் நெடுநேரமளவும் புத்தகப்பேயர்ப் படித்துக்கொண்டிருப்பதனால், விடிந்து ஒன்பது மணிக்குள்ளே விழித்துக்கொள்ளுவதில்லை. இந்தத் துர்வழக்கமொன்றுதான் இவருக்கு பால்ய

முதற்கொண்டே யுண்டாயிற்று. இத்தனை வயதாகியும் பிரதிதினமும் இவர் ஏதேனுமொன்றைப் புதிதாகப் படியாமலிருப்பதில்லை. அன்றியும் இவர் நல்ல தேக வலிமையுடையவராதல் பற்றி எந்நாளும் எந்த வேலைகளையும் ஸாதாரண ஜனங்களைப்போலவே தேகஸௌக்கியத்திற்கென்று செய்துவருவது இவருக்குள்ள இயற்கையாம். இத்தன்மைத்தான நற்குணங்களைத் தமக்கு அணியாகவுள்ள இந்தப் புண்ணியமூர்த்தியானவர் ஆண்டவனருளால் இன்னும் நெடுங்காலம் வாழ்ந்திருந்து நமது நாட்டிற்கு ஊன்றுகோல்போலாவாராச.

அன்பில் ஸ்ரீ வேங்கடாசாரியர்.



# காசிற்கிரண்டு கன்னியர்.

கல்யாணம் செய்யக்கூடிய வயது வந்த பெண்கள் நாகரீகமுள்ள ஒவ்வொரு தேசத்திலும் புருஷர்களினும் அதிகமாகக் கணக்கிடலாம். இஃதென்னவிந்தை! முதன் முதலில் பெண்களதிகமாக இல்லாமையின் ஒரே ஸ்திரீயைப் பல புருஷர்கள் மணஞ்செய்துகொண்டனரென்று சரித்திரவாயிலாகத் தெரிகிறோம். பிறகு ஏகதாரப் பிரியமுடையவராயினர். புருஷர் என்று வெளியாகின்றமையின் புருஷர்களுடைய எண்ணுக்குத் தக்க ஸ்திரீகள் இருந்தனர் என்னலாம். தற்காலத்தில் பெண்களதிகமாகவிருத்தலினால் நாம் அனைவரும் வருந்தவேண்டியிருக்கிறது. பெண்கள் ஜனத்தொகையில் அதிகமாகவிருப்பது நம்முடைய பிழையாகுமா? எப்படி வாலில்லாத குரங்கினின்றும் மனிதர்கள் உற்பத்தியாயினரோ அப்படியே புருஷர்களினின்றும் மேலான படைப்பான ஸ்திரீகள் உண்டாயினர். நாளாக வாக எல்லாம் விருத்தியாகின்றதென்று நம்பவேண்டியிருத்தலின் உயர்ந்த படைப்பு வகையான கன்னியர் வானரத்திற்குச் சில்விஷயத்தில் ஒற்றுமையுள்ள புருஷர்களைவிட எண்ணிக்கையில் அதிகமாகவிருப்பது சகஜமே.

எப்படியாயினும் புருஷர்களுடைய வாழ்நாள் பெண்ணில்லாமல் நடைபெறுவதில்லை. சிலர் பெண்களை வெறுத்து முனிவர்களாகி வாழ்நாளை வீணாக்குகின்றனர். அவர்களைப்பற்றி நாம் அதிகமாகக் கவனிக்கவேண்டியதில்லை. ஏனெனின், அத்தகையோர் மிகவுஞ்சிலரே. அச்சிலருள்ளும் பெண்களுடன் ஆடிப்பாடி ஒய்ந்து வேறு தொழிலை ஏற்றுக்கொள்ள வகையில்லாமல் துறவிவேடம்பூண்டு திரிகின்றனர். எக்காலத்திலும் அழகிய பெண்களும், செல்வமுடையபெண்களும் சுலபமாகக் கல்யாணம்செய்துகொள்கின்றனர். சாதாரணமான பெண் அதிக சிரமப்பட்டு மணமகனைத்தேடியடைகிறாள். சில சமயங்களில் நாம் ஆச்சரியமடையும்படி சாதாரணமான பெண்கள் மணஞ்செய்துகொள்கின்றனர். மிகவும் அழகிய பெண்கள் தன்னயம் மிகுதியுள்பாராட்டி புருஷர்களை அலட்சியம்செய்து வருத்தப்படுகிறார்கள். அத்தகைய பெண்ணை மணந்த புருஷனும் இன்பவாழ்வை யடைவதில்லை. அவர்கள் தாம்

"தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரான் வரும்
காமமில்லையெனிற் கடுங்கேடெனும்
நாமமில்லை நரகமுமில்லையே"

என்று பிதற்றுகின்றனர்.

அப்பெண்கள் அழகிருந்தாற் போதும் என்று நினைக்கிறார்கள். அழகு உண்மையில் கண்ணைக் கவருகின்றது. "மின்கண்டவர் எங்கறிவார் வினையே." பார்ப்பவர் கண்ணைக் கூசச்செய்து அவர்கள் மனத்தைக்கொள்ளை கொள்ளுகிறாள். அவள் எவ்வளவு அழகாகத் தோன்றுகிறாள் என்று கண்டவர் எவரும் சொல்லுவார்கள். செல்வமுடைய பெண்களோ எப்பொழுதும் உடைகளினாலும் ஆபரணங்களினாலும் ஆடவர்களை மயக்கி மணக்கிறார்கள்.

'அமிழ்மைத் தணைகள் கண்ணுக்கணியென வமைக்குமாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கையுருவினை மறைப்பதோரார்
அமிழ்தினைச் சுவைசெய்தென் னவழகினுக்கு அழகுசெய்தார்"

என்ற ஆன்றோர் சொற்களிற்கு ஏற்ப அழகிலா உருவினை மறைக்கவே ஆபரணங்களைத் தரித்துக்கொள்ளுகிறார்கள் என்றும் அழகிலாமைக்கு அழகு செய்தார் என்றும் சொல்லலாம். ஆகவே ஆபரணத்தை யாம் பழிக்கவில்லை. "வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசிக்கு மஞ்சளும்" என்றாற்போல கலனும் உடையும் பெண்களுக்கு முக்கியமேயாம். இயற்கையழகை மறைத்துச் செயற்கையழகு செய்யலாகாது என்று யாம் சொல்லவந்தோமே யல்லாது வேறில்லை. சாதாரணமாகப் பெண்கள் வேடிக்கை பார்க்க மிகவும் பிரியப்படுகிறார்கள். அதற்கு ஒருவகைக் காரணம் படைத்துக் கூறினும் அமையும். தன்னை விரும்பும் ஆடவனைத் தேடியடைய வெண்ணங்கொண்டே வெளியே அடிக்கடி செல்ல எண்ணுகிறார்கள். சாதாரணமான அழகிலாப் பெண்கள் சில சமயங்களில் சிறந்த மணத்தைச் செய்து கொள்ளுகிறார்கள். அத்தகைய பெண்ணை யடையும் புருஷன் தன் கண்ணைக் கவரும் வனப்பு அவளிடங்காண்கிறான். பிறர் சொல்லுவனவற்றில் நம்பிக்கை பாராட்டுகிறதில்லை. சிலஅழகுகள் மனிதக்கூட்டத்திற்குத் திருப்தியைத்தருவதில்லை. சில பெண்கள் இருபதுவயதான பிறகே அழகையடைகிறார்கள். 'காரும் குமரியும் கதிரிலே' என்ற பழமொழி பிழையாகின்றது. சிலர் அழகை அவ்வயதிலேயே யிழக்கிறார்கள். இந்த விஷயத்தைச் சாதாரணமாக இயற்கையில் காணலாம். உற்றுப் பார்க்குநர்க்கு உதாரணங்கள் தாமாகவே தென்படும். ஆதலின் சாதாரண அழகுடைய பெண்கள் அஞ்சரியப்படவேண்டுவதில்லை.

புருஷர்களுக்குத் தற்காலத்தில் நயமாகப் பெண்கள் கிடைப்பதனால் அவர்கள் அருமை தெரிகிறதில்லையென்று தோன்றுகின்றது. சிரமப்பட்டு அடையும் பொருளிடந் தான் எப்போதும் நாம் அருமையும் பெருமையும் பாராட்டுகிறோம். இதுவே உலகவியற்கை. அவ்விதம் எளிதில் பெண்கள் கிடைப்பதனால் தான் புருஷர்கள் சில சமயங்களில் இல்வாழ்க்கையில் இனிமையை யிழந்து துன்பமடைகிறார்கள். புருஷர்கள் தாங்கள் சிறப்பு வாய்ந்திருக்கின்றமையினாற்றான் பெண்களைப்பெற்ற அனேக தாய்தந்தையர் வருந்தித்தம் பெண்களை மணக்கும்படி தள்ளுகிறார்கள் என்று நினைந்து கர்வமடைகிறார்கள். புருஷர்கள் எண்ணிக்கையிற் குறைந்திருத்தலினால் தான் பெண்களையுடையவர் மிகவும் விநயமாகவிருக்கின்றார்கள் என்ற உண்மையைக் கவனிக்கின்றிலர்.

பெண்கள் எண்ணிக்கை குறைந்து புருஷர்கள் அதிகமாகவிருந்தால் எவ்வாறாகும்? ஸ்திரீகளும் காசிற்கிரண்டு கணவனையடையலாம் என்று சொல்லுவார்கள். அப்பொழுதுதான் மேன்மையை யுடையவனாகவிருக்கிறோம் என்ற கர்வமுடைய ஒவ்வொரு புருஷனும் தன் சிறுமையை உள்ளவாறு உணர்வான். அப்பொழுது தான் பெண்கள் தமக்கு உரிமையான மேன்மையை யறிவார். அப்பொழுது தான் அவர்கள் ஏற்ற கவுரவத்தை யெய்துவார்.

பெண்கள் நயமாகவிருத்தலினாற்றான் வரதக்ஷிணை என்ற பாழும் வழக்கம் நம்தேசத்தில் உற்பத்தியாயிற்று என்னலாம். சில வருஷங்களுக்கு முன்னர் ரூபாய் நூறு முதல் ரூபாய் நானூறு வரையிலுங் கொடுத்துப் பெண்ணைப் புருஷர்கள் அடைந்து வந்தனர் என்று நம் நண்பர்களிற் சிலர் அறிவார். பெண்வீட்டுக்காரர்கள் வாங்கும் பணத்தை முற்காலத்தில் ஒரு செல்வமாகப் பாவிக்கிறதில்

லே. வாங்கும் பணத்தைக் கல்யாணச் செலவிற்காகவும் மிகுந்ததை ஆபரணத்திற்காகவும் பயன்படுத்தி வந்தனர். மேலும் மணங்கள் தரகரியில்லாமல் முற்காலத்தில் நடந்து வந்ததாகத் தெரிகிறது. தற்காலத்தில் தரகரியில்லாத மணம் முடிகிறதேயில்லை; ஏனென்றால் புருஷர்கள் மணத்தை யொருவித வியாபாரமாக நினைப்பதால், இக்காலத்தில் —காசிற்கிரண்டு கன்னியர் கிடைக்குங்காலத்தில்—பெண் பிறந்த செய்தியைக்கேட்ட தகப்பன் விசாரத்தை யடைகிறான்—துக்கமும் அடைகிறான். என்றாலும் ஒரு விஷயத்தில் இவ்வரதக்ஷிணை நன்மையைச் செய்கிறது என்னலாம். சிறுவயதிலேயே மணம் நடந்ததைத் தடைசெய்தது. யாதானுமொரு சர்வகலாசாலைப் பரீக்ஷை தேறும் வரையிலும் மணம் என்ற பேச்சை புருஷர்கள் எடுக்கிறதில்லை. ஏனெனின், சரக்கின் விலை குறைந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். கட்டுச்சோற்றை யெடுத்துக்கொண்டு பெண்ணைப் பெற்றவன் மணமகனைத் தேடிச்செல்லுகிறான். ஐயோ! பாவம்! அவன் மிகுந்த செல்வவந்தனானால் தரகரிகளை ஊர் ஊராக அனுப்புகிறான். பெண்ணைப் பெற்றவன் முகத்தைக் கல்யாணம் ஆகும்போது பார்த்தால் துக்கத்தின் உண்மையான உருவம் வெளிப்படையாகத் தெரியும். மணமகனைச் சார்ந்தவர் முகத்தில் அதிர்ப்தி என்பது எவ்விதமிருக்கும் என்பதைக் காணலாம். கல்யாணச் சடங்கில் பெண்ணின் தாய் தந்தையர் தம் அருமை மகளைப் பிரிவதனால் வருந்தி அழுகிறார்கள் என்று சொல்லும் மந்திரம் இருக்கின்றது.

பிள்ளைவீட்டுப் பாட்டிகள் தன் அருமைப் பேயனைச் சீராட்டுவதை நம் நண்பர்கள் கேட்டிருப்பார்கள் என்று நினைக்கிறோம். "என் பையன் பி. எ. பரீக்ஷையில் முதலாகத் தேறினபிறகு ஒரு தங்கப் பிரதிமைபோன்ற

பெண்ணை இரண்டாயிரம் ரூபாய் வாங்கி மணஞ்செய்வேன்" என்பதாம். இவ்வரதக்ஷிணையைப் பற்றிய ஒரு உண்மையான சரித்திரம் சிலநாள்களுக்கு முன்னம் எமக்கு ஒரு நண்பரால் வெளியாயது. மிகவும் வருந்திக்காப்பாற்றிய தாய் தன் மகளைக்கண்டுவர புத்திரனைச் செலவுக்கு நாலுரூபாய் கேட்டபொழுது அவன் மனைவி "பணம் ஏது ஒன்றேது, உங்களுக்கென்னவேலை? அவர் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை யழிக்க விரும்புகிறீரா?" என்று உறுத்துச்சொன்னாள். மாமியோ மிகவும் மனம்வருந்தினாள். எவ்விதக்கஷ்டத்தையெல்லாம் அனுபவித்து ஆதிமுதற்கொண்டு காப்பாற்றிய பிள்ளையைப் பணம்கேட்க இடையில் வந்த ஒரு சிறுக்கி தன்னை அவமதித்ததை நினைந்து உருகக்கண்டவள் பின்னும் "நீங்கள் கஷ்டப்பட்டு வளர்த்துத்தான் எங்கள் தகப்பனாருக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்று விட்டீரே! அவர் உங்களுக்கு எவ்விதம் இனிச்சொந்தமாவார்." என்று எரியுந்தீயில் நெய்யினைச் சொரிந்தாள். என்னே வரதக்ஷிணையால் வரும் தீங்கு! இருதிறத்தினர்க்கும் மரியாதை குறைந்துவிடுகிறது. "பெண்ணைப்பெற்றுக் கதியில்லாமல் ரூபாயையும் கொடுத்துத் தள்ளிவிட்டீரே" யென்று ஏளனம் செய்யும் புருஷர் எத்தனை பேரோ?"

காசிற்கிரண்டு கன்னியர் கிடைப்பதனாற்றான் மநுவும் விதவைகளை மறுபடியும் மணக்கலாகாது என்று விதித்தனர். மேலும் தாசிகளென்று அனேகரை வகுத்து மணஞ்செய்துகொள்ளாமல் விலக்கினர். என்னே அவர் தம் நுண்ணறிவு! தற்காலத்திலோ தாசிகளும் மணஞ்செய்து கொள்ளுகின்றனர். புருஷர்களை ஏமாற்றித் தம் தொழிலையும் செய்யலாம் என்று நினைத்து. ஆகவே பெண்கள் அதிகமாகத் தோற்றுகின்றனர். இதனாலேயே ஒரே புரு

ஷன் இரண்டு மூன்று மனைவியரையடையலாம் என்று முற்காலந்தொட்டு வழங்கி வருகின்றதுபோலும். இக்காலத்தில் ஆங்கில அரசாட்சியின் மேன்மையால் ஏகதாரப் பிரியம் நம்மவரிடம் அதிகமாகின்றது. இனிப்பெண்கள் தகுந்த கணவனையடைந்து வாழ்தல்வேண்டுமாயின், தாம் தந்தையரே! கல்வி கற்கச்செய்யுங்கள். அறிவு மிகுந்த அழகியர்க்குத்தான் இனிக் கல்யாணமாகிற ஆவணத்தில் விலையுயரப்போகிறது. சிறியேன் சொல்லைக் கவனியுங்கள்.

இச்சொற்களினாலேதேனும் பயனுமுண்டாமோ?

சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ.



# சாவெனும் சமனன்

## அல்லது

## காலக்கிழவனார் கடைப்பெறு வெற்றி.

பிறப்பினாற் பிறங்கும் பேறும் பீடுறு நிலையால் மேவும்
சிறப்புமோர் மித்தை அலலால் சிறிதுமெய்ப்பொருளே ஆகா
குறித்திடின் விதிக்கு மாறாக் கொள்ளு மெய்க்கவசம் இன்றே
இறப்புமன் னவர்கள் மேலும் இரக்கமில் கைவைத் தீர்க்கும்.

சீர்திகழ் மகுடம் பூண்டு திசை எலாம் செங்கோலோச்சும்
தார்புனை அதிபர் தாமும் தந்நிலை நின்றும் சாய்ந்து
கூர்வளை வாள், மண்வெட்டி கொண்டகீழ் மக்களே போல்
பார்மிசை மண்ணே ஆதல் பரமநிச் சயமே அன்றோ?

ஒருசிலர் தங்கள் கையி லுற்றவாட் படையை எந்திச்
சருத்தலர் தம்மை யுத்த களத்தினிற் கொன்றிட் டாங்கு
மறுவுறு வாகைநாட்டும் மாண்பினர் எனும் அன்னோரும்
பெருவலி இழந்து சாவு பெறுவது சரதந்தானே.

ஒருவரை ஒருவர் வெல்வர் உறுவினை வெல்வார் யாரே?
இருவரும் முன்னோ பின்னோ இருவிதிவசப்பட் டோராய்ப்
பிரியவே பிரியமற்றுப் பேணிய சீவன் தன்னை
வெருவிமெய் வெளுத்துச் சாகும் வேளையில் விடுதல் திண்ணம்.

வற்றுமே தலையிற் சூடும் வாகையும் அதனால் என்றும்
செற்றலர் தமைவெல்வீரச் செய்கையாற் செருக்கே கொள்ளல்
கொற்றமார் வீரன் கூற்றின் குருதிதோய் பலிபீடத்தில்
அற்றசென் னியனாய்ச் செந்நீர் அமிழ்ந்திடல் அந்தோ! காண்மின்.

எத்தகை யோர்ஆ னாலும் இறுதியில் இடுகா டெய்தல்
சத்தியம் நீதி மான்கள் சற்கருமங்களே தான்
இத்தரைக் கண்ணே மிக்க இன்மணத் துடனே பூத்து
நித்திய மாக ஓங்கி நிற்பதாம் நினையும் காலே.

கி. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி.

---

இது James shirley யின் "Death the Leveller" அல்லது "Death's Final Conquest" என்பதன் தமிழ்மொழிபெயர்ப்பு.




## இரத்னபாரிகராயன் கதை.

முற்காலத்தில் பரதகண்டத்தில் மகதம் என்று பேர்பெற்ற ஓர் தேசம் இருந்தது. அதை சூரகேசரி என்னும் ஓர் அரசன் ஆண்டுகொண்டிருந்தான். அந்நாட்டில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு குலத்தாரும் தத்தமக்குரிய தொழில்களை வழுவாது நடத்திவந்ததால் மாதம் மும்மாரிபொழிந்துவந்தன. அதனால் பயிர்களும் கிரமமாய் வளர்ந்து தேசம் எங்கும் செழித்திருந்தது. இத்தகைய நாட்டின்கண் ஓர் சிற்றூரில் ஓர் வேதியன் இருந்தனன். அவன் பெயர் சீனிவாஸன். அவன் நான்கு வேதங்கள், ஆறுசாஸ்திரங்கள், பதினெண்புராணங்கள், ஜோதிட சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் முதலானவைகளையெல்லாம் ஐயந்திரிபறக்கற்றவன். ஆயினும் கலைமகட்கும், அவள் மாமியாரான பொன்மகட்கும் மாமியருமகள் மாச்சரியம் உண்டு. ஆனதால்

அவனிடத்தில் பொன்மகள் கடாக்ஷம் கிஞ்சித்தேனும் இல்லை. அதிக தரித்திரனாகவிருந்தான். ஏழைகளாயிருப்பவர்களுக்குச் சந்ததியும் அதிகமிருப்பது சகஜமன்றோ? அவ்வண்ணமே இவ்வேழைப் பிராமணனுக்கும் இரண்டு ஆண்மக்களும் ஏழுபெண்மக்களுமுண்டு. இவனுக்கு அவ்வூரில் புதிதாய் ஜனங்களால் கட்டப்பட்டிருந்த ஓர் அனுமார் கோயிலின் பூஜைசெய்யும் தொழில் அவ்வூராரால் நியமிக்கப்பட்டிருந்தது. அப்பூஜாவிருத்தியில் வரும் அற்ப ஊதியத்தை அவ்வூரில் காலைநேரங்களில் பிச்சையெடுப்பதால் அதிகரித்துக்கொண்டுவந்தான். இவ்வண்ணம் அவன் அதிக கொடுமையான காலக்ஷேபம் செய்துகொண்டுவந்தான். இவ்வேதியனுக்கு ஏழுபெண்கள் இருந்தனவென்று முன்னமே கூறப்பட்டதல்லவா. இக்காலத்தில் பீ.ஏ. எப்.ஏ. முதலிய பரிக்ஷைகளை பியாஸ்செய்த மாப்பிள்ளைகளைத்தேடி பூமிகள் வீடுகள் நகைகள் முதலியவை விற்று ஆயிரக் கணக்காய் அவர்களுக்கு வரதக்ஷிணைகொடுத்துத் தம்பெண்களை அவர்களுக்கு பலவந்தமாக நல்ல வார்த்தைகள் சொல்லி விவாகம் செய்துகொடுப்பதுபோல் அக்காலத்தில் இல்லை. ஆதலால் அவ்வேதியன் தன்பெண்களுக்குத் தகுந்த வித்தையுள்ளவர்களைத்தேடிக் கல்யாணம் செய்துகொடுத்தான். பிறகு தானும் தன் மனைவியும், இரண்டு ஆண்மக்களுமே அவனுக்குவரும் சொற்பவருமானங்களால் ஜீவனம் செய்துவந்தார்கள். இங்ஙனம் நடந்தேறிவருங்காலத்தில் அவ்வந்தணனுக்கு மரணப்பிராப்தி நேரிட்டது. பிறகு அவன் மனைவியும் பிள்ளைகளும் கஷ்டப்பட்டு காலக்ஷேபம் செய்துவந்தார்கள். அந்த மக்களிருவரில் மூத்தவன் பெயர் நாராயணன் சின்னவன் பெயர் வெங்கடரமணன். மூத்தவன் சிறுவயதுமுதல் தகப்பன் கட்டளைக்குள்ளடங்காமல் செல்லப்பிள்ளையாய்த் திரிந்துவந்ததால் கல்விகற்கவில்லை. சின்னவனோவென்றால் எப்பொழுதும் தேவதா பக்தியுடன், தேவாலயங்களில் பணிவிடை முதலியவைகள் செய்துகொண்டும் ஸாதுஸங்கங்களில் சேர்ந்து திரிந்துகொண்டுமிருந்தான். ஆயினும் அவனும் வித்தைகற்கவில்லை. இங்ஙனம் இவ்விரண்டு பேர்களும் வித்தையற்றவர்களாதலால் அவ்வூர் அனுமார் கோவில் பூஜைக்கு வேறொருவன் ஏற்படுத்தப்பட்டான். ஆதலால் இவர்கள் காலக்ஷேபம் செய்வதே அதிக கஷ்டமாயிற்று. அதனால் அந்த அம்மாள் தனக்கு தன்தாயார் வீட்டில் வைத்திருந்த தங்கவாளியை

விற்று அவ்வூரில் ஒரு புஞ்சை நிலத்தை வாங்கினாள். அப்புஞ்சை நிலத்தில் ஓர் கிணறு வெட்டிக்கொண்டு, அந்தத்தோட்டத்தில் காய்கறி தினுசுகள், மஞ்சள், இஞ்சி முதலியவைகளைப் போட்டுக்கொண்டு மூத்தவனாகிய நாராயணன் அத்தோட்டத்தில் வேலைசெய்துவருவான். இளையவனோ தாயாருக்குச் செல்ல (செல்வ) ப்பிள்ளையாதலால் வெங்காஸாமி என்றுசொல்லப் பெயர்பெற்று, முன்போலவே தேவதாபக்திகளிலும் ஸாதுஸங்கங்களிலும் திரிந்துகொண்டிருந்தான். இங்ஙனம் சிலநாள் கழிக்க, ஒருநாள் நாராயணன் தன் தாயாரோடு இளையவன் செய்கைகளைப்பற்றிக் கடிந்துகொண்டதுமன்றி, தான் காலைமுதல் ஸாயங்காலம் வரையிலும் தோட்டவேலைகள் செய்வதால் தனக்கு அதிக பிரயாசையாகிறதென்றும், மத்தியான்ன காலத்திற்கு தனக்கு ஏதாவது சிற்றுண்டிகள் செய்து தனக்குக் கொடுத்தனுப்பவேண்டுமென்றும் திட்டப்படுத்தினான். அங்ஙனமே அவன் தாயார் கொஞ்சம் பலஹார வகைகள்செய்து அன்று மத்தியான்னத்தில் வெங்காஸாமியிடத்தில் கொடுத்து அதைக் கொண்டுபோய்த் தோட்டத்தில் வேலைசெய்துகொண்டிருக்கும் அவன் அண்ணனிடம் கொடுத்துவரும்படி கட்டளையிட, அவன் அங்ஙனம் தோட்டத்துக்குப்போகாமல், அவ்வுண்டிகளை ஸாதுக்களுக்குப் பகிர்ந்துகொடுத்து, நடு இராத்திரியில் வெறும்பாத்திரங்களைக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனன். அன்று ஸாயங்காலம் நாராயணன் வீடுவந்ததும் தன் தாயாரை ஏன் தனக்குச் சிற்றுண்டி அனுப்பவில்லையென்று கேட்டான். அதற்கு அந்த அம்மாள் தன் இளைய மகனாகிய வெங்காஸாமியிடம் கொடுத்து அனுப்பினதாகச் சொன்னாள். அதுவரையிலும், வெங்காஸாமி வீடுவந்து சேராததால், அவன் வந்தபிறகு இதைப்பற்றி விசாரிப்பேன் என்று அவன் வழக்கம்போல சாப்பிட்டுப் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டான். மறுநாட்காலையில் இவன் எழுந்திருக்கும் முன்னமேயே வெங்காஸாமி எழுந்து வெளியேபோய்விட்டபடியால் அன்றையகாலையிலும் அவனை விசாரிக்கசமயம் கிடைக்கவில்லை. பிறகு நாராயணனும் தோட்டவேலைக்குப் போய்விட்டான். அன்றையப் பகலிலும் தன் தாயார் தன் அண்ணனுக்கென்று செய்துகொடுத்தனுப்பிய சிற்றுண்டிகளை வெங்காஸாமி முன்போல் ஸாதுக்களுக்குப் பகிர்ந்துகொடுத்து, முதல்நாள்போலவே, நடு இராத்திரியில் வெறும்பாத்திரங்களுடன்

வீடுவந்து சேர்ந்தான். அன்றைய இராத்திரியிலும் மறுநாள் உதயத்திலும் முதல்நாள் நடந்ததுபோல வெங்காஸாமியைக்கண்டு விசாரிக்க நாராயணனுக்கு சமயம் வாய்க்கவில்லை. அதன்பேரில் அன்றைக்கும் அவன் தோட்டவேலைக்குப்போகும்பொழுது தனக்கு வழக்கம்போல் பலஹாரங்களை அனுப்பச்சொல்லித் தன்தாயாரிடம் சொல்லிச்சென்றான். தாயாரும் முன்னிரண்டு நாள்களைவிட அதிக ருசிகாமான பலஹாரங்களைசெய்து தன் இளையமகனிடம் கொடுத்தாள். அதை அவன் வாங்கிக்கொண்டுபோய் ஸாதுக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கையில் இவன் என்ன செய்கிறான் என்று அறியும்பொருட்டே தோட்டத்துக்குப்போகாமல் இவன் பின்னேயே மறைந்து சென்றுகொண்டிருந்த அவன் தமயன் கண்டு, தன் தம்பியின்மீதில் அதிக கோபமாகி இவ்வண்ணம் வீட்டு சொத்துக்களை வீணில் செலவழிப்பதற்காக அவனை நையப்புடைத்து தன் தோட்டவேலைக்கு சென்றனன். வெங்காஸாமியோ அவ்வண்ணம் அடிபட்டவனாகி, மிக்க மனவருத்தத்துடன் வீட்டுக்குத்திரும்பிவந்து தன் தாயாருடன் தன்னைத்தன் அண்ணன் அடித்த ஸங்கதிகளைச் சொல்லிக்கொண்டு அழுது இனித்தான் வீட்டில் தங்குவதில்லையென்றும், எங்கேயாவது தேசாந்திரம் சென்று பிழைப்பதாகவும் சொல்லித்தான் அங்ஙனம் செல்லத் தன் தாயாரை விடைகேட்டான். தாயாரும் மகாதுக்கத்துடன் அவனை வாழ்த்தி அவன் வழிச்செலவுக்கு கொடுக்கத் தன்னிடம் ஒருபொருளும் இல்லாததால் வருத்தப்பட்டு வீடுமுழுவதும் தேடி தானியங்களும்கூட அகப்படாமல், ஒரு மூலையில் தன் புருஷன் திவசத்திற்கென்று முடிந்துவைத்திருந்த ஒருபடி உளுந்தைக் கொண்டுவந்து ஓர் சிறு கந்தைத்துணியில் கட்டிக்கொடுத்து அவனுக்கு தேசாந்திரம் செல்ல விடையுமளித்தனள். அதனைப்பெற்று அப்பாலன் (அவனுக்கு அப்போது வயது பன்னிரண்டுதான்) ஊரைவிட்டு வெளியில் வந்து அவ்வூர் இராஜதானியாகிய பாடலிபுரத்துக்குப்போகும் வழியை அறிந்துபோகையில் அவன் மெதுவாக நடந்ததால் அவ்வூர் சேர்வதற்குள்ளாக நடு இராத்திரியாயிற்று. அவ்வூரில் கோட்டைவாயிலிலிருந்த காவலாளர்கள் அவனை அவ்வூருக்குள்ளாக நுழையவிடவில்லை. ஆதலால் அவன் அன்றிரவு அவ்வாயலிலேயே படுத்துத் தங்கவேண்டியிருந்தது.

அவ்வூர் அரசன் சூரகேசரியென்பவனுக்கு இரண்டு பெண்மக்கள் உண்டு. மூத்தாள் பெயர் கோமளவல்லி. இளையவள்பெயர் அம்புஜவல்லி—கோமளவல்லி சிறுவயதிலேயே கல்யாணம் செய்யப்பட்டு தெய்வகடாக்ஷக் குறைவினால் அவள் புருஷன் யுத்தத்தில் மரித்துப்போக பாலியவிதந்துவாயிருந்தாள். அவள் அவ்வூர் மந்திரிமகனை ஆசைநாயகனாகச் சேர்த்துக்கொண்டிருந்தாள். மேற்கூறியபடி வெங்காஸாமி அங்குசென்ற இராத்திரியில், அவ்வரசன் இரண்டாம் மகளாகிய அம்புஜவல்லியின் கல்யாணத்திற்கு முதல் நாள் ஆகையால் அவளை மணக்கும்பொருட்டு வந்திருந்த அயல் தேசத்தரசன் மைந்தனை எதிர்கோள் சென்று அழைக்க அவ்வரசன் தன் மந்திரி, சேனாதிபதி, புரோகிதர்கள் முதலானவர்களுடன் போய்க்கொண்டிருந்தான். அக்காலையில் விதம்விதமான கணிகையரின் ஆடல்பாடல்களும், நானாவிதமான பாணவேடிக்கைகளும், அநேகவிதமான வாத்தியங்களின் முழக்கங்களும், அரசனுடன் கூடச்செல்லும் ஆனை குதிரைகள் ஜனங்கள் இவைகளின் இரைச்சல்களும் முதலிய வைபவங்கள் பார்ப்போர் கண்ணையும் கேட்போர் மனதையும் கவரத்தக்கனவாயிருந்தன. வெங்காஸாமி படுத்துக்கொண்டிருந்த கோட்டைவாசல் காவற்காரர்களும் இவ்வைபவங்களைப்பார்க்க விரும்பி, அங்குபடுத்திருந்த வெங்காஸாமியை அக்கோட்டைவாயிலில் தமக்கு பதிலாகக் காவல்வைத்து எதிர்கோள் நடக்கும் இடத்திற்கு சென்றனர்.

அரசன் மூத்தமகளாகிய கோமளவல்லி யென்பவள் தன் ஆசைநாயகனாகிய மந்திரி மகனுக்கு தனக்கு அன்றிராத்திரி மாம்பழங்கள் வேண்டுமென்று சொல்லி அனுப்பினாள். அக்கட்டளையை சிரசாக வகித்த மந்திரிமகன் ஊர்க்கு வெளிப்புறத்திலுள்ள மாந்தோட்டத்திற்கு நடு இராத்திரியில் செல்லுங்கால் அவனை கோட்டைவாயல் வழியாய் வெளியில்போகவொட்டாமல் அக்கோட்டை வாயலில் காவலிருந்த வெங்காஸாமி தடுக்க மந்திரிமகன் அவன் வரலாறுகளை விசாரித்துத் தெரிந்துகொண்டு அவனுக்கு தன்னிடம் ஓர் உத்தியோகம் செய்துகொடுப்பதாகச்சொல்லி அவன் அனுமதிபெற்றுக் கோட்டைவெளியில்சென்று மாம்பழங்களைக் கொண்டுவருங்காலத்தில் அதற்குள்ளாகவே காவலாளர்கள் திரும்பி வந்துவிட்டபடியால், வெங்காஸாமியும் மந்திரிமகனைவிடாது தொடர்ந்துவந்தனன். அம

னம் மந்திரிமகன் முன்னும் வெங்காஸாமி பின்னுமாய்ச் சென்று அரசன் மூத்தமகளாகிய கோமளவல்லியின் மாளிகையைச்சேர்ந்து, அதன் பின்புறத்திலுள்ளவோர் கள்ளவழியாக மந்திரிமகன் உள் நுழைந்தான். வெங்காஸாமியோ அவ்வாசற்படிக்கு எதிரிலிருந்த ஓர் மேடையிலுட்கார்ந்தான். மந்திரிமகன் உள்நுழைந்து கோமளவல்லியின் பள்ளியறையைப் புகுந்து பார்க்கையில் அவள் அங்கு இல்லாதபடியாலும் தன்னை அரசன் சீக்கிரமாக வரச்சொல்லியிருந்ததாலும், அம்மாம்பழங்களை அங்குவைத்து தான் அங்கு வந்திருந்ததற்கு கோமளவல்லிக்கு அறிகுறியாக தன் மேல்போர்வையை எடுத்து அவ்வமளியின் கண்வைத்து திரும்பிவந்து நேராக அரசன் மாளிகைக்குச் சென்றனன். இவன் இங்ஙனம் மேல்போர்வை இல்லாமற் செல்லவே, மேடைமீது உட்கார்ந்திருந்த வெங்காஸாமிக்கு அவன் சென்ற ஜாடை தெரியவில்லை. அவன் அங்கு வெகு நேரம் உட்கார்ந்திருந்தும் மந்திரிமகனைக் காணாமல், மந்திரிமகன் போன சந்துவாசல் திறந்திருந்ததைக் கண்டு அதனுள் நுழைந்து மந்திரிமகனைத் தேடிக்கொண்டு உள்ளே சென்றனன். வீட்டிலோ யாருமில்லை. வீடுமுழுவதும் வெங்காஸாமி தேடிப்பார்த்தும் மந்திரிமகன் அகப்படாததால், பள்ளியறையுள் நுழைந்துபார்க்க அங்குமில்லை. ஐயோ ஈசுவரா என் கதி இங்ஙனம் ஆயிற்றன்றோ, என அண்ணனும் அடித்துத்துறத்தினான். தாயாரும் போவென்றாள். இன்றுகாலையில் சாப்பிட்டதேயொழிய பிறகு ஆகாரமும் இல்லை. வழிநடந்து கால்களும் வலிக்கின்றன. வயிற்றுக்கு ஆகாரமில்லாததால்களைமேலிடுகிறது. எனக்கு உத்தியோகம் செய்துகொடுப்பதாகச் சொன்ன மந்திரிமகனும் மோசம்பண்ணிப் போய்விட்டானே என்று விதம்விதமாகச் சிந்தித்து இனி எங்கும்போவதற்கு கால் எழாமல் அவ்வமளியின்கண் படுத்தான். கொஞ்சம் குளிர்காலமானதால் அங்கு வைத்திருந்த மந்திரியின் மேல் போர்வையை யெடுத்துத் தன் மேல் மூடிக்கொண்டான். பசியின் களைப்பினாலும் வெகுதூரம் நடந்துவந்திருந்த ஆயாசத்தாலும் சீக்கிரம் நித்திரைபோனான். வெகு நேரமாயிற்று. இவன் எழுந்திருக்கவில்லை. இதற்குள்ளாகத் தன் தங்கைக்கு மணக்கோலஞ்செய்யச் சென்றிருந்த கோமளவல்லி திரும்பிவந்து வீட்டுக்குட்சென்று பள்ளியறையில் புகுந்து பார்க்கையில் அங்கு மேல்போர்வையைப் போர்த்துக்கொண்டு படுத்திருக்

கும் வெங்காஸாமியைப் பார்த்து தன் ஆசை மணவாளனாகிய மந்திரிமகனென்று நினைத்து, சமீபத்திலிருக்கும் மாம்பழங்களைக்கண்டு தன்மேல் உள்ள மோகத்தால் இராத்திரி நேரத்தில் அதிக ஆயாசப்பட்டு தானேபோய் மாம்பழங்களை அறுத்துவந்த களைப்பினால் அதிக நித்திரை செய்வதாக நினைத்து அவனை தட்டியெழுப்பப் பிரயத்தினம் செய்தும் அவன் துயில் நீங்காதுபோகவே, வேசாறி, தன் தங்கை மணவாளனுக்கு அணிய தன் தகப்பன் செய்துவைத்திருக்கும் ஆபரணங்களைப்போலவே ஓர் ஜதையை தானும் அந்தமந்திரி மகனுக்கணிந்து அவனழகைப் பார்த்துச சந்தோஷப்படும்படி செய்துகொண்டு வந்திருந்தபடியால் அவ்வுடைமைகளை அவ்வெங்காஸாமிக்கு அவன் படுத்திருக்கையிலேயே அணிந்தனள். இவ்வண்ணம் அணிகளைப்பூட்டி அவனுடம்பில் சந்தணம்பூசி, சிகைக்குப் பூசூட்டி, என்ன விதம் செய்தாலும் அவன் எழுந்திருக்காததைக் கண்டு, ஐயோ, நான் எண்ணினபடி இவர் தூங்கினவர் அல்ல. தன்னை இந்நடு இராத்திரியில் மாம்பழத்துக்காக அனுப்பினாளேயென்னும் கோபத்தால் இவ்வண்ணம் படுத்திருக்கிறாரென்று எண்ணி கட்டியணைத்து முத்தமிட்டு, இந்த அல்பமான மாம்பழம் கொண்டுவரும்படி சொன்னதற்கே தங்கட்கு இவ்வளவு ஆயாசம் என்மேல் வந்ததே. இந்த வூரிலுள்ள செட்டிகளுக்கு எஜமானனாயிருக்கிறவனுடைய மனைவி தன் மூக்கில் அணிந்துகொண்டிருக்கும் நத்தைப்போல் நெல்லிக்காய் பிரமாணமுள்ள முத்துக்களாலான நத்து ஒன்றை எனக்குச் சம்பாதித்துக் கொடுங்களென்று கேட்டிருந்தால் என்மேல் எவ்வளவு கோபம் தங்களுக்கு உண்டாகமாட்டாதென்று கேட்கவே, அவள் சரீரம் தன் சரீரத்தில் பட்டதும் வெங்காஸாமி விழித்துக்கொண்டு, அவள் சொன்ன சொற்களைக்கேட்டு, "என்ன அது ஒருபெரிய காரியமா. அதற்கு நீ யேன் விசாரப்படவேண்டியது என்னிடம் இருக்கிற ஒருபடி உளுந்தையும் விற்று உனக்கு அச்செட்டிச்சி அணிந்திருக்கும் நத்தைவிட அதிக உயர்ந்த நத்தை வாங்கித்தருகிறேன்." என்றான். அவன் இங்ஙனம் சொன்னதும் அதைக்கேட்டு அவள் திடுக்கிட்டு அவனை அப்படுக்கையினின்றும் எழுப்பிநிறுத்தி அவன் முகத்தை உற்றுப்பார்க்கையில் அவன் தன் ஆசை மணவாளனான மந்திரிமகனாயிராமல் ஓர் வனப்புவாய்ந்த 12 வயதுள்ள பிராமணச் சிறுவனாயிருக்கக்கண்டு, அவனுக்கு தான் அணிந்த நகைகளெல்லாம்

அயனுக்கு ஒத்திருக்கக்கண்டு, அவைகளை மறுபடியும் கவர மனம்வராமல் அவனுக்கு அவ்வுடைமைகளைத் தானமாய்க் கொடுத்ததுமாத்திரமேயல்லாமல், மணப்பிள்ளைக்கு கொடுக்க தன் தகப்பனார் செய்துவைத்திருந்த உடைகளின் ஜதையைப்போல் தானும் அம்மந்திரிமகனுக்கு ஒன்று செய்துவைத்திருந்ததால், அதையும் அவ்வேதியச் சிறுவனுக்கு கொடுத்து, உடுத்துக்கொள்ளச் சொன்னாள். அப்பையன் அதனை உடுத்துக்கொள்ளக்கூட பசிக்களையினால் சக்தியற்றவனாயிருந்ததால் அதனை அறிந்தகோமளவல்லி அவனுக்கு உண்டியும் அளித்தனள். அச்சிறுவன் உண்டு களை தீர்ந்தபிறகு, தான் சொன்ன சங்கதிகள் ஒன்றையும் வெளியிடாதேயென்று அற்புறுத்தி, அவன் வந்த கள்ள வழியாகவே அவனை வெளியில் அனுப்பிவிட்டனள். இது இப்படியிருக்க, அரசன் மந்திரிமுதலானோர் எதிர்கோல் சென்றிருந்தவர்கள், மணமகனையும் அவனினத்தாரையும் அழைத்துவந்து அவர்களுக்கென்று ஏற்பாடுசெய்திருந்த விடுதியில் அவர்களை இறக்கி, அங்கு அன்றிராத்திரி அரசன் அம்மணப்பிள்ளைக்கு வரபூஜை செய்தனன். அவ்வரபூஜையில் அம்மணப்பிள்ளைக்கும் வெங்காஸாமிக்கு கோமளவல்லி அணிந்த அணிகளைப்போலவும் கொடுத்த உடைகளைப்போலவும் ஒருஜதை உடைமைகளும் உடைகளும் கொடுக்கப்பட்டன. பிறகு காலையில் முகூர்த்தத்திற்கு அழைத்துக்கொண்டுபோவதாகச்சொல்லி விடைபெற்று அரசனும் தன் மாளிகையில் சேர்ந்தனன். வெங்காஸாமி ஆடையாபரண சந்தண புஷ்ப அலங்கிருதனாகி கோமளவல்லியின் மாளிகையினின்றும் வெளிப்பட்டவன், மணமகன் இறங்கியிருக்கும் விடுதிவரையிலும் சென்று அந்த வீட்டின் திண்ணையின்மேல் கொஞ்சம் சிரமந்தீரப் படுத்துக்கொண்டனன். இவனைப்போலவே ஆடையாபரண சந்தன புஷ்ப அலங்கிருதமாயிருந்த மணமகன், மலபாதை உபத்திரவத்தால் வீட்டுக்குப் பின்புறம் புழக்கடைக்குப்போயிருந்தான். அந்நேரத்தில், அரசனும் அவன் பரிவாரங்களும் மணப்பிள்ளையை முகூர்த்தத்திற்கு அழைக்கவந்தார்கள். வீதியில் படுத்திருக்கும் வெங்காஸாமி மணக்கோலமாயிருந்தபடியால் அவனையே மணப்பிள்ளையென்று எண்ணி, அரசன் பரிவாரத்தாரும் மணப்பிள்ளையின் பரிவாரத்தாரும் ஆகிய இருதிறத்தாரும் மயங்கி, அவனை எழுப்பி பல்லக்கில் உட்காரவைத்துக்கொண்டு முகூர்த்தத்திற்கு சென்றனர். அங்குசென்று காசியா

த்திரை, மாலைமாற்றல், கன்னி ஊஞ்சல், இக்காரியங்களை கிரமமாக நிறைவேற்றி மணவரையின்மேல் மணப்பிள்ளையையும் மணப்பெண்ணையும் நிறுத்தி மத்தியில் அந்தர்படம் பிடித்து மங்களாஷ்டகம் சொல்லி, அந்தர்படத்தை நீக்கி மணப்பெண்ணும் மணப்பிள்ளையும் ஒருவர்முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டபிறகு, கன்னிகாதானத்திற்கு சங்கல்பமும் ஆரம்பிக்கப்பட்டது. இங்கே மல்பாதைக்காக குளத்துக்குபோயிருந்த நிஜமணப்பிள்ளை, திரும்பி தன் விடுதிக்கு வந்துபார்க்கையில் அங்கொருவரையும் காணமல் சமுசயப்பட்டு, கொஞ்சம்நேரம்வரையில் காத்துக்கொண்டிருந்து ஒருவரும் தன்னை அழைக்க வராததால் திகலடைந்து ஏதோ மோசம் வந்ததென்று எண்ணி, மெள்ளமெள்ள இராஜன் அரண்மனைக்கு வழியை விசாரித்துக்கொண்டு மணவரைப்பந்தலில் வந்துசேர்ந்து அதிகப்பிரயாசத்துடன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு மணவரை அருகில் வந்து, தன்னைப்போல ஆடையாபரண சந்தணபுஷ்ப அலங்கிருதமான ஒரு சிறுவன் அங்கு உட்கார்ந்திருப்பதையும், தனக்கென்று நிச்சயித்திருந்த பெண்ணை அவனுக்குக் கன்னிகாதானம் செய்வதாய் சங்கல்பம் செய்துகொண்டிருப்பதையும் கண்டு மனந்தாளாமல் இவ்வண்ணம் அநியாயம் செய்யலாமா என்று அரசனை கேட்டனன். அரசனும் திடுக்கிட்டு திரும்பிப்பார்த்து பிரமித்து இவ்விதம் தன்னைக்கேட்டவன் நிஜமாப்பிள்ளை ஆனால் மணவரையில் உட்கார்ந்திருப்பவன் யாரென்று கேட்க, வெங்காஸாமி தானொரு வேதியச்சிறுவனென்றும், தன் தாயாரையும் தமையனையும்விட்டு தான் அன்றே புறப்பட்டு வந்ததாகவும், அன்றிராத்திரி ஓர் காளிகாதேவி ஆலயத்தில் தான் படுத்திருந்ததாகவும், அவ்வம்பாள் தன்மீது மனமிறங்கி தனக்கு இவ்வாடையாபரணங்களை கொடுத்து நீபோய் மணப்பிள்ளை யிறங்கியிருக்கும் விடுதியின் வாசலில் படுத்துக்கொண்டிருந்தால் உன்னையே மணப்பிள்ளையென்று எண்ணிக் கூட்டிக்கொண்டு போய் உனக்கு இவ்வூர் அரசன்மகளை மணம்புரிவார்கள் நீ சுகமாயிருக்கலாம் என்று தனக்கு அநுக்கிரகித்ததாகவும், அங்ஙனமே தான் அங்குவந்து படுத்திருந்ததாகவும், பிறகு நடந்த சங்கதிகள் எல்லாருக்கும் தெரியுமென்றும் சொன்னான். அரசன் அப்பொழுது தன் மனைவியையும் மூத்த மகளாகிய கோமளவல்லியையும் என்ன செய்யலாம் என்று கேட்க, தன் சங்கதிகளை வெளியிடாமல் மறைபொரு

ளாக அவ்வேதியச் சிறுவன் சொன்னதற்கு அவன்மேல் அதிக சந்தோஷமடைந்திருந்த கோமளவல்லி அச்சிறுவனுக்கே தன் தங்கையை கொடுத்து கல்யாணம் செய்யவேண்டுமென்று சொன்னது மன்றியில் தன் தாயாரையும் அவ்வண்ணமே சொல்லச்செய்தனள். இவர்கள் கருத்தை தெரிந்துகொண்டு அரசன் மந்திரி முதலானவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்க, முகூர்த்தகாலம் அதிக சமீபமாய் விட்டபடியாலும், கன்னிகாதானத்திற்கு முந்திய கல்யாண அங்கங்களெல்லாம் (காசியாத்திரை மாலைமாற்றுதல், கன்னி ஊஞ்சல், மங்களாஷ்டகம், கன்னிகாதான ஸங்கல்பம்) நடந்தேறிவிட்டதாலும் இனி அவ்வேதியச் சிறுவனுக்கே பெண்ணை கல்யாணம் முடிக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இப்படி அங்குள்ளவர்களின் கருத்தெல்லாம் ஒன்றாயிருக்கக்கண்டு அரசனும் கன்னிகாதான காரியத்தைமுடித்து, கிரமப்பிரகாரம் பாணிக்கிரஹணம், ஸப்தபதி, லாஜஹோமம் முதலிய காரியங்களையும் செய்துமுடித்தனன். 4-ம் நாள் நாகபலியும் கிரமமாய் முடிந்தது. கல்யாணத்திற்கு வந்திருந்த வேதியருக்கு ஏராளமாக தானங்களும் செய்யப்பட்டன. கல்யாணம் நடந்தபிறகு, அரசன் தன் மருமகனை ஒருநாள் ஒருகடிதம் கொடுத்துப் படிக்கச்சொல்ல, அவன் தனக்கு எழுதப்படிக்க வராதென்று சொன்னான். அதைக்கேட்டு அரசன் மிக்கக் கவலையுற்று ஒருபெரிய வீடு ஒன்றுகட்டி, அதில் வெங்காஸாமியையும் அவனுக்கு ஈடான சில சிறுவர்களையும் அதில்வைத்து தகுந்த உபாத்தியாயர்களை ஏற்படுத்தி இவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும்படி திட்டப்படுத்தினன். அவ்வீட்டிலிருந்து இச்சிறுவர்கள் வெளியில்வராமலிருக்கும்படி அவ்வீட்டைச் சுற்றிலும் ஓர் மதில் எழுப்பப்பட்டது. இங்ஙனம் நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கப்பட்ட வெங்காஸாமி, சமயம் பார்த்துக்கொண்டிருந்து ஒரு நாள் இராத்திரி தன் உடன் மாணாக்கர்களும், உபாத்தியாயர்களும் அயர்ந்து படுத்துத் தூங்கும்பொழுது அவ்வீட்டினின்றும் வெளியில்வந்து மதிலேறிக் குதித்து ஓடிப்போய்விட்டான். மறுநாள் காலையில் வெங்காஸாமி ஓடிப்போன சங்கதியை அரசன்கேட்டு அதிக மனக்கவலையுற்று ஒருமகள் விதந்துவானாள், மற்றய மகளின் புருஷன் ஓடிப்போனான். இவ்விதம்தானா என்விதி யென்று துக்கித்து தன் இளைய மகளைக் கூப்பிட்டு, கௌரி, வரலட்சுமி முதலிய நோன்புகளை இடைவிடாது செய்துகொண்டி

ருக்கும்படி திட்டப்படுத்தினன். அவளும் அங்ஙனமே செய்துகொண்டுவந்தாள்.

(இன்னும் வரும்.)

R. கோனேட்டி அய்யர்.

ஒரு பெரிய மனுஷ்யன் ஒரு நாள் தன்னுடைய வண்டி குதிரைகள் நிற்குமிடத்திற்குப்போய் அங்கு தனது வண்டிக்காரனுடைய மகன் ஒரு சிறு பையனிருப்பதைக்கண்டு அவனிடம் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு கடைசியில் அந்தப் பையனை நோக்கி "நல்லது, பையா! நான் இன்னாரென்று உனக்குத் தெரியுமா" என்று கேட்டான். உடனே அந்தப்பையன் "எனக்கு நன்றாய்த் தெரியும். என் தகப்பனார் வண்டியில் தினம் ஏறிப்போகிறவரல்லவா நீர்" என்றான்.

**ராமன்.**—அடே சப்பு! கிருஷ்ணன் மிகவும் புத்திசாலி. எந்தகாரியத்தையும் நன்றாக யோசித்துத்தான் செய்வன். வெகுதூரம் முன்னாடி வரும் விஷயங்களை நன்றாகக் கவனித்துப் பார்ப்பவன்.

**கிருஷ்ணன்.**—ஆம் ஆம் அது மெய். நான் அவனிடம் 5 ரூபாய் கடன் வாங்கியது முதற்கொண்டு நான் அரை மயிலுக்கு அப்பால் வரும்பொழுதே அவன் என்னைக் கவனித்துப் பார்த்து விடுகிறான்.

ஒரு ஹோடலில் ஒருநாள் ஒரு பெரிய மனுஷன் வந்து இறங்கினன். அவனுடைய ஸாமான்களில் புது மாதிரியாக ஒரு ஸாமான் இருந்தது. அதைப்பார்த்ததும் ஹோடல்காரன் அது என்னது என்று கேட்டான்.

**பெரிய மனுஷன்.**—"அது ஒரு புது யந்திரம். வீடுகளில் நெருப்புப்பிடித்தால் அச்சமயத்தில் ஜன்னல்கள் வழியாய் இந்த யந்திரத்தின் உதவியால் கொஞ்சமேனும் அபாயமின்றி இறங்கிப் போய்விடலாம்."

**ஹோடல்காரன்.**—அப்படியானால் இந்த யந்திரத்துடன் வருகிறவர்கள் ஹோடல் வாடகையை முன்னதாகவே கொடுத்துவிட வேணுமென்று என்னுடைய ஏற்பாடு.

**வியாதிக்காரன்.**—வைத்தியன் என்னை இரண்டு நாளில் நடக்கும்படியாக செய்கிறேன் என்றான்.

**சிநேகிதன்.**—ஏன் அவன் அந்த மாதிரி செய்யவில்லையா?

**வியாதிக்காரன்.**—அப்படியே செய்தான். இரண்டு நாளைக்கெல்லாம் அவன் அனுப்பிய பில்லுக்கு நான் என்னுடைய ஸைக்கிளை விற்றுத்தான் பணம் கொடுக்கவேண்டியாச்சுது. ஸைக்கிள் போய்விட்டதால் இப்பொழுது நடக்கும்படியாகவே ஆயிற்று.